
# பூரணி

# integral

**4**

படைப்பிலக்கிய ஏடு - காலாண்டு



**மு. த. வின் கடைசிக் கட்டுரை**

✲

**சொல்சனிற்சினின் நோபல் பரிசுப் பேச்சு**

✲

**டட்லி சீயர்ஸின் இலங்கைத் தூதின் படிப்பினைகள்**

சித்திரை - ஆனி 1973.

75 சதம்

தமிழக சித்த மருத்துவக் கண்காட்சி மதுரையில் 17, 18-4-71ல் நடைபெற்ற பொழுது நாங்கள் இவ்விடமிருந்து அனுப்பிய மருந்துகளைப் பரிசோதித்து சிறந்த முறையில் தயாரிக்கப்பெற்ற மருந்துகள் எனப் பாராட்டி "மருத்துவ மன்னன்" எனும் அணிமுறைப்பட்டமும் கிடைக்கப்பெற்றவர்.

## சித்தர் கேசரி தைலம்

ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட கேசரி, பச்சை மூலிகைகளால் பக்குவமாய் தயாரிக்கப்பட்டு பீனிசம், தலைவலி கண்மங்கல், காது நோய்களை நீக்கி, மூளைக்குக் குளிர்ச்சியையும் இளநரை மயிர் அகற்றி, கருமை உண்டாக்கி அடர்ந்து, நீண்ட கூந்தலையும் வளர்க்கும் சித்தர் கேசரி.

சரும நோய் உள்ளவர்கள் எண்ணை ஸ்நானமாக உபயோகித்தால் குணம் காணலாம்.

**புட்டி ரூ. 3-75 பெரியது ரூ. 7-00**

# முருகானந்தா வைத்தியசாலை

**104, செட்டியார் தெரு — கொழும்பு-11.**

குடும்பத்தலைவியர்களே !

உங்கள் உணவில் உங்கள் குடும்பத்தாருக்கு
திருப்தியில்லையா ?

ஸ்ரீ அம்பாள் கபே உணவின் தனிப்பெரும் சுவையே
அதன் காரணம் !

உங்கள் திருப்தி — எங்கள் விருப்பம்.

★

# ஸ்ரீ அம்பாள் கபே

**487, மருதானை, கொழும்பு — 10.**

தொலைபேசி : **92322.**

With the Best Compliments

of

# COLOMBO AGENCIES LIMITED

SOLE DISTRIBUTORS FOR:

A. P. Rowlands Industries Ltd.
Associated Capasco (Ceylon) Ltd.
Associated Rubber Industries Ltd.
Colombo Industrial Agencies Ltd.
Deejay Industries Ltd.
Derco Laboratories Ltd.
Dia Vacuum Bottle Company
New Bentota Products
Sunray Foods Limited

Excelsior Watchmans Clocks
Capasco 'Don' Brake Liners
Asmot Rubber Products
Cial Fountain Pens
Ford Suitcases
Glite writing Ink
Duro Flasks
Jams, Chutneys.
Jams, Cordials & Sauces

**7, C. W. W. Kannangara Mawatha,**
**COLOMBO - 7.**

Telephone: **96671 - 74**
Telegrams: **'COLAG'**

***Branches:*** **148, Main Street, JAFFNA.**
**33, Broadway Road, MATARA.**

*With the Best Compliments*

*of*

# KAMALA STORES

IMPORTERS, EXPORTERS

&

MANUFACTURING REPRESENTATIVES.

**17, SANGAMITTA MAWATHA,**

**COLOMBO-13.**

**Phone : 26522.**

# பூரணி

**சித்திரை — ஆனி 1973**

✷

இணை ஆசிரியர்:

என். கே. மகாலிங்கம்
க. சட்டநாதன்

✷

பூரணியினர்:

மு. நேமிநாதன்
த. தங்கவேல்
இமையவன்
இரா. சிவச்சந்திரன்
கே. எஸ். பாலச்சந்திரன்
சு. மகாலிங்கம்

✷


பூரண நிறைவை ஏற்படுத்தும் முகமாகப் பூரணியின் கருத்துக்களுக்கு மாறுபட்டவைகளும் இவ்விதழில் இடம் பெறக்கூடும்.

✷

பூரணியுடன் நடாத்தும் சகலவித தொடர்புகள், சந்தா, கதை, கவிதை, கட்டுரை என்பன கீழுள்ள முகவரிக்கே அனுப்பப்படல் வேண்டும்.

✷


முகவரி:

**‘ பூரணி ’**
35, சப்பாத்து வீதி,
கொழும்பு - 13.

✷

சந்தா விபரம்:

ஆண்டுச்சந்தா:

| | | |
|---|---|---|
| (தபாற்செலவு உட்பட) | ரூபா | 3-50 |
| ஆண்டுச்சந்தா | | 3-00 |
| தனிப்பிரதி | சதம் | 75 |


காலத்துக்குக் காலம் தோன்றும் மேதைகள், யுக சிந்தனை அலைகளுக்கு புதிய இரத்தம் பாய்ச்சுகின்றனர்; அதைப் பரிணும ரீதியில் வளர்த்துக்காட்டுகின்றனர்; அவற்றுக்குப் புதியபார்வையில் புதிய வியாக்கியானங்களைக் கொடுக்கின்றனர்.

இவர்களின் வரவும் ஏற்கனவே இருந்த சிந்தனை மாற்றம் - வெளிப்பாடு ஆகியவையும் வசதியாகச் சங்கம மாகின்றன.

மு. தளையசிங்கத்தின் முக்கியத்துவம், பரிணமிப்பு, தேவை இனிமேல் வெளிச்சமாகும்.

அழகு சுப்பிரமணியம் - கிழக்கிலே பிறந்து மேற்கில் வளர்ந்து கிழக்கின் கலாச்சாரத்திலே காலூன்றியவர்.

இவர்களின் மறைவு தவிர்க்க முடியாதது என்ற மனப்பலத்துடன் அமைதி கொள்வோம்.

கதை, கவிதைகளின் காணப்படும் பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே! கட்டுரைகளின் கருத்திற்கு அவற்றை ஆக்கியோரே பொறுப்பாளியாவர்.



# மு. த. வின் மறைவிற்கு அஞ்சலி

திரு. மு. த. வின் மறைவால் புங்குடுதீவு மக்கள் உறவினர் என்பதற்காக அழலாம். மாணவர்கள் ஆசிரியர் என்பதற்காக அழலாம். ஆனால் நாங்களோ ஈழத்திற்குமட்டுமல்ல உலகத்துக்கே வழிகாட்டக்கூடிய சிந்தனைப்பலம் கொண்டவனை இழந்துவிட்டோம் என்பதற்காகக் கலங்குகிறோம்.

டொமினிக் ஜீவா

மறைந்த மாபெரும் எழுத்தாளர் மு. த. வுக்கு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தன் அஞ்சலியைச் செலுத்துகிறது.

பிரேம்ஜி

பல்கலைக்கழகத்தில் கூடப் பயின்ற தளையசிங்கத்தையும் கடந்த ஆண்டு நான் கண்ட தளையசிங்கத்தையும் எண்ணிப்பார்க்கிறேன் பெருமூச்சு வருகிறது. எண்ணத்தில் வளர்ச்சி, பார்வையில் விரிவு, உடலில் மெலிவு, வசதியில் மாற்றம், எதிர்பாராத சோகமுடிவு. என் உடன் பிறந்த சகோதரனை இழந்தவன் போன்றே நான் கலங்குகிறேன்

சி. தில்லைநாதன்

சர்வோதய சோஷலிஸத்திற்காகப் பாடுபட்ட உத்தமன் தன் கடைசிக்காலத்தில் தான் கடமையாற்றிய பாடசாலையில் அதிபர் பதவி கிடைத்தபோதும் அதை ஏற்றுக்கொள்ளாது சாதாரண ஆசிரியராகவே இருந்த சேவையாளன்

வழக்கறிஞர்- ப. கதிரவேலு

சிறந்த சிந்தனையாளன், புதிய கருத்துக்களைத் தன் படைப்புகள் மூலம் சமுதாயத்தின் முன்வைத்துச் செயற்பட்டவன், நினைத்தால் உண்மையிலேயே வருத்தமாகத்தான் இருக்கிறது

லெ. முருகபூபதி

அரைத்த மாவை அரைக்கும் அர்த்தமற்ற போக்கு அறியாதவன். ''நீககிரோக்கள் சேரிகள் இருக்கும்வரை சந்திரயாத்திரை பழைய காசியாத்திரையாகத்தான் இருக்கும்'' என்று எழுதிய மு. த. என் நெஞ்சை விட்டு அகலான்.

வித்துவான் க. ந. வேலன்

ஈழம் ஓர் இலக்கிய புருஷனை இழந்துவிட்டது. நாம் ஒரு நல்ல வழிகாட்டியை இழந்து விட்டோம்.

தெணியான்

புங்குடுதீவு பெற்றெடுத்த தவப்புதல்வனை இன்று இழந்து விட்டோம்.

செ. தில்லைநாதன் ஜே. பி.

என்ன நடந்தது எனக்கேட்டு எழுதுவதா? ஏன் இவ்விதம் நடக்கிறது என்ற கேள்வியையே எழுதுவதா? புறஞானிகள் பலரைப் பார்க்கலாம். ஆனால் நண்பன் ஓர் அகஞானி; அன்பன், தொண்டன். இனிக்காண்பது எப்போ?

நாக. பத்மநாதன்

எதிலும் தன்னைத் திணிக் விரும்பாதவன், ''நம்மை விரும்பாதவரிடம் நாமாகவே சென்று முதலில் கதைத்து அன்பைக் காட்ட வேண்டும்'', என்ற உண்மையான ஆத்மீகவாதி. இளைஞர்பலரை இந்தச் சர்வோதய லட்சியத்திலே ஆற்றுப் படுத்தியவன்.

ஈழத்துச் சிவானந்தன்

தனது இலட்சியத்திலிருந்து சிறிதளவும் மாருதவன், ஓர் உண்மையான சர்வோதயவாதி.

பூராசு

தாழ்த்தப்பட்ட மங்களின் தண்ணீர்ப் பிரச்சனையின்போது தன்னைத் தாக்கிய எதிரிகளிடமும் அன்பு செலுத்துமாறு இளைஞரை வேண்டிக் கொண்டவன்.

செ. வயிரவநாதன்

குருவினுல் தீட்சை கொடுக்கப்பட்ட திரு. மு. தளையசிங்கத்தின் ஆச்சிரமப் பெயர் விநாயதாஸ் ஆகும். விநாயகதாஸ் என்ற பேருக்கேற்ப அறிவுச்சுடர் பரப்பியவர். தனியொருவனின் முக்தியை விரும்பாது சமூகம் முழுவதுமே முக்தியடைய வேண்டும் என்று விரும்பிய ஆத்மீகவாதி. அவரது மறைவு சாதாரணமானதல்ல. இனிமேல்தான் அவரது கொள்கைகள் பரவப்போகின்றன.

தா. இராமலிங்கம்

தளையசிங்கம் ஒரு எழுத்தாளராக மட்டுமல்லாது ஓர் இயக்கமாகவும் இருந்து செயற்பட்டவராவர். தான் சரியென்று ஏற்றுக்கொண்ட ஓர் கோட்பாட்டிற்காக தன் வாழ்நாள் முழுவதும் போராடிய வீரர்.

மாத்தளை வடிவேலன்

---

# உங்கள் பக்கம்

பூரணி 3 இல், குறிப்பிடப்பட்ட 'ஆசியத்தன்மை' பற்றி மேலும் அறிந்து கொள்ள, குணர் மிர்தோல் எழுதிய ''ஏஸியன் ட்ராமா'' என்ற நூலைப் படிக்கவும்.

'மூது புத்து' நாடகத்தை எழுதியவர் குணசேன கலபதி; தம்ம ஜாசொட அல்லர். கலபதி எழுதியது மூலநாடகமல்ல; ஸ்பானிய நாடகாசிரியர் லோர்கா எழுதியதன் தழுவல். ஜாகொட கலபதியின் நாடகத்தை நெறிப்படுத்தினர். இதுவும் ஒரு தகவல்.

கே. எஸ். சிவகுமாரன்.
கொழும்பு-6.

'பூரணி' மலைநாட்டு எழுத்தாளர்களுக்கு நல்ல களம் அமைத்துக் கொடுக்க முன்வந்ததையிட்டு நாங்கள் பெருமைப்படுகின்ருேம்; பூரணிக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளோம்! அதே நேரத்தில் மலையகச் சூழலைச் சித்தரிக்கும் கதைகள் என்ற வகையில் அவற்றின் தரத்தை நிர்ணயிக்கும் கடமையும் எங்களுக்குண்டு.

'பூரணி' மூன்றில் வெளிவந்த நூரளை சண்முகநாதனின் 'கவ்வாத்து' கதையை ஆர்வத்தோடு வாசித்த எங்களுக்கு 'ரசனை' என்று பார்க்கும்போது அதில் ஏதும் உண்டா என்ற சந்தேகம் எழுந்தது. 'பகுப்பு தொகுப்பு' முறையில் அணுகும் போது நிறையவுண்டு – நம்பமுடியாதவைகள்!

தற்செயல் விளைவுகளில் – விபத்துக்களில் சில கணப்பொழுதுகளுக்கு முன் உயிருடன் இருந்தவர்கள் பிணமாகிவிடுவது உண்டு. அம்மாசியின் தொடை தொங்க விழுந்த வெட்டால் அளவுக்கதிக இரத்தம் வெளியேறியதால் இறந்ததை நம்புகின்ருேம். ஆனுல், ஓங்கி விழுந்தவெட்டு நேரே தொடையைப் பதம் பார்த்து விட்டது என்பதைத்தான் நம்பமுடியவில்லை. இது விடயம் பற்றி கவ்வாத்து வெட்டும் தொழிலாளர் பலரிடம் விசாரித்ததில் யாருமே இதை நம்ப முன்வரவில்லை; எங்களாலும் நம்ப முடியவில்லை. கவ்வாத்துக் கத்தி வாதில் பட்டு 'எதிர்த்து' வந்து தொடையில் பட்டு பதம் பார்த்திருக்கலாம். அல்லது கை வியர்வையாலோ ஈரத்தாலோ கத்தி வழுக்கி வந்ததால் தொடையில் வெட்டு விழுந்திருக்கலாமேயன்றி ஆசிரியர்

குறிப்பிட்டவாறு நேரே தொடைக்கு வர ஏதுவில்லை. அடிக்கட்டைக்கு குறி வைத்த கத்தி தொடைக்கு வர வேண்டுமென்றால் அம்மாசி முழந் தாளிட்டு வெட்டி இருக்கவேண்டும். அடிக்கட்டை எனும்போது நேரே (என்று வைத்துக் கொண்டாலும்) வந்த கத்தி கணுக்காலில் விழுவது தான் நியாயம். அடிக்கட்டையா னது தொடை உயரத்தில் இருக் காது; அம்மாசியின் தொடையில் வெட்டு விழும் வகையில் அம்மாசி குள்ளன் என்று நம்புவதற்கும் ஆசிரி யர் இடம் தரவில்லை. சராசரி உயர முள்ள மனிதனின் தொடையில் வெட்டு விழுவதில்லையாவென்றால்,— உண்டு. கவ்வாத்து வெட்டும் மலை 'வரைக்கட்டாக' (ஏற்றமானதாக) இருந்திருக்க வேண்டும். அல்லது அம மாசி கானில் இருந்து கானுக்கு மேலுள்ள அல்லது நிலத்தில் இருந்து ஏதோ வகையில் உயரத்தில் உள்ள தேயிலைச் செடியை ஒரு காலைத்தூக்கி வைத்து வெட்டி இருக்கவேண்டும். அப்போதே கத்தி தொடையில் (தொடைகளில் அல்ல) விழுந்திருக்க நியாயம் உண்டு.

எப்படியோ வெட்டு விழுந்தது என்றாலும், எப்படி என்று குறிப்பிட வேண்டியது சிறுகதை ஆசிரியரின் கடமையல்லவா? இந்த விபரங்க ளுக்கு சிறுகதையில் இடமில்லையென் றேதும் ஆசிரியர் கருதினால் அது எப் படிச் சரியாகும்?

'கங்காணியின் அதட்டலுக்குப் பயந்து பெயருக்கு கத்தி செடிகளில் பாய்ந்துக் கொண்டிருந்தது ...... ......! என்று எழுதிவிட்டு, அடுத்த 'பரா' வில் பலமெல்லாம் கூட்டி கத்தியை ஓங்கி அந்த தேயிலைச் செடியின் அடிக்கட்டையை குறிவைக்கிறான் அம் மாசி......! என்பதற்கும் என்ன தொடர்பு? கைகளெல்லாம் சோர்ந்து தளர்ந்த நிலையில் (குறிப்பிட்ட இரண்டு பந்திகளுக்கும் முதல் பந்தி) பெயருக்கு செடிகளில் கத்தியைப் பாய்ச்சிக் கொண்டிருந்த அம்மாசி பலமெல்லாம் கூட்டி கத்தியை வீசக் காரணம் என்ன? விபத்து என்ப தால் காரணம் வேண்டாமோ......?

கவ்வாத்துக் கத்தி தப்பித் தவறி எசகு பிசகாகி பட்டுவிட்டால் ஆள் இரண்டு துண்டாக மாட்டான். கை அல்லது கால்தான் இரண்டு துண்டா கும்!

பிரட்டுக்குப் போனதும் கணக் கப்பிள்ளை பேர் போட்டு விடுகிறு ராமே—உண்மையா? எந்தத் தோட் டத்தில் அப்படி நடக்கிறது? அப் படியென்றால் மாலைவரை வேலை செய்வதாக 'பெயர் பண்ணலாமே'. ஏன் உடம்பெல்லாம் புண்ணாக வலிக்க வேலை செய்யவேண்டும்?

தோட்டத்துரை 'மூணு' மணிக்கு வருகிறார் என்பதற்குப் பயந்து கவ் வாத்து மலையை முடித்துவிட வேண்டு மென்றில்லை. கவ்வாத்து, கானுவெட்டு புல்லுவெட்டு போன்ற, வேலைகளுக்கு கணக்கு' கொடுக்கப்படுவதுதான் வழக்கம். கணக்கை முடித்ததும் ஒவ்வொருவரும் வீட்டுக்குப் போக லாம். கொடுத்த கணக்கை முடிக்க வேண்டுமென்ற கட்டுப்பாடு உண்டே தவிர துரை வருவதற்கு முன் முடிக்க வேண்டுமென்று கூற முடியாது. கவ் வாத்து வெட்டுக்காரர்கள் இரண்டு மணிக்கு கணக்கை முடித்துவிட்டு, மூன்று மணிக்கு துரை வரும் வரை யில் காத்திருக்க மாட்டார்கள். கங் காணிமார்கள் நேரத்தோடு வீட்டுக் குப் போகவேண்டுமென்றோ கணக்கை நேரத்தோடு முடிக்கலாம் என் பதற்கோ துரிதப்படுத்துவார்களே தவிர துரை வருகிறார் என்பதற்கா கத் துரிதப்படுத்த மாட்டார்கள். கங்காணி அவசரப்படுத்தியிருக்க வேண்டியது கூட தேவையில்லை என் பதற்கு நிரூபணமும் கதையிலேயே உண்டு. கங்காணியும் சிலரும் அம் மாசியை லொறியில் ஏற்றிக்கொண்டு போன பின்னர்கூட கவ்வாத்து வெட்டு மலை முடிவடைந்துவிட்டது என்பதை 'தூரத்தே 'பழைய மலை' கவ்வாத்து வெட்டி 'பட்ட மலையாய் சூனியமுற்றுக் கிடக்கின்றது..., என் னும் வரிகள் காட்டுகின்றன.

'அம்மாடி என்னா வெயிலு அடிக் குது' என்று அங்கலாய்த்து வியர் வையைத் துடைத்துக் கொள்கிறான் அம்மாசி. அம்மாசி வெட்டுண்டு தூக்கிச் செல்லும் போது ஒருவர் கூறுகிறார். 'கவனமா பாத்துப்பா .. மழைக்கிபாத எல்லாம்பேய் வழுக்கு வழுக்குது...' என்று முந்திய வெயிலுக் கும் பிந்திய மழைக்கும் என்ன தொடர்பு? இந்த மழை நேற்று அல் லது அதற்கும் முதல்நாள் பெய்ததா?

'இன்னும் உணர்வு வராத அம் மாசியை' வார்ட்டுக்குக் கொண்டு போவதற்கும், பின்னர் டாக்டர் வார்ட்டுக்குப் போய் பரிசோதிப்ப தற்கும், இடைப்பட்ட நேரத்தில் தான் அம்மாசி இறந்திருக்கவேண்டும். அப்படி என்றால் ஆஸ்பத்திரியில்தான் இறந்தான். எனவே சட்டப்படி, ஒரு நோயாளியை அனுமதித்து இருபத்துநாலுமணி நேரத்துக்குள் இறந்துவிட்டானென்றால், டாக்டர் மரணவிசாரணை அதிகாரிக்கும், போலி சுக்கும் தெரியப்படுத்தியிருப்பாரே தவிர பிணத்தை திருப்பிக் கொண்டு போக அனுமதித்திருக்கமாட்டார். அப்படி தெரியப்படுத்தி இருந்தால் பெரிய 'அக்கப் போர்' பட்டுத்தான் பிணத்தை பிணத்துக்குரியவர்கள் எடுக்கவேண்டும். சரி, டாக்டரின் கரு ணையால் தான் பிணத்தைத் தந்து விட்டாரென்றே வைத்துக் கொண் டால், அதை சொல்லக்கூடாதா ஓரிரண்டு வரிகளுக்குள்!

நூரளை சண்முகநாதன் 'யாழ்ப் பாணத்தார் பேச்சு வழக்கை' கெட் டிக்காரத்தனமாக கையாள்பவர் என் பதை நாங்கள் அறிவோம். ஆனால் 'கவ்வாத்து' வில் பாத்திரங்கள் ஏனோ மூச்சையடைத்துக் கொண்டு பேசுவ தாகத் தெரிகின்றது. 'பாவோ பாத்து', 'நேரோ செண்டு', 'இன் னும் கொஞ்சோ நேரோ', "நாலஞ்சி செடிக்கி அங்கிட்டு இருக்கு" என்பன சில உதாரணங்களாகும். இப்படி பேசுவதே இல்லையென்றல்ல'. ஆனால் மலையகம் தவிர்ந்த மற்ற பிரதேசத் தார் 'அடிக்குறிப்பு' எதிர்பார்க்கும் வகையில் பேச்சு வழக்கை கையாளத் தான் வேண்டுமா? இப்பாத்திரங்க ளின் பேச்சு வழக்கிலிருந்து ஓரளவுக் குப் படித்தவர்கள் என்றுகூட எண்ண முடியாத போது 'அம்மாசியை லீட் பண்ண முடியாது!', 'டொனிக்கு', 'டிராம்', டயிம் போன்ற ஆங்கிலப் பதங்களை சரியாக உச்சரிப்பதாக எப்படி நம்புவது? பொதுவாக 'லீட்' பண்ண முடியாது என்பதை 'மீட்' பண்ண (லீட் Lead) என்பது தான் சரியான பொருளைத் தருமென்

ருலும்)முடியாது என்றும்; டொனிக்கு டானிக்கு என்றும்; டிராம் — ராம் அல்லது டிரம் என்றும்; டயிம் - டயம் என்றேதான் குறிப்பிடுவார்கள். சரியான உச்சரிப்புகளுடன் அல்ல.

சரி. நூரளை நண்பர் சண்முகநாதன் மலையகச் சூழலைக் கொண்டு சிறுகதையொன்றை எழுதியிருக்கிறார். அதையும் 'பூரணி' பிரசுரித்துள்ளது என்ற பெருமையோடு முடித்துக் கொள்வோம்.

மலையக எழுத்தாளர்களுக்கு வாய்ப்பளிக்கவேண்டுமென்பதற்காக 'பூரணி' தன் கனத்தைக் குறைத்துக் கொள்ளாது என்று நம்பலாமா..?

வீ. சங்கரலிங்கம்
கு. சிவலமுத்து
மடுல்கெல.

எனது 'கவ்வாத்து' சிறுகதையினைப்பற்றி இரு மலையக நண்பர்களின் நீண்ட கடிதம் பூரணியினர் மூலம் என் பார்வைக்குக் கிட்டியது. அதைப்பற்றிச் சில அபிப்பிராயங்கள் கூறுவதற்காக இதை எழுத விழைகின்றேன்.

''நூரளை சண்முகநாதன் யாழ்ப்பாணத்துப் பேச்சு வழக்கைக் கெட்டித் தனமாகக் கையாள்பவர் என்பதனை நாங்கள் அறிவோம்'', என அவர்கள்கூறியிருக்கிறார்கள். இதிருந்து அவர்கள் ஈழத்து இலக்கிய உலகை' மலையக இலக்கிய உலகை, அவ்விலக்கிய சிருஷ்டிகர்த்தாக்களைப் பற்றி எவ்வளவு தூரம் அறிந்தவர்கள் — அறிந்திருக்கிறார்ள் என்பதனை நிதானிக்க முடிகிறது.

ஒரு சமூகத்துப் பிரச்சனையொன்று ஒரு சிருஷ்டியாக உருவாகும்போது, அந்தச் சமூகத்துப் பிரச்சனை அச்சமூகத்து மக்களின் பேச்சு நடையில் எழுதுகிற போது தான் அப்படைப்பு — அம்மக்களின் உணர்வை — உண்மையாகப் பிரதி பலிக்க முடியும் என நினைப்பவன் நான், தென்னக ஜெயகாந்தன், ஜானகி ராமன், உள்ளிட்டு நம் மலையக தெளிவத்தை ஜோசெப் ஈருக அவர்கள் படைப்புகள் இன்று இலக்கிய உலகில் தாமானதொன்ருக மதிக்கப்படுவதற்கு — இந்த பேச்சு நடையும் ஒரு முக்கிய காரணி என்பதனை யாரும் மறுக்க முடியாது. இதை விடுத்து நண்பர்கள் எழுதியிருப்பது போல், 'மலையகம் தவிர்ந்த மற்ற பிரதேசத்தார் அடிக் குறிப்பு எதிர் பார்க்கும் வகையில் பேச்சு வழக்கை கையாளத் தான் வேண்டுமா', என்றிருந்தால் இன்று — எந்த ஓர் இலக்கியப் படைப்போ — படைப்பாளியோ — நல்ல படைப்போ உருவாகியிருக்க முடியாது.

ஒரு சிறு கதை — ஒரு நிகழ்ச்சியினைச் சுருக்கமாக, ஆனல் தெளிவாகக் கூறுவதற்காக எழுந்த ஓர் பிரிவு. ஆனல், ஒரு சிறுகதையே நாவலாக, குறுநாவலாகக் கூட எழுதக் கூடிய — நிகழ்ச்சி சாராம்சத்தைக் கொண்டிருக்கலாம், குறைந்த வார்த்தைப் பிரயோகம்தான் இன்றைய படைப்புகளின் சிறப்பு என்று கூடக் கொள்ளலாம்.

அம்மாசியின் தொடை கவ்வாத்தின் போது வெட்டுண்டு துண்டாகியது.

என்று எழுதப்படுவதை ஓர் அரைப் பக்கம் நீட்டி — வரக்கட்டி விருந்து கொண்டு, முழந்தாளிட்டுக் கொண்டு, காலைத் தூக்கி வைத்துக் கொண்டு கைவியர்வையால், ஈரக்க சிவால் என்றெல்லாம் நீட்டுவதால் என்ன பயன் — எப்படிச் சொன்னலும் முன் சொன்ன சிறு விசயம் தானே அதற்கேன் நாடக, சினிமாப் பாணி அரைப்பக்க நீட்டி முழக்கலெல்லாம். இதெல்லாம் ஒரு சிறு கதைக்கு அல்ல ஒரு நாவலுக்குத் தேவைப்படலாம் இதைப்பற்றி இவ்வளவு தூரம் நண்பர்கள் அலட்டிக் கொண்டிருக்கத் தேவையில்லை.

எல்லாத் தோட்டங்களிலும் ஒரே சட்டதிட்டங்கள், நீதி நியாயங்கள் எதிர்பார்க்க முடியாதவைகள். இடத்துக்கிடம் மாறுபடலாம், வேறுபடலாம் இதைப்பற்றி இவ்வளவு தூரம் நண்பர்கள் அலட்டிக் கொண்டிருக்கத் தேவையில்லைத் தான்.

அதே போலப் படிக்காதவர்கள் சில ஆங்கிலப் பதங்களை (லீட் டொனிக் போன்றபதங்கள்) சரியாக உச்சரிக்க முடியாது என்பது அவர்கள் வாதம். இன்று படித்தவர்களைக் காட்டிலும் - நகர்புற பழக்க வழக்கத்தால் - படித்தவர்கள்கூட தரமான ஆங்கில உச்சரிப்பை உச்சரிப்பதும் ஆச்சரியமானதொன்றல்ல.

எனினும் கதையின் சில சம்பவங்கள் பிழையானவை என்பதனையும் நான் மறுக்கவில்லை. இந்தத் தவறுகளை சுட்டிக்காட்டிய நண்பர்களுக்கு என் நன்றிகள்,

முடிவாக ஒரு விசயம், நான் மலையகத்தையே பிறப்பிடமாகக் கொண்டவன். அந்த மலையக மக்களின் வாழ்வோடு நெருங்கிப் பழகி, அவர்களின் பிரச்சனைகளையெல்லாம் அறிந்தவன், அந்த அவல வாழ்வை என்னல் முடிந்த மட்டும் சிருஷ்டி எழுத்தாகப் படைப்பவன், இதை விடுத்து நண்பர்கள் நினைக்குமாப்போலக் 'கருப்' பொருளுக்காக மலையகத்தை தேடி அலைபவனல்ல என்பதையும் உணர்ச்சியுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தக் கதைக்கு இத்தகையதோர் நீண்ட கடிதம் எழுதி அதன் மூலம் என் கவ்வாத்துக்கு கௌரவத்தை ஏற்படுத்திய நண்பர்களுக்கு எனது இதயம் கனிந்த நன்றிகள்.

அவர்கள் சுட்டிக் காட்டிய தவறுகளை நிறைவுடன் ஏற்கின்றேன். இவைதான் என் பிற்கால சிருஷ்டி இலக்கிய-கவ்வாத்திற்கு- கவ்வாத்துக் கத்தி என்பதனையும் பெருமையுடன் ஏற்கிறேன்.

கதைக்குக் களம் அமைத்துக் கதையினை 'கவ்வாத்தாக்கி' அந்தச் கவ்வாத்திற்கு எதிர்வாதங்கள் எழுப்ப வைத்து என்னை என் எழுத்தை கௌரவப்படுத்திய 'பூரணியை' நன்றியுடன் நினைவு கூருகிறேன்.

மலையக இலக்கிய வானின் தரமான பிரச்சனைகளை ஏற்படுத்தக் கூடிய படைப்புகளால் பூரணி நிறையட்டும், அந்த எழுத்துக்கள் மலையக இலக்கிய வளர்ச்சிக்கு வார்க்கப்படும் நீராக அமையட்டும்.

நூரளை சண்முகநாதன்
நுவரெலியா.

✳

# அலக்சாண்டர் சொல்சனிற்சினின் நோபல் பரிசுப் பேச்சு

தமிழ் — இ. இரத்தினம்

நோபல் சொற்பொழிவுவழக்கமாக ஆற்றப்படும் இந்த மேடையில் நான் இன்று ஏறி நிற்கின்றேன். எல்லா எழுத்தாளர்க்கும் இம்மேடை கிடைக்கக் கூடிய ஒன்றன்று. வாழ்வில் ஒரு முறைதான் இவ் வாய்ப்புக் கிட்டும். இம்மேடையோ கம்பளம் விரித்த ஐந்தாறு படி தாண்டி வரக்கூடிய ஒன்றன்று. ஏறுதற்கு இடம் விடா வழுக்கலே உறைந்த படிகளைத் தாண்டி நான் இங்கு வந்துள்ளேன். நான் தப்பிப் பிழைக்கவேண்டுமென்று ஊழ் வகுத்து வைத்த இருளும் பனியும் நிறைந்த படிகளை நான் தாண்டி இங்கு வந்துள்ளேன். அந்தப்பாழிடத்தில் தான் நான் வாழ வேண்டுமென்றும், என்னினும் உயர்ந்தோர் சிறந்தோர் மாளவேண்டுமென்றும்ஊழ்விதிவகுத்திருந்தது. இறந்தோருள் மிகச் சிலரையே 'குலாக்' தீவுக் கூட்டத்தில் நான் சந்தித்தேன். அவநம்பிக்கை, கண்காணிப்பு என்னும் கொடுவாள்களுக்கிடையில் எல்லோருடனும் நான் சுதந்திரமாகப் பேசமுடியவில்லை. சிலரை நான் கேள்வி அளவிலேயே அறிவேன். சிலரை நான் ஊகத்தால் மட்டும் அறிந்தேன். ஏலவே இலக்கியப் புகழ்பெற்ற சிலர் அந்தப் பாழில் அமிழ்ந்திய பின்னரும் உலகோரால் அறியப்பட்டவர்களாய் விளங்கினர். ஆயினும் சிறிதளவும் வெளியிற் புகழ் பரவாது இறந்தவர் எத்தனை! அத்தகையோருள் திரும்பிவந்தோர் மிகமிக அரியர். அந்தப் பாலையிலே, பெரிய ஒரு தேசிய இலக்கியம் மாய்ந்து மடிந்தது. பிரேதப் பெட்டி ஒன்றில்லாமலேயே அடக்கம் பண்ணப்பட்டது. கௌபீனத்துண்டுமின்றி நக்கனமாகவே புதைக்கப்பட்டுவிட்டது. பெருவிரலில் மட்டும் ஒரு பெயர்ச்சுட்டி கட்டப்பட்டிருந்தது. அங்கே இரசிய இலக்கியம் ஓடியா ஊற்றாகப் பாய்ந்தோடியது. ஆயின் வெளியுலகிற்கு அது பாலைவனம் போல் இருண்டு கிடந்தது. இங்கு மதர்த்த ஒரு வளக்காடு வளர்ந்திருக்கலாம். ஆனால் வரையளவின்றி மரங்களை வெட்டிய பின்னர், தற்செயலாய் தப்பிய இரண்டொரு தருக்களையே நாம் அங்கு காணலாம். இன்று என் நிலை என்ன? பட்டு விழுந்தார் ஆவிகள் என்னைச் சூழ்ந்து நிற்கின்றன. என்னிலும் மேலான முறையில் இந்தப் பெருமைக்குத் தகுதியுடையார், இந்த மேடையில் ஏறுவார்கள் என்று எண்ணி நான் தலைகுனிந்து வணங்குகின்றேன். அவர்கள் இங்கு என்ன சொல்லியிருப்பார்கள் என்பதை நான் எவ்வாறு ஊகித்துச் சொல்ல முடியும்!

எஞ்சி நிற்கும் எமக்கு இந்தக் கடமை பெரும் பொறுப்பாயுள்ளது. இதை நாம் நெடுங்காலமாக அறிந்துள்ளோம். ''விலடிமீர் சொலவியோவ்'' அவர்கள் கூறியவாறு:

''இறைவர் விதித்த இப்பெரும் பணியை சிறையில் இருந்தாயினும் முடிப்பம் நிறைவாய் எங்கள் பாசறை வாழ்வின் துன்பத் தாவடிகளில்''; சிறையாளர் அணிகளில் ஒளி நிரல்கள் சுடர்விடும் பாலைவனங்களின் மத்தியில், உலகோர் செவியில் விழுமென்றெண்ணி, எத்தனை சொற்களை எம் கண்டங்களில் இருந்து நாம் அப்பாலைவனத்தில் எழுப்பினோம்! எங்களில் ஒருவர் சொல்லையாகுதல் உலகோர் கேட்டிருந்தாலோ! அப்படிக் கேட்டிருந்தால் எங்கள் தூதர் உலகிற்கு உண்மை சொல்லியிருப்பார் அல்லவா! உலகம் உடனே எங்களில் பரிவு காட்டியிருக்கும். எங்கள் காட்சிப் புலத்தில், தெளிவரை கொண்ட பௌதிகப் பொருள்களும் தெளிவரையான ஆத்மீக ஆற்றல்களும் நடமாடின. இந்தத் தெளிவான, ஐயத்திற்கிடமில்லாத, உலகிலே இவற்றிற்கு மாறுபாடான சக்திகளை நாம் காணவில்லை. எங்கள் எண்ணங்கள் புத்தகங்களிலிருந்து முளைக்கவில்லை. கவர்ச்சிகரமானவை என்பதற்காக அவற்றை நாம் பாராட்டவில்லை. எங்கள் கருத்துக்கள் சிறைக்கூடங்களிலும் பாசறைத் தீகளிலும், இன்று இறந்தோருடன் உரையாடிய காலங்களில் தோன்றியவை. அத்தகைய வாழ்வில் புடம் போட்டு அத்தகைய சூழலில் மெருகேறியவை அவை.

ஆனால் வெளிநின்ற பகைகள் சிறிது தளரவும் எங்கள் பார்வைப் புலம் விரிவடைந்தது. படிப்படியாக வேலிகளில் இருந்த துவாரங்கள் ஊடாக புற உலகைக் கண்டறியலுற்றோம். என்ன ஆச்சரியம்! நாம் நம்பியிருந்தவாறு புற உலகம் இருக்கவில்லை. முற்றிலும் மாறுபட்டே இருந்தது. தவறான விதிக

ளும், கேடுற்ற நலங்களுமே அதை ஆட்டிப் படைத்தன. பிழையான திசையில் அது முன்னேறியது. நாறும் சேற்றுப் பாத்தியைப் பார்த்து என்ன மனங்கவர் பூங்கா என்றது அந்தப் புற உலகம். மக்கள் கழுத்தை நெரித்த இரும்பு வளையங்களைப் பார்த்து அழகிய அட்டியல்கள் என்றது. இந்நிலையில் சிலர் முகங்களில் தங்குதடையின்றிக் கண்ணீர் பெருக்கெடுத்தோட, மற்றையவரோ தெம்மாங்கு பாடிக் கூத்தாடிக் களித்தனர்!

இது எவ்வாறு நடந்தது? இந்தப் பெரும்பிளவு எப்படி ஆயது? உலகத்தவரோ அன்றி நாங்களோ யார், உணர்நலம் இழந்தவர்? ஒருவேளை, நாங்கள் கையாண்ட மொழிகளிலிருந்த வேறுபாட்டால் இது ஆனதோ? தெளிவாக ஒருவர் கூறுவதை மற்றையவர் விளங்கிக் கொள்ள முடியாமற் போகின்றதே, ஏன்? சொற்கள், வெறும் நீரைப் போல் சுவையின்றி சுவடின்றி ஓடி மடிவதேன்? சென்ற பல்லாண்டுகளாக இது பற்றிச் சிந்தித்தேன். அதன் பயனாக இன்றைய என் பேச்சின் பொருளும் திசை திரும்பிவிட்டது. பாசறையில், உறை குளிர் மாலைவேளைகளில், வரைந்த பேச்சினின்றும் இது பொருளடக்கத்தில் மாறுபட்டுள்ளது.

மனிதனை அறிதுயில் (Hypnosis) வேளையிலன்றி மற்றை நேரத்தில், நெறிப்படுத்துவது, அவன் தனிப்பட்ட முறையிலும், சமூகத்தில் ஓர் அங்கத்தினன் என்ற முறையிலும் அவன் வாழ்ந்து பெற்ற அனுபவமேயாம். அவன் கொள்ளும் உலக நோக்கு, அவனை உள்நின்று ஊக்கும் சக்தி, உயர்நலம் பற்றிய அவன் கருத்து, அவன் செயல், சிந்தை எல்லாம் அவன் அனுபவத்தால் பெற்றனவாம். இரசியப் பழமொழி ஒன்று சொல்லும்: ''உன் உடன் பிறந்தானைக் கூட நம்பாதே. வாக்குக்கண்ணையினும் உன் நோக்கே உயர்ந்தது'' சூழலை அறியவும் அதனோடியைந்த தன் நடத்தையை அறியவும், இதுவே நல்ல அடிப்படை. எங்கள் உலகின் எல்லையை அறிந்து விளங்கிக் கொள்ளமுன், தொடர்புச் சாதனம் ஒன்றால் உலகம் ஒரு சீராக அமையுமுன், உணர்ச்சி ததும்பும் ஒரு தனிப்பிண்டமாக மாற்றப்படுமுன், வரையறப்பட்ட தங்கள் ஒரு தனிச்சமூகம், சமுதாயம், இடம் ஆகியவற்றுள் அமைந்த வாழ்வனுபவத்தால், மக்கள் கட்டுப்பட்டவராயினர். இறுதியில், தம் தேச ஆட்சிப் புலத்துள் கட்டுப்பட்டமைந்தனர். அப்பொழுது தனி மனிதன் உயர்நலம் என்ன என்பதைப் பற்றி ஒரு பொதுக் கருத்தளவு கொள்ளக் கூடியவனாயிருந்தான். சாதாரணம் எது நம்பத்தகாதது எது? கொடூரமானது எது, பாதகமானது எது? என்பன பற்றிய பொதுக் கருத்துக்களே அந்நலம் பற்றிய கருத்துக்கள். பரந்துபட்டுக் கிடந்த மனிதர் பலப் பலவகையில் வாழ்ந்தனர். சமூக நலம் பற்றிய அவர் கருத்து மிக வேறுபட்டிருப்பினும், மிக மிகச் சில உலகப், பிரயாணிகளே இவ்வேறுபாடுகளைக் கண்டு அதிசயப்பட்டனர். இவற்றைப்பற்றிச் சிலர் நூல்களில் எழுதினர். என்னும் இவ்வேறுபாடு இது வரை ஒன்றுபடாத மனித குலத்திற்கு ஓர் இடரையும் கொண்டுவரவில்லை

ஆயினும் சென்ற சில பத்தாண்டுகளுள் திடீரென நாம் உணரா முறையில், ஆபத்தான வகையில்உலகம் ஒருமைப்பட்டுவிட்டது. இதனால் உலகத்தின் ஒரு பகுதியில் ஏற்படும் குழப்பமும் கலவரமும் தடுப்புவழி தெரியா மற்றை இடங்களுக்கும் பரவலாயின. ஒரு சமுதாயமோ ஒரு தேசமோ கொண்டிருக்கக் கூடிய, ஒரு நிலையான ஒற்றுமை போலல்லாமல் மனிதகுலம் ஒன்றாய்விட்டது. படிமுறையில் எழுந்த வாழ்வு அனுபவத்தால் இந்த ஒற்றுமை எழவில்லை. பிறழ்வு இல்லாத நேர் நோக்கினால் தான் இவ் ஒற்றுமை வந்ததோ என்றால் அதுவும் இல்லை. விளங்கிக் கொள்ளக்கூடிய தாய்மொழியால் இவ் ஒற்றுமை வந்ததோ என்றால் அதுவும் இல்லை. இந்த ஒற்றுமை எல்லைத் தடைகளையுங் கடந்து அனைத்துலக வானொலியாலும், அச்சுலகாலும் வந்துள்ளது. நடைபெறும் சம்பவங்களோ எங்கள் சக்திக்கு அப்பாற்பட்டுள்ளன. ஒரு நிமிடத்தில் வானொலியும் பந்திரிகையும் உலகத்தின் அரைப்பாகத்திற்கு ஒரு செய்தியை அறிவித்து விடுகின்றன. ஆயின் எங்களுக்குப் பரிச்சயமில்லாத உலகப் பகுதியில் நிலவும் சட்டங்கள் மரபுகள் முதலியவற்றைக் கொண்டு இச் செய்திகளை மதிப்பிடக்கூடிய ஒரு பொது நியமத்தை வானொலியோ பத்திரிகையோ நமக்கு அளிப்பதில்லை. அவற்றிற்கு அவ்வாறு செய்யும் திறமையும் இல்லை. இந்த நியமங்கள் நீண்டகாலமாக தனிப்பட்ட முறையில், நாடுகள் சமூகங்கள் ஆகியவற்றின் வகைகளுக்கு இயைந்த வகையில், பரிணாம முறையில் வளர்ந்துள்ளன. இவை யாவை என இலகுவில் எடுத்துக் கூறிவிட முடியாது; ஒவ்வொரு நாட்டிலும் மக்கள் நன்மை தீமை பற்றித் தத்தமக்கே உரிய நியமங்கள் கொண்டிருப்பர். ஒரு வித தாட்சண்ணியமுமின்றி, மிக்க மன உறுதியுடன் பிறர் அளவு கோல்களாலன்றித் தம் அளவு கோலாலேயே இவர் உலகத்து நன்மை தீமைகளை ஆய்ந்து ஓர்வர்.

உலகில், இத்தகைய நியமங்கள் அளவுகோல்கள் பல உள. அண்மையில் உள்ளனவற்றிற்கு ஒரு நியமமும், தொலைவில் உள்ளனவற்றிற்குப் பிறிதொரு நியமமும் உண்டு. பண்டைச் சமூகத்திற்கு ஒரு நியமமிருக்கும்; புதியதற்கு இன்னொன்றிருக்கும். மகிழ்ச்சியான சம்பவத்திற்கு ஒன்றிருக்கும்; துயர் தருவதற்கு இன்னொன்று இருக்கும். இந்த அளவு கோல்கள், நியமங்கள் ஆச்சரியப்படத்தக்க வகையில் வேறுபட்டனவாயுள. அவை நம் கண்ணைக் கூச வைப்பதால் அவற்றை மடைத்தனமானவை என்று நாம் தள்ளி வைத்து விடுகிறோம். உலகம் முழுவதையும் நாம் எங்கள் நாட்டின் அளவுகோல் கொண்டு அளக்கிறோம். இதனால் மிகத்தூரத்திலுள்ளவை துன்பம் தருபவையாயினும் தம் உண்மை இயற்கையில் எமக்குத் தோன்றா; அண்மையில் உள்ளனவோ துன்பம் நிறைந்தவை போல் தோன்றுகின்றன. எங்கள் வீட்டின்முன் வந்து நம்மை நலிக்காது, எங்கோ நடப்

பவைபோல் தோன்றுவனவோ, சகிக்கக்கூடியன, பாரதூரமானவை அல்ல என்பதுபோல எங்களுக்குத் தோன்றும். தொலைவில் நேர்ந்த துன்பத்தில் பல்லாயிரவர் அல்லற்பட்டுப் பதறினர் என்றாலும் நாம் அதை வெகு இலேசாக எடுத்துக்கொள்கிறோம்.

பண்டை உரோமில் தம் சமயத்திற்காகத் துன்பப்பட்ட கிறித்துவருக்குச் சமமாக அண்மைக் காலத்தில் துன்பப்பட்ட கிறித்துவர் பலருண்டு. ஆயின் உலகின் இன்னொரு பாகத்தில் பாப்பரசரைக் கொலை செய்ய ஒருவன் ஓடி வருகிறான். இவன் சமயத்தினின்றும் எங்களைப் பாதுகாக்கத் தான் இவ்வாறு செய்கின்றான். இவன் எங்கள் பொருட்டு தன் நலம் பற்றிய அளவுகோலைப் பயன்படுத்த முனைகிறான்.

நாம் பார்த்துப் பொறுமைப் படவேண்டும் என்பதுபோல் தொலைவில் காட்சியளிக்கும் ஒரு சுதந்திரம், நம் அண்டையில் பொல்லாத ஒரு சட்டுப்பாடு போல் தோன்றும். பெறலரும் வளப்பம் என ஓரிடத்தில் காணப்படும் ஒரு பண்பு பிறிதோரிடத்தில் வெறுப்பினை வளர்த்து, உடனே வேலை நிறுத்தம் செய்யப்படவேண்டிய ஓர் அமிசம் போல் தோன்றும். இயற்கை அழிவுகள்பற்றிய வேறுபட்ட அளவுகோல்கள் உண்டு. எங்கள் நகரில் ஏற்பட்ட ஒருசிறு விபத்து பிறிதோரிடத்தில் இரண்டு இலட்சம் பேர் சம்பந்தப்பட்ட பிறிதோர் விபத்திலும் மிக முக்கியம் போல் தோன்றும். ஒருவரை அவமானப்படுத்துதலினும் வேறுபட்ட அளவுகோல்கள் உள. உறுக்கும் சைகை ஒன்று மிக்க ஏளனப்படுத்தும் செயல் போல் ஓரிடத்தில் தோன்றும். பிறிதோரிடத்தில் ஈவிரக்கமின்றி நையப்புடைத்தலுமே மன்னிக்கப்பட்டு ஒரு சிறு பரிகாசம் போல் கருதப்படும். பாதகச் செயலுக்குரிய தண்டனைகளுக்கும் வேறுபட்ட அளவுகோல்கள் உள. ஒரு மாதச்சிறையோ, அல்லது தண்டனைக் கூடத்தில் வைத்தாலோ ஒரு நாட்டில் மக்களிடை பெரும் வெறுப்பை எழுப்பிப் பத்திரிகைகளில் பொல்லாச் சினத்தை மூட்டிவிடும். ஆயின் வேறு இடங்களில் 25 ஆண்டு மறியலையே மனிதர் மௌனமாக ஏற்றுக்கொள்கின்றனர். இங்கு மறியலிடமோ பாதாளக்கிடங்காய் உறைபனிதவழும் சுவர்கள் கொண்டதாய், கோவணமன்றி வேறு ஆடைக்கிடமில்லாததாய் இருக்கும். அம்மட்டோ பழுதிலா மனமுடையார்க்கு விசர் வைத்தியசாலைகள் கூடக் கிடைக்கும். எல்லையைக் கடந்து சிலர் சுட்டுத் தள்ளப்படுவர். இவற்றைக் கண்டும் சும்மா இருப்பவர் பலர். ஏன்? எதற்காக? என்று யார் அறிவார்? உண்மையில், எங்களைப் போன்றோரை மிக வருத்தும் துயர், ஒருவரும் ஒன்றும் அறியா அந்த காலப்பகுதிகளில், செய்தி ஒன்றுமே பெறுதற்கரிய இடங்களில் நடைபெறும் சம்பவங்கள் தான். சில பத்திரிகை நிருபரைத் தவிர இங்கிருந்து செய்தி தருபவர் ஒருவர் கிடையாது.

இந்த இரு வேறுபட்ட அளவு கோல்களுக்கு, தொலைவில் உள்ள ஓர் அயலான் துயர்பற்றிய அக்கறையின்மைக்கு, மனித குலத்தில் நிலவும் மனச் சார்பினை நாம் குறை கூறலாகாது. மனிதன் அவ்வாறு அமைந்து விட்டான். ஆயின் தனி ஒரு பிண்டமாகத் திணிக்கப்பட்ட மனிதகுலத்தினர் இவ்வாறு ஒருவரை ஒருவர் புரியாதிருப்பது மிகப் பெருந் தீங்கைக் கொண்டுவரும். இந்த ஒரு சீரின்மையாலும் இசைவுப் பொருத்தமின்மையாலும் உலகிற்குப் பெருங்கேடு நேரல் கூடும். உலகில் நன்மை தீமை பற்றி ஐந்தாறு நியமங்கள் அளவுகோல்கள் இருப்பின், ஏன் இரண்டுதானும் இருப்பின், ஓர் உலகும் ஒரு குலமும் இருப்பது என்பது அசாத்தியம். ஒரு புவியில் நாம் உறைதல் இலகுவாகாது. இரண்டு இதயமுடையார் தரிப்பரா? ஆயின் இந்த நலநியமங்களை இசைவிப்பார் யார்? எவ்வாறிசைவிக்கலாம்? நன்மை தீமைகளை எடை போடத் தனி ஓர் அளவுகோலைப் படைப்பார் யார்? மன்னிக்கக் கூடியது எது? முடியாதது எது? என்று மதிப்பது எவ்வாறு? இப்பிரச்சினைகளை எவ்வாறு தரம் பிரிக்கலாம்—கிட்ட இருந்து நன்மைச் சுரண்டுவன எவை என்பதை நமக்கு எடுத்துக் காட்டுபவர் யார்? அண்மையில் இல்லாமல் தொலைவிலிருந்தாலும் மிகப் பொல்லாதவை எவை என நமக்கு ஓதுபவர் யார்? தன் அனுபவக்கட்டையும் அறுத்து, இப்பிரச்சினையை நன்கு விளக்கிக் காட்டக்கூடியவர் யார்? விடாக் கண்டனான பிடிவாதமுடைய ஒருவனுக்கு, தொலைவில் உள்ள மாந்தரின் இன்ப துன்பத்தை எடுத்துக் கூறக் கூடியவர் யார்? தான் அனுபவியாதிருந்தும் மற்றையவர் உறவுமுறை பற்றிய நல்விளக்கம் பிழையான விளக்கம் ஆகியவற்றைக் கூறக்கூடியவர் யார்? பிரசாரம், வல்லந்தம், விஞ்ஞானமுறை நிறுவல் எல்லாம் இங்கே வலியற்றவை. ஆயின் நான் கூறியவற்றை எடுத்துக் கூறவல்ல சாதனம் உலகில் உளது. அதுதான் கலை. அதுதான் இலக்கியம்.

தன் அனுபவத்தால் மட்டுமே அறிவு பெறும் குறைபாடு மனிதனுக்கு இயல்பாகவே உள்ளது, கலையும் இலக்கியமும் பிறர் அனுபவங்களை மனிதனுக்கு ஊட்டுகின்றன. ஊட்டி அவனின் இந்தக் குறைபாட்டை அகற்றுகின்றன. இம்மண்ணில் சில வாழ்நாள் சிற்றனுபவ மனிதன் ஒருவனுக்கு, மாற்றார் பெற்ற நீண்ட பெரும் அனுபவங்களை, சுமையுடனும் சுவையுடனும். மாற்றியூட்டுவது கலை; மற்றையோர் அனுபவத்தை ஊனில் மீளப்படைப்பது கலை; இதனால் ஒருவர் அனுபவம் மற்றயவரதும் ஆகின்றது.

இதுமட்டுமன்று, இன்னும் பல சொல்லலாம். சிலநாடுகள் மற்றையவை விட்ட தவறுகளைப்பிழையென நன்கு தெரிந்திருந்தும் ஊழிபல கடந்தும் அவற்றைத் தாமே செய்தல் உண்டு. மற்றையவர் நன்கு சிந்தித்து வேண்டாம் என்றுகழித்தவற்றை திடீரெனச் சிலர் அவைதான் மகோன்னதமெனக் கொள்ளலுமுண்டு. இங்கும் நாம் வாழ்ந்து அனுபவியாதவற்றின் இடத்தை எடுக்கக்கூடியவை கலையும் இலக்கியமுமேயாம். மொழி வழக்கு, சமூகப்பழக்கம் ஆகியவற்றால் எழும் வேறுபாடுகளை வென்று, ஒரு நாட்டின் வாழ்வனுபவத்தை மற்றொன்றிற்குப் புகுத்

தும் ஓர் அற்புதமான சாதனத்தை கலையும் இலக்கியமும் மனிதனுக்கு அளிக்கின்றன. ஒரு நாட்டினால் அல்லற்பட்டு பல்லாண்டுகளாகக் கட்டி யெழுப்பப் பெற்ற தேசிய அனுபவம், அத்தகையதொன்றை அனுபவித்திராத பிறிதொரு நாட்டினுக்கு எடுத்துச் செல்லப்படின், தேவையற்ற, தவறான பாழின்பால் உய்த்துவிடும் ஒரு நெறியிலிருந்து அந்நாட்டினை அது தப்பவைக்கக்கூடுமல்லவா? இவ்வாறாக வரலாற்றின் திரிபற்ற நெறியினைக் கலை நேரிதாக்கக்கூடும். இன்று இந்த நோபல் மேடையினின்றும் கலையின் இந்தப் புண்ணிய மேம்பட்ட பணியை அழுத்திக்கூறி நினைவிருத்த விரும்புகின்றேன்.

இன்னும் இலக்கியம், மனித அனுபவத்தைச் சுருக்கி, அதிகாரபூர்வமான முறையில், மற்றையவர்களுக்குப்பரிமாறும் மிக உன்னதமான பிறிதொரு நெறியும் உளது. இது ஒரு தலைமுறையிலிருந்து மற்றையதற்கு இலக்கியத்தை எடுத்துச் செல்வது. இப்பணியில் இலக்கியமானது ஒரு நாட்டினத்தின் உயிர்ப்புடைய ஞாபகசக்தியாக விளங்குகின்றது. இவ்வாறாக இலக்கியம் ஒரு நாட்டினத்தின் மறைந்த வரலாற்றை மாற்றமுறா வகையிலும் இழிவுபடுத்தப்படா முறையிலும் பேணிக் காக்கின்றது. இவ்வழியால் இலக்கியம் ஒரு நாட்டினத்தின் மொழியையும் உயிரையும் பேணிக் காக்கின்றது. (அண்மையில் நாட்டினங்களை மட்டந்தட்டல் பற்றியும் இக்கால நாகரிகத்துச் சூழலில் அவை அவிந்து போவது பற்றியும் பேசுவது நாகரிகமாகக் கருதப்படுகின்றது. நான் இக்கொள்கையை ஆதரிக்கவில்லை. அதை ஆய்தல் வேறொரு பிரச்சினையாகும்), மனிதரை ஒத்த ஒரு முகத்துடனும் ஓர் உளப்பாங்குடனும் படைத்தால் உலகம் எவ்வாறிருக்குமோ அவ்வாறுதான் நாட்டினங்களை ஒழித்துக்கட்டல். இது மனித குலத்திற்கு ஒரு பேரிழப்பாகும். நாட்டினங்கள் மனித குலத்தின் செல்வம். நாட்டினங்கள் மனித குலத்தின் பொதுமைப்பட்ட ஆளுமைகளாம். அவற்றுட் சிறியவற்றிற்கு அவற்றிற்கென அமைந்த வண்ணமுண்டு. அவை இறைநோக்கின் ஒரு பண்பினைத் தம்மகத்துக் கொண்டுள.

ஆயின் வன்மையினால் ஒரு நாட்டினத்தின் இலக்கியம் தடைப்படின் அந்நாடு துன்பத்துக்குள்ளாகும். இது வெறும் பத்திரிகைச் சுதந்திரமன்று. இது ஒரு நாட்டினத்தின் இதயத்தைச் சிறைப்படுத்தியதாகும். நாட்டினத்தின் ஞாபகத்தைத் திருகியதாகும். அப்பொழுது நாடு தன் நினைவை இழந்து விடுகிறது. அது தன் ஆன்ம ஒருமையிலிருந்து கீழே விழுத்தப்பட்டதாகி விடும். மக்கள் ஒரு தாய் மொழியுடையராய் இருக்கலாம்; ஒருதாய் நாட்டவராயிருக்கலாம்; ஆயின் அவர் உடனே ஒருவரை ஒருவர் விளங்கிக் கொள்ளாமல் போய்விடுவர்.

தம் சந்ததியினர்க்கோ மற்றையோர்க்கோ வருங்காலத்தினர்க்கோ ஊமையாயுள்ள ஒரு காலத்தினர் தம்மைப்பற்றி ஒன்றும் கூறாது இறந்துவிடுகின்றனர். ''அக்மட்டோவா'', ''சமயற்றின்'' போன்ற பெரும்புலவர்கள் வாழ்நாள் முழுவதும் சிறையுட்படின், தாம் படைத்தவற்றை மக்கள் எவ்வாறு ஏற்றுக்கொள்கிறார்கள் என்பதைத் தெரியாது, இறக்கும்வரை மௌனமாகவே தம் காவியங்களைப் படைக்குமாறு அவர் ஒறுக்கப்பட்டு விடுகின்றனர். எனவே இது அவரின் சொந்த அவலமன்று; நாட்டினத்தின் அவலமேயாகும். அன்றியும் இந்நிலைமை நாடு முழுவதையும் அழித்துவிடும்; அதோடு நில்லாது மனித குலத்திற்கே பேரழிவு தரும். அப்பொழுது ஏற்படும் மௌனத்தினால், வரலாறே திரிபுபட்டுவிடுகிறது.

கலையும் கலைஞரும் தமக்கென ஒரு வழி வகுத்துச் செல்லவேண்டுமா? இல்லை. சமூகத்திற்குத் தாம் கொண்ட கடப்பாட்டினை நிலையாக மனத்திருத்தி அதற்கேற்ப உழைக்க வேண்டுமா? இக் கேள்வி பல காலங்களில் பல நாடுகளில் காரசாரமான பகை பெருக்கும். செயற்கைப்பாடான ஒரு பிணக்கினைத் தூண்டி உள்ளது. என்னைப் பொறுத்தவரையில் இதற்குரிய விடை பற்றி நான் தீர்க்கமான முடிவு கொண்டுள்ளேன். அதற்குரிய நியாயங்களை இங்கு நான் கூற முன்வரவில்லை. இதற்கு முந்திய ஒரு நோபல் பேச்சில் மிக அற்புதமாக இது பற்றி ஆராயப்பட்டுள்ளது: அதைப்பற்றி ஆராய்ந்தவர் அல்பட் காமு ஆவர். அதுபற்றிய அவர் முடிபுகள் எனக்கும் உவந்தவையாம். எது எவ்வாறிருப்பினும், இங்கு ஒன்று சொல்லலாம். இரசிய இலக்கியம் தன்னைத்தான் போற்றலையும் அற்பத் தனத்தையும் எப்பொழுதோ களைந்துவிட்டது. இந்த மரபை என்னாலியன்ற அளவு நான் பின்பற்றி ஒழுகுவேன்.

எழுத்தாளன் தன் அனுபவத்தையும் அக ஆய்வுச் சிந்தனைகளையும் மட்டும் எடுத்துரைத்து உலகத்தில் நடக்கும் மற்றை யாவற்றையும் புறக்கணிக்கலாம் என்ற உரிமையை நாம் மறுக்க முடியாது. கலைஞனை நெருக்கி நாம் ஒன்றும் பெறமுடியாது. ஆயின் அவனைக் கடியவும், வேண்டவும், ஒருபக்கம் வளைத்து எடுக்கவும், நாம் செய்யலாம். உண்மையில் அவனுக்குக் கிடைத்த கொடை ஒரு பகுதியளவிலேயே அவன் உழைப்பாகும். அக்கொடை பெருமளவில் அவனோடு கூடப்பிறந்தது. இதனுடன் தன் சுய இச்சையைக் கட்டுப்படுத்தும் பொறுப்பும் அவனுக்குண்டு. யாருக்கும் அவன் கடமை பூண்டவனல்லன் என்று எடுத்துக் கொள்வோம். அப்படியாயினும் எழுத்தாளன் ஒருவன் தன் சொந்தப் படைப்பான கற்பனை உலகத்திற் சரண் புகுதலையும் அகநோக்கான சலனங்கள் எனும் பாழிற் செல்வதையும் எண்ண மனம் நோகின்றது. இவர் இவ்வாறு செய்வதால் மெய்யான உலகம் விசரர், பதர், கூலி ஏவலர் ஆகியோரால் நிரம்பி விடுகின்றது.

சென்ற நூற்றாண்டுகளிலும் இந்த இருபதாம் நூற்றாண்டு கொடுமை மிக்கதாய் விளங்குகின்றது; அதன் முற்பகுதியோடு அதன் பயங்கரங்கள் ஓயவில்லை. ஆதிகாலப் பழைய உந்தல்கள் பேராசை, பொறாமை, அடக்கமின்மை, மாற்றார் கேடெண்ணல் எல்லாம் எங்கள் உலகைப் பிய்த்தெறிகின்

றன. ஆனால் இவற்றிற்கு இப்பொழுது அலங்காரமான போலிநாமங்கள் சூட்டப்பட்டுள்ளன. வர்க்கப்போராட்டம், இனப்போராட்டம், மக்களின் போராட்டம், ஒன்றுபட்ட தொழிலாளர் போராட்டம் என்பன அவற்றுட்சில. இணங்கி வாழக் கூடாதென்ற பூர்வகால இயல்பிற்கு இப்பொழுது கொள்கை வழிக்கோட்பாடு எனும் ஓர் உயர் மரியாதைப்பூச்சு அளிக்கப்பட்டுள்ளது. இது மிக வைதிகமாகப் போற்றப்படுகின்றது. இணக்கத்திற்கு ஒருப்படாத இந்த மனப்பான்மையானது, ஒழியாத ஓர் உட்பகைப்போரை மூட்டிக் கோடிக்கணக்கான மக்களைக் கொலை செய்து குவிக்கின்றது. இணக்கத்திற்கு இசையாத இந்த மனப்பான்மையால் நன்மை நீதி என்பனபற்றி மக்களிடை நிலையான ஒரு கருத்துக் கிடையாது. அவ்வாறு ஒன்று இருப்பினும் அது மாறும் தகையது. எப்பொழுதும் உன் கட்சிக்குச் சாதகமான வழியில் நடந்து கொள்ளலாம் என்ற ஓர் உபதேசத்தை இம்மனப்பான்மை ஓயாது புகட்டிக் கொண்டிருக்கின்றது. ஏதாவது, மேலதிகமாகக் கிடைக்கக்கூடுமென தொழிலாளர் கண்டால் உடனே சமூகத்திற்கு என்ன தீங்கு வருமென்று சிந்திக்காமலே அவர் கிடைத்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். மேல்நாட்ச் சமூகங்களிடை இந்த இம்சை கூடுவதும் குறைவதுமாக உள்ளது. நூற்றுண்டு நூற்றுண்டுகளாய்க் கட்டி எழுப்பப்பெற்ற சட்டமோ இம்சையைக் கட்டுப்படுத்தும் கடமையிலிருந்து தளர்ந்துவிட்டது. இதனால் இந்த இம்சை உலகமெங்கும் கங்குகரையில்லாத வெற்றிநடை போடுகின்றது. அழிவும் பாழுமே இம்சையால் நிகழும் என்பது வரலாறு கண்ட உண்மை. ஆயினும் இம்சை தன் ஆர்ப்பாட்டத்தில் குறையவில்லை.

பொல்லா விலங்கியல்பு மட்டும் தான் இங்கு வெற்றி கொண்டது என்பதன்று. அதுவே உவந்தது என்று வலியுறுத்துவதிலும் அல்லவா, உலகில் அது வெற்றி ஈட்டிக்கொண்டு விட்டது! நேர்மை வலிகுன்றிய விடத்து, வன்மையே வல்லமை மிக்கது என்று உலகம் எங்கும் நாணயமற்ற வாதக்குரல்கள் எழுகின்றன. இக்காலத்தில் விமானங்களை எவ்வாறு ஆறலைக்கின்றனர்! ஆட்களைப் பிணைகளாக வலிந்து பற்றுகின்றனர்! வெடிகள் வைக்கின்றனர்! தீவைக்கின்றனர்! என்பதைப் பாருங்கள். நாகரிகத்தை அழிக்க இவர் எடுத்த ஆணையையல்லவா இவை காட்டுகின்றன. இவர்கள் நாளடைவில் தம் எண்ணத்தை நிறைவேற்றல் கூடும்.

இளைஞர்கள் கண்ட அனுபவம் பாலியல் ஒன்றே. சொந்தத் துயருழப்போ விளக்கமோ அவரறியார். இரசியாவில் 19 ஆம் நூற்றுண்டில் அறைகூவிப்பின் பதமழிந்த சுலோகங்களையல்லவா மிக்க ஆர்வத்துடன் இவர்கள் இப்பொழுது ஒலிக்கின்றனர். இதனால் ஏதோ புதியது கண்டவர்போல் கத்துகின்றனர். அண்மையில் ''செங்காவலர்'' மனிதரை இழிவுபடுத்தியதைத் தாம் பின்பற்றவேண்டிய ஒரு பணி என இவர் கருதுகின்றனர். காலத்தாலழியாத மனிதப்பண்பை உணராததால் வந்த மட்டான புத்தியும் அறியாமையும் அல்லவா இது. இந்த இளைஞரின் நம்பிக்கையை என் என்பது! வாழ்வென்பதை இவர் அறியார்! ''இந்தப் பொல்லாக் கொடூர ஆட்சியாளரை அடித்தழித்துவிடுவோம். அடுத்து வருபவர் (அதாவதுநாங்கள்) நீதியானவராயும் இணக்கமறிபவராயுமிருப்பர், அதாவது நாங்கள் பின்னர் எங்கள் வெடிகுண்டுகளையும் துவக்குகளையும் அப்பால்போட்டு விடுவோம்''. அப்படி அவர்கள் செய்வார்களா? உலக நிலைபரம் கொஞ்சம் அறிந்தவர்கள் இவர்களோடு வாதாடக் கூடியவராயிருந்தாலும் இவர்களோடு வாதாடுவார்களா? இவர்கள் என்ன செய்வார்கள்? ''வைதிகக்குடுக்கைகள், பழமை பேணிகள்'' என்ற பேர் பெறுமலிருப்பதற்காக இவர்களின் நட்பைப் பெற என்னவும் செய்வார்கள். இதுவும் 19 ஆம் நூற்றுண்டு இரசியாவில் நிலவிய ஒரு பண்பு. இதையே ''முன்னேற்றமான கருத்துகளுக்கு அடிமையாதல்'', என டொஸ்றியவஸ்கி கூறினர்.

மியூனிச் மனப்பாங்கு என்பது ஏதோ இறந்த காலத்தில் நடந்த ஒரு செயலன்று. அது ஏதோ திடீரென்று தோன்றிய ஒன்றன்று. 20 ஆம் நூற்றுண்டில் இந்த மியூனிச் மனப்பாங்குதான் தலையெடுத்த ஒன்று என்று நான் கருதுகிறேன். திடீரெனப் பொல்லாமை ஒன்று உயிர் பெற்றெழுந்து உலகைத் தாக்குவது கண்டு நாகரிக உலகு நடுக்கங்கொண்டது. இந்தப் பொல்லாக் காட்டுமிராண்டித்தனத்தைக்கண்டு புன்னகை பூத்து வரவேற்பதை அன்றி வேறொன்றும் செய்ய இயலாது அது தவித்தது. நல்லாரிடம் காணப்படும் ஓர்மக்குறைவே மியூனிச் மனப்பாங்கு ஆகும். ''உலக வாழ்வில் பொருளியல் வளமே முக்கியம்'' என்றுஎதுவகையிலும் தன்னலம் நாடுவாரின், பொதுவான நிலையே அது.

இவர்கள் பொறுமையை விரும்பிப் பின்னடைகின்றார்கள். ஏன்? இன்னும் கொஞ்சக் காலம் அமைதி நிலவட்டும் பொல்லாத் தன்மையை இன்னும் ஒரு நாள் சுணக்கலாம் என்பது இவர்கள் கருத்து. ஏனென்றால் நாளை நல்லாய் அமைந்து விடலாமல்லவா? ஆனால் அப்படி நடவாது. கோழைத்தனத்தின் பலன் இன்னும் பாரதூரமாக இருக்கும் தியாகம் செய்ய நாம் தயாராயிருந்தால்தான் துணிவும் வெற்றியும் நமக்குக் கிட்டும்,

எம்மை அழிக்க நிற்கும் இன்னுமொரு காரணியுமுண்டு. பௌதிக முறையில் நெருங்கி ஒடுங்கிய எம் உலகு ஆத்ம முறையில் ஒன்றுபடும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. உலகின் ஒரு பாதியில் உள்ள அறிவு, பரிவு ஆகியவற்றின் மூலக்கூறுகள் மற்றையதற்குப் பாய்வதற்கு ஏற்ற வாய்ப்புக் கிடைக்கவில்லை. இது எம்மை நோக்கி நிற்கும் பொல்லாத ஒரு கேடு. உலகின் ஒரு பாகத்திலிருந்து மற்றையதற்குச் செய்தி பரவுதலைத் தடைசெய்தல் பேரழிவேயாகும். செய்தி பரவுதலைத் தடைசெய்தல் 'என்ரொபி' (Entropy) எனும் நிலையை உண்டாக்கிச் சர்வநாசத்தைத் தரும் என்பதை இக்கால விஞ்ஞானம் அறிவும். செய்தி

யைத் தடை செய்வதால் நாட்டிடை உண்டாகும் உடன்பாடுகள் ஒப்பந்தங்கள் பொருளற்றனவயாகின் றன. ஒருங்கிய ஒரு பிரதேசத்துள் எந்த ஒப்பந்தத் திற்கும் ஒரு விபரீத அர்த்தம் கொடுத்துவிளக்கலாம். (இதை ஓர்வெல் எனும் ஆசிரியர் நன்கு உணர்ந்தி ருக்கிறார்) இந்த ஒருங்கிய வலயத்துள் உள்ள எல் லோரும் தாம் ஒரு முற்படையினர் எனக்கருதி உல கத்தை விடுதலையாக்குகிறோம் என்ற எண்ணத்துடன் நாசம் பண்ணுவதிலேயே கண்ணுயிருக்கின்றனர்.

25 ஆண்டுகட்கு முன் ஐக்கிய நாடுகள் என்னும் அமைப்பு பெரியதொரு நம்பிக்கையின் அடிப்படை யில் எழுந்தது. பரிதாபம்! ஒழுக்கங்கெட்ட உலகில் அதுவும் ஓர் ஒழுக்கங்கெட்ட தாபனமாகவே வளர்ந் தது. அது ஒரு ஐக்கிய நாடுகளின் அமைப்பாக விளங்கவில்லை. ஐக்கியப்பட்ட அரசாங்கங்களின் அமைப்பாகவே விளங்குகின்றது. இது மக்கள் தெரிந் தெடுத்த அரசுகளையும், வன்மையால் நிறுவிய அரசு களையும், படை வன்மையால் கைப்பற்றப்பட்ட அரசுகளையும் கொண்டுளது. இச்சங்கத்தின் பெரும் பான்மை உறுப்பினரிடை நிலவும் பாரபட்சம் வியப் பிற்குரியது. இது சிலரின் சுதந்திரத்தைப் போற்று கின்றது. சிலரின் சுதந்தரத்தை விழுத்துகின்றது. தனிப்பட்டார் துயரினைக் கேட்க என்றால், கோழைத் தனமான முறையில் அது மறுத்துவிடுகின்றது. மிகச் சிறியாரின் கதறல், புலம்பல் வேண்டுகொள்களை, அற்ப பூச்சி புழுக்களின் கதறல்கள் என்று இச்சங்கம் கருதுகின்றது. அதன் வாழ்வின் 25 ஆண்டுகாலத் தில் அது வெளியிட்ட மிக அரிய திட்டம் மனித உரிமைப் பிரகடனம் என்பதாகும். மனித உரிமைக ளைப் பேணும் அரசாங்கங்களே இச்சங்கத்தில் உறுப் பினராகலாம் என்ற ஒரு விதி வகுத்தால் எவ்வளவு நன்றாயிருந்திருக்கும். இதனால் நேர்ந்தது என்ன? தம் அரசாங்கத்தைத் தெரிவு செய்யாத மக்கள் அவ் வரசாங்கத்தின் தயையை நம்பி வாழவேண்டியவரா யினர்!

இக்கால உலகின் போக்கு விஞ்ஞானிகள் கையி லேயே முழுதும் தங்கியிருப்பதுபோலத் தோன்றும். ஏனெனில் மனித குலத்தின் தொழினுட்ப விடயங்கள் யாவும் அவர்களால் முடிவு செய்யப்பட்டதுபோல் இருக்கின்றது. இவ்வுலகமோ அரசியலாளரில் தங்கி யிராது உலக விஞ்ஞானியரில் தங்கியிருக்க வேண்டும் போல் தோன்றும். ஏனெனில் தனிப்பட்ட விஞ்ஞானி களே எவ்வளவு சாதித்து விட்டனர் என்பதை நாம் எண்ணும் பொழுது, கூட்டுறவால் அவர் எவ்வளவு சாதிக்கலாம் என்பது தெளிவாகின்றது. உலகில் ஒரு முக்கிய தனிப்பட்ட சக்தியாகத் தாம் விளங்குவ தற்கு விஞ்ஞானிகள் யாதொரு முயற்சியும் எடுக்க வில்லை. மற்றையோர் துன்பங்கண்டு துணிந்து கடிவ தற்கு அவர் நாணுகின்றனர். விஞ்ஞானத்தின் வேலி கட்குள் ஒழிந்து கிடக்க அவர் விரும்புகின்றனர். இந்த ''மியூனிச்'' மனப்பாங்கு இவர்களை ஆட் கொண்டுவிட்டது.

இந்தப்பொல்லா ஆபத்து நிறைந்த உலகு பேரழி வின் எல்லைக்கு வந்துவிட்டது. இதில் எழுத்தாள னின் கடமையாது? எங்களிடம் வெடித்தெறிய ஏவு கணை உந்துகணை இல்லை. உருட்டி விளையாட ஒரு சிறு வாகனமும் இல்லை. பொருளியல் வலுவை மதிப் பாரோ எங்களை வேறுத்தொதுக்குகின்றனர். ''நன்மை வெல்லும்; உண்மை பிளவு படாதது'' என்பவற்றில் நாம் நம்பிக்கையிழந்துவிட்டோம். இத் தன்மையால் மனிதகுலம் அழியும் தறுவாயிலுளது. எவ்வாறு மனிதர் சீர்கெட்டுப் போகின்றனர் என்று மட்டும் நாம் சொல்லிக்கொண்டிருக்கலாம். மனிதர் பொறுப்பற்றுப்போயினர். தனிப்பட்ட உயர் நலங்கொண்ட நல்லுள்ள முடையாரின் வாழ்வு, எவ்வளவு கடினமாகிவிட்டது? இவ்வாறான சிந்தனை களால் எழுத்தாளர் உலகப் பொறுப்பிலிருந்து வில கிக் கொண்டல்லவா வருகின்றனர்.

ஆனால் எழுத்தாளராகிய நாம் இவ்வாறு தப்பி ஒதுங்கலாமா? ஒரு முறை ''வாக்கினைக்'' கையிலெ டுத்து விட்டால், பின்னர் நாம் பொறுப்பிலிருந்து விலக முடியாது. தம் நாட்டவரை ஒத்தகாலத்தவ ரைப் புறத்து நின்று கணித்து, நியாயம் கூறுபவனல் லன் எழுத்தாளன். தன் நாட்டிலே நடக்கும், தன் நாட்டவர் செய்யும் தீவினைக்கெல்லாம் அவன் உடந்தை. அவன் நாட்டு ''டாங்கிகள்'' மற்றவர் நாட்டு மண்ணைக் கறை செய்யின், எழுத்தாளன் முகத்திலுமல்லவா கறை படியும். நம்பிக்கையான நண்பன் ஒருவனின் கழுத்து நள்ளிரவில் நரிக்கப் படின், எழுத்தாளன் கையிலும் நரித்த கயிற்றின் கறை இருக்குமல்லவா? பணிவான பணியிலும் கொடு வழக்கும் இழிவழக்கும் உயர்ந்தனவென்று அவன் நாட்டுத் தோழர் சொல்ல அழிவேலையில் ஈடுபடின் அவர் செயலின் கொடுமை, எழுத்தாளன் மூச்சிலு மல்லவா கலந்து நிற்கும்.

இக்கால உலகைப் பீடித்த கொள்ளைநோய், பிணி வாடை ஆகியவற்றிற்கு நாம் பொறுப்பல்லர் என்று எழுத்தாளர் துணிந்து கூறமுடியுமா?

ஆயின் உலகஇலக்கியத்தின் இதயம் ஒன்றே என்பது என் வாழ்வனுபவம். உலகின் துன்பம் கவலையாவற்றிற் கும் ஏற்றவாறு இந்த இதயந்துடிப்பதையும் நானறி வேன். ஆயின் இத்துடிப்பு வேறுவேறு இடங்களில்வேறு வேறுவகையில் நோக்கப்படும். நாட்டின் இலக்கியங்க ளுக்கு மேலாக அவற்றை உயர்மட்டத்தில் பிணைக் கும் ஓர் உலக இலக்கியமுண்டென்று முன்னை நாளில் ஒரு கருத்திருந்தது. வெவ்வேறு இலக்கியங்கள் ஒன் றன்மேல் ஒன்று கொண்ட தாக்கங்களின் கூட்டு இது என்று சொல்லலாம், ஆயின் ஒருநாட்டு இலக்கியம் மற்றை நாட்டை அடையக் காலம் எடுத்தது. ஏன் சில நூற்றாண்டுகளுமே கழிந்தன. இதனால் ஒன்று மற்றொன்றை ஊக்கலும் நாட்பட்டது. இதனால், ஊக்கங்கள் ஒத்த காலத்தவரிடையல்லாமல் முன்பின் பட்ட சந்ததியினரிடையே விளைவதாயிற்று. ஆயின் இப்பொழுது நாடுகளிடை உள்ள எழுத்தாளரிடைய

மைந்த ஊக்கம் மிக விரைவாக நடைபெறுகின்றது. இது என் அனுபவம். என்னூல்கள் என்னுட்டில் வெளியிடப் படாவிடினும் உலகில் அவற்றை விரும்பி வாசிப்பார் பலருளர். அவற்றைப்பற்றி விரிவான ஆராய்ச்சிகளும் வெளிவந்துள: சென்ற சில ஆண்டு களில் என் படைப்புகள் வீணுகவில்லை என்பதை நான் உணர்கின்றேன். ஈர்ப்பு விதிகட்கெதிராக கண்காணு செவிகேளா, புலன்காணு மக்கட் பரிவு எனும் ஒன்றி ஞல் அவை உயர்த்தப்பட்டு நிற்கின்றன. என்பதை நான் உணர்கின்றேன். எதிர்பாராதவகையில் உலக எழுத்தாளரின்தோழமை அவற்றை ஆதரிப்பதை நான் ஆர்வுநிறைந்த நன்றியோடு நோக்குகின் றேன். என் 50 ஆம் பிறந்த நாளில் புகழ்பெற்ற, ஐரோப்பிய எழுத்தாளரின் பாராட்டு என்னை ஆச்ச ரியப்படுத்திவிட்டது.

என்மீது ஏவப்பட்ட தாக்கல்களை மற்றையோர் உணராதிருக்கவில்லை. நெடுங்காலமாக விளங்கிய அந்நாட்களில் நான் எழுத்தாளர் ஒன்றியத்திலி ருந்து விலத்தப்பட்டேன். இன்னும் கூடிய கொடுமை என்னை எதிர்நோக்கி நின்றது. உலக எழுத்தாளர் அத்தருணத்தில் என்னைச் சுற்றி ஓர் காப்பரண் எழுப் பினர். நோர்வே அரசு எனக்குப் புகல் தரவும் ஆயத் தமாயிருந்தது. நோபல் பரிசிற்கு என் பெயரை நியமனம் செய்ய முன்வந்தவரும் மோரியாக் என் னும் பிரேஞ்சு நாட்டு எழுத்தாளரே. இதன் பின் னர் சகல நாட்டு எழுத்தாளரும் என்னை ஆதரித் தனர்.

இதனல் என் வாழ்வில் அனுபவித்து உணர்ந்த உண்மை இது தான். உலக இலக்கியம் என்பது இலக்கியவலார் யாத்த கருத்துருவப் பொதுவிதி ஒன்றன்று. ஊக்குகளின் ஒரு தொகுப்புமன்று, ஆயின் அது ஒரு பொது உயிர் கொண்ட ஒரு பொது உடல் வளரும் மனித குல ஆத்மீக ஒருமைப்பாட்டின் பிரதிபிம்பம். அரசுகளின் எல்லைகள் இன்னும் செங் கோடுகளாகவே இருக்கின்றன. மின்கம்பிகளால் இன்றும் கனன்று கொண்டிருக்கின்றன. பொறித் துவக்குத் தீயும் சேர்ந்து அவற்றிற்கு எரியூட்டுகின் றது. சில உள்நாட்டு விவகார அமைச்சுகள், இலக் கியம் அவரவர் நாட்டு விடயங்கள் என்று கருது கின்றன, பத்திரிகைகள் இன்றும் இது அவர் அலு வல் அன்று. எங்கள் உள்நாட்டு விவகாரங்களில் பிறர் தலையிடக்கூடாது என்று தலையங்கம் தீட்டு கின்றன. சுருங்கிய எங்கள் உலகில் உள்நாட்டு விவகாரம் என்று ஒன்றில்லை என்பதை இவர் சற் றும் உணரார். மனிதர் யாவரும், ''எல்லாம் எங் கள் அலுவலே'' என்று கவர்ச்சி எடுத்தால் மனித குலம் பிழைக்கும். மேல் நாட்டார் சிந்தனைக்குக் கீழை நாட்டாரும், கீழை நாட்டார் சிந்தனைக்கு மேலைநாட்டாரும், பராமுகமாயிருத்தல் ஆகாது. மனிதனுக்கு வாய்த்த அரும்பெறற் கருவிகளுள் மெல்லிதும் உணர்நலமிகுந்ததும் உண்மை இலக் கியம். வளரும் மனிதனின் ஒரு குல உணர்வினைப் புதிது அறிந்து, ஆட்கொண்டு, வளர்த்த காரணிக ளுள் இவ்விலக்கியமே முதலானது. இதனல் தான் நான் இன்றைய இலக்கிய உலகினை நம்பிக்கையோடு நோக்கி இவ்வேண்டுகோளை விடுக்கின்றேன். இவ் இலக்கிய உலகில் நான் சந்தியாத, இனிமேல் சந்திக் கமுடியாத ஆயிரவர் இருப்பர்.

நண்பர்களே நாம் பொறுப்புள்ளவர்களாயிருப் பின் முயன்று பணி புரிவோமாக. கொள்கை முரண் பாடுகள், கட்சி, சாதி, இயக்க, கூட்டப் பிளவுகள் எங்கள் நாடுகளைப் பிளவு படுத்தி நிற்கின்றன. இந் நிலையில் ஆதிகாலந் தொட்டு இன்றுவரை பிளவுச் சத்தியாக இல்லாது ஒன்றிணைக்கும் சக்தியாக விளங்கி வருபவன் யார்? எழுத்தாளன் ஒருவனே. எழுத்தாளர் கடமையின் தவப்பணி இதுவே: ''நாட் டினமொன்றைப் பிணைக்கும் அச்சாணியான நாட் டினமொழியை மலர்த்தல், நாட்டினை மலர்த்தல், நற் பேறுடையராயின், நாட்டின் ஆத்மனை மலர்த் தல்''.

கோடிய உள்ளத்தவர் கட்சிச்சார்புடைய மக் கள் மனத்தில் புகுத்துவது யாதாயினும் ஆகுக. இப்பொழுது உலகில் நிகழும் துன்பச் சூழலில், மனித குலம் தன் உண்மை இயல்பினை அறியவைக்கும் பொறுப்பு உலக இலக்கியத்திற்கே உரியதாகும். ஒரு நாட்டின் கனிந்த அனுபவத்தை மற்றைய ஒன்றிற்கு உலக இலக்கியம் கொண்டு செல்லல்கூடும். மனம் பேதலித்துப் பதற்றமுறு வகையில் இதைச் செய்ய லாம். வேறுபட்ட ஒழுக்க நியமங்கள் ஒன்றுபட லாம். செவ்விய சுருக்கமான முறையில் மற்றை நாட்டினங்களின் வரலாற்றை அறியலாம். தாமே சொந்தமாக உழந்தது போன்ற நோவோடு இதனை அறியலாம். இந்த நோ உணர்ச்சியினல் இன்னு மொரு நாடு குறித்த தவற்றைச் செய்யாது பிழைக்கலாம். எழுத்தாளராகிய நாங்கள் இத் தகைய அனுபவத்தால் உலகநோக்கு ஒன்றினை வளர்க்கலாம். அண்மையில் உள்ளதை நோக்க நடுக் கண்ணையும், உலகின் மற்றைய பாகத்தில் நடப்பதை நோக்க கண்களின் ஓரங்களையும் பயன்படுத்தலாம். அதன் பின் இரு நோக்கற்பேறுகளையும் ஒக்கவைத்து உலக நியமம் ஒன்றைத் தோற்றுவிக்கலாம்.

எழுத்தாளர் அன்றி வேறு யார்தான், தம் இயல்பிலாத தலைவர்களையும் தம் சொந்தச் சமூகத் தையும் இடித்துரைக்க வல்லார்? எப்பொழுது சமூகத்தைக் கடியவேண்டும்? பயத்தினல் தன்னைத் தான் இழிவுபடுத்தும் பொழுதும் தன்னைத்தான் கோழைத்தனத்தால் திருப்திப்படுத்தும் பொழுதும் கடியவேண்டும். எழுத்தாளரை அன்றி வேறுயார் இளைஞரின் கருத்தற்ற மிகை நடத்தையைக் கடிய வல்லார்? கத்திகொண்டு கொளையடிப்பாரைக் கடிய வல்லார் யார்? எழுத்தாளரல்லவா? பகிரங்க வன் செயலை இலக்கியம் எவ்வாறு எதிர்க்கும்? என்று சிலர் கேட்பர். ஆனல் வன்செயல் தனித்தியங்குவ தொன்றன்று என்பதை நாம் மறந்து விடக்கூடாது. என்றும் பொய்ம்மையோடு சேர்ந்தியல்வது அது.

பொய்க்கும் வன்செயலிற்கும் இடையில் இயல்பாயமைந்த அடிப்படையான இணைமருவிய உறவுண்டு. வன் செயலைப் பொய்சொல்லித்தான் மறைக்கலாம். பொய்யினுல்தான் வன்செயலை நிலையாகப் பேணலாம். வன்செயலே தன் செயல் என்று வெளிக் கூறுவான், பொய்யையே தவருது தன் பிரமாணமாகக் கொள்ள நேரிடும். வன்செயல் பிறந்தவுடன் அது வெளிப்படையாகச் செயற்பட்டுத் தன்னைப் பற்றிப் பெருமிதம் அடைந்து கொள்ளும். தன்னைச் சிறிது நிலைநிறுத்தியதும் தன்னைச் சுற்றியுள்ள சூழல் தனக்கு ஆதரவுதராததைக் காணும். காணவே பொய்யில் முகத்தை ஒளித்து தேனொழுகும் பேச்சால் தன்னைத்தான் போர்த்துக்கொள்ளும். வன்செயல் என்றும் உங்கள் கழுத்தை நெரித்துக் கொன்று விடும். சில வேளைகளில் பொய்யிற்கு அடிமையாகி அதன் பணிகட்கு உடந்தையாகுமாறு உங்களை நெருக்கிவிடும்.

பொய்யை ஆதரியாதிருக்க, பொய்ச் செய்கைகளில் பங்குகொள்ளாதிருக்க வேண்டியன என்ன? ''தனி ஒரு எளியான்; தனி ஒரு சிறுசெயல்', இத்தகையோர் உலகெலாம் தோன்றி நிலவுக. உலகினை இவர் ஆட்சி கொள்க. கலைஞர் எழுத்தாளர் இன்னும் பெரும்பணி ஆற்றலாம். இவர்கள் பொய்மையை வெல்லலாம். எப்பணியிலும் கலை தவறல் கூடும்; ஆயின் என்றும் பொய்ம்மையை அது வென்றுளது என்றும் வெல்லும். இதன் வெற்றி வெட்ட வெளிச்சமானது. பொய் எதனுடனும் நின்று மல்லாடும்; ஆயின் கலைக்கு ஈடு கொடுக்க முடியாது.

பின்னர் பொய்மை பரவலாகும். வன்செயல் கொடூர தாண்டவமாடும். நாளடைவில்அதுமுதுமையுற்றுப் பாறிவிழும்.

இதனுல்தான் உலகின் துயர் துடைக்கும் பணியில் நாம் துணைபுரியலாம் என்று நான் நினைக்கிறேன். எங்களிடம் ஆயுதமில்லை என்று நாம் சமாதானம் கூறலாகாது. கவலையற்ற வாழ்வு நமக்காகாது. இப்பொய்ம்மையை அழிக்கும் போரில் நாம் ஈடுபடவேண்டும்.

இரசிய மொழியில் மக்களுவக்கும் பழமொழிகளுள் பெரும்பாலானவை உண்மை, பற்றியனவாம் (இரசிய மொழி பிராவ்ட: ஒப்பிடுக வடமொழி ''பிரபோத'') இது மக்களின் பேர் அனுபவத்தை எடுத்துக்காட்டுகின்றது. ஓர் உண்மைச் சொல் உலகினும் மாணப் பெரிது. சக்தி திணிவுக்காப்பு விதிகட்கு மாருன இந்த என் கோட்பாட்டினையே என் செயல்கள் ஆதாரமாகக் கொண்டுள்ளன. இதன் பேரிலேயே உலக எழுத்தாளரை நான் கூறிய நற்பணியில் ஈடுபடுமாறு வேண்டுகிறேன்.

---

# கரைவு

நா. தர்மலிங்கம்

மலை போல் மண் சுவர் எழுந்து நின்று
பெய்யும் மழையில் கரைந்து போகுது
முன்னைய வீட்டின் மண் சுவர் அது
இப்போதும் மலைபோல் நீட்டி நிற்குது
எத்தனை எத்தனை உயிர்ப்பிண்டங்கள்
உறைந்து வாழ்ந்த பழைய வீடது
பரம்பரை பரம்பரையாய் சீதனம் கொடுத்து
அம்மாவின் பெயரில் இப்போ இருக்குது
காலப் போக்கின் கடுகதி வீச்சில்
புதிய வீட்டின் படியை நோக்கி
வீட்டில் இருந்து வீட்டைத் தேடி
கல்லால் சமைத்தனர் புதியதோர் வீடு
பிடுங்கி அடுக்கிய பழைய வீட்டின்
எஞ்சி நிற்கும் பாரிய மண் சுவர்
பெய்யும் மழைக்கும் பெரிய காற்றிற்கும்
மெல்ல மெல்லக் கரைந்து போகுது.

# மலடுகள்

என். கே. மகாலிங்கம்

''கலியாணம் கட்டி ரெண்டு வருசமாச்சு... அதுகளும் தனியனுகளா... பூச்சி புழுக்கள் ஒண்டும் இல்லாமை, பிள்ளையளும் நல்லா மெலிஞ்சு போகுதுகள். அதுகளுக்கும் கவலை போல.. நானும் நேராத நேத்தி இல்லை. அவனுக்கும் கடவுள் கிடவுள்ளை நம்பிக்கையும் இல்லாமை இருக்கு. ஏதாவது கோயில் குளத்துககு கூட்டிப் போடா எண்டாலும் போருனு.. 'ஆச்சி... கடவுள் இருக்கு... இல்லை எண்டதிலும் பாக்க நடக்கிறதுதான் நடக்கும்... கோயிலுக்குப் போனாலும் போகாட்டியும் நடக்கிறதுதானே நடக்கும்...' எண்டு சொல்லி என்ரை வாயைப் பொத்திப் போடுருன். என்னாலை என்னத்தைச் செய்யேலும். இந்தக் காலத்துப் பொடியள் சொல் வழி கேக்குதுகளே. ம்ம்... நான் என்னத்தை மேனை சொல்ல... அதுகள் நடக்கிற மாதிரி நடந்திட்டுப் போகுதுகள். எங்களுக்கெல்லோ கவலையாயிருக்கு...''

சந்திரனின் தாயாரின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த சிவகாமி ''எங்கையாவது நல்ல டொக்டரைப் போய்ப் பாத்தா... நல்ல மருந்து கொடுத்து என்ன விசயம் எண்டு கண்டுபிடிச்சிடுவாங்க. எல்லாம் சரியாய்ப் போயிடும். அவள் சரோசாவும் இப்படித்தான் ஐஞ்சு வருசமாய் பிள்ளை குட்டி இல்லாமை இருந்து, யாழ்ப்பாணத்தில இதுக்கெண்டு படிச்சுப்போட்டு வந்த டொக்டரைச் சந்திச்சு... இப்ப ஒரு ஆம்பிளைப்பிள்ளை பிறந்து ஒரு வருசமாகேல்லை, அதுக்குள்ள அடுத்ததும் சனிச்சுப் போச்சு''

ம்ம்...இவனைத் தங்கச்சி கேட்டுக் கேட்டு அலுத்துப் போனன். நான் ஏதாவது சொன்னு எரிஞ்சு விழுருன், சும்மா இராச்சி... அது ஒண்டு இல்லாததுதான் குறை... என்கிருன்.

''அதுகளுக்கும் செலவுக்கு கஷ்டம்தான்... அதுக்காகச் செய்ய வெண்டிய காரியங்களைச் செய்ய வேண்டாமா... பட்டினி கிடக்கலாம்.. பிள்ளைகுட்டி இல்லாமை இருக்கேலுமா...? இல்லை... அது நல்லதா. பணம் இண்டைக்கு வரும் நாளைக்குப் போகும். இதெல்லாம் இப்படியான பொருளா... இதைப் பற்றி மருமகளிட்டை சொல்றது தானே''

''அதட்டை நான் எப்படிச் சொல்றது... அதுவும் இவன் சொல்றதுக்கெல்லாம் ஆமாப் போட்டண்டு... வளத்த நாய் மாதிரி அவனைச் சுத்திச்சுத்தி வருகுது... இல்லை... நான் சொல்றதும் ஞாயமோ... நான் கிழவி சொல்றது அதுகளுக்கு காதில தான் ஏறுதோ.''

''அப்ப நல்ல சந்தர்ப்பம் வரேக்கை அவவிட்ட நான் சொல்லிப் பாக்கிறன். எல்லாம் நடக்கிற மாதிரி நடக்கும்''

''அவள் மாரிமுத்துவின்ரை டாக்குத்தர் பொடியனுக்கே மூண்டு வருசம் கழிச்சுத்தானே ஒரு ஆம்புளைப் புள்ளை பிறந்துது. அதோடை பிள்ளையளே இல்லை. அவனும் இவனும் நல்ல சிநேகிதம். அவனும் இங்கை அடிக்கடி வருவான். அவனட்டையும் இவனைப் பற்றிச் சொல்லிப் பாத்தன். இப்ப ஏன் அவசரப்படுறீங்க... ஒரு அஞ்சாறு வருசம் போகட்டன் எண்டெல்லோ சொல்ருன். அதுகள் நினைக்குதுகள் இது கடையில வாங்கிற சரக்கு எண்டு. எல்லாம் தங்கடை கைக்குள்ளதான் இருக்கெண்டு...''

''எல்லாம் தங்கடை மூப்பில நடக்குதுகள்... நாங்க என்ன செய்யிறது?''

ம்ம்... இந்தக் காலத்திலை எங்கட காலத்தைப்போலையா... ஒண்டு இரண்டுக்கு மேலை பெறுகுதுகளா... அந்தக் காலத்திலை ஆரு கூடப் பெறுகுதுகளோ அதுகளுக்குத்தான் மதிப்பும் மரியாதையும்... அவையள்தான் பின்னடிக்கு ஏதும் கஷ்டம் இல்லாமை நல்லா இருக்குதுகள்... நாலிலை ஒண்டாவது நல்லா வராதா... ம்ம்... எல்லாம் அவன்ரை செயல் எல்லாத்துக்கும் பொடிச்சியட்டைச் சொல்லிப் பார்... நீ சொன்னு சிலவேளை கேட்கலாம். ஆனு... அவவும் அவன்ரை சொல்தான் மந்திரம் என்று நடக்கிரு... அந்தாப் பொடிச்சி வருகுது நான் சொன்ன தண்டு சொல்லிப் போடாதை''

* * *

சித்தனை முகட்டு ஓட்டில் தங்கி, ஓடுகளைப் போல் வரிசையாக ஓடிக் கொண்டிருந்தன. சிவகாமி சொன்னதை நினைத்து மனம் பின்னலிட்டு சுழன்று பின்னி முறுகின, அடிவயிற்றைக் குடைந்து சிந்தனைகள் புரண்டன. வண்ணத்திப் பூச்சிகள் இளம் சிறகுகளை அடிப்பதுபோல மனம் குடைந்தது. தெளிவற்ற சிந்தனைகள் சின்னுபின்னமடைந்த ஓட்டம். காதல் பண்ணிக் கல்யாணம் செய்து இரண்டு ஆண்டுகளாகி விட்டன. இலட்சியம் அது இது எண்டு சொல்கிறவர்களைக் கல்யாணம் செய்தால் வாழ்க்கையில் நிரந்தரப் போராட்டம் இருந்துகொண்டிருக்கும் என் பதை கதைகளில் வாசித்துள்ளாள். விவாகம் செய்யுமுன் அவன் கூட்டங்களிலும் தொழிற்சங்க நடவடிக்கைகளிலும் ஈடுபட்டதை நேரடியாக அவதானித்துள்ளாள். அவற்றைத் தூரத்தில் நின்று ரசிக்கும்போது அவள் எய்திய மகிழ்ச்சியும், பிரமிப்பும் பிரமாண்டமானது. நேரே பிரச்சனைகளைத் தரிசிக்கும் வாய்ப்பு ஏற்பட்ட போதுதான் வாழ்க்கை எவ்வளவு சிக்கலானது என்று தெரிகின்றது. எத்தனை நாட்களுக்குத்தான் பிரச்சனை, பிரச்சனை என்று தலையை உடைக்கிறது. சதா பிரச்சனை... அதுவும் பொருளாதாரப் பிரச்சனை, ஐஸை மடியில் வைத்திருப்பதுபோல, சிலவேளை ஐஸ் இருந்த இடம் மரத்துப்போவதுபோல பிரச்சனைகளும்

மரத்துப்போய் விடுகின்றன. சிவகாமி சொன்னவை அவள் வாழ்க்கையின் திசையையே திருப்பி விடும்போல நினைக்கிருள் அவள் ''ஒரு பெண்ணுக்கு வாழ்க்கையின் அர்த்தம் குழந்தை. குழந்தை இல்லாவிட்டால் பெண் என்ற புனித ஸ்தானத்திலிருந்து தரம் இறங்கிவிடுகிருள்.''

''ஐஞ்சு வருடங்களுக்குப் பிறகு பிள்ளை பிறந்தால் போதும்''

''பிள்ளைப் பெறுவது உங்கடை அல்லது எங்கடை கையிலா இருக்குது. பயிர் முளைக்கிறது தரையைப் பொறுத்தும் இருக்கிறதல்லவா?''

'தரையைச் சீர்ப்படுத்துவதும், களைபிடுங்குவதும், தேவைதானே.... அதுக்கு நல்ல டொக்டரைப் பார்த்தா என்ன - யாழ்ப்பாணத்திலே இப்போ இதுக்கெண்டு படிச்ச, புதிசா ஒரு டொக்டர் வந்திருக்கிருராம். அவரட்டைக் கொண்டுபோய்க் காட்டுங்களன்'.

'அதுக்கென்ன அவசரம். இப்ப ஏன் அவசரப்படவேண்டும்' என்கிருர்.

சிவகாமியின் வார்த்தைகள் குரிசுகளை வரிசையாக நிறுத்திய மாதிரி அடுக்காக நின்று அவளைப் பார்த்து ஏளனம் செய்தன.

'இண்டைக்குச் சிவகாமி அக்கா வந்தா''

''வந்து யாராவது டொக்டரட்டைப் போய்க் காட்டிறதுதானே... இப்படியே இருக்கப் போறீங்களா எண்டு கேட்டா...''

யாவும் தெரிந்தமாதிரி சந்திரன் சொல்லவே அவள் திடுக்கிட்டாள். இது வழமையான கதை. இப்படித்தான் அவர்கள் சொல்லியிருப்பார்கள் என்பது அவனுக்கு ஏலவே தெரியும்.

''அதுகளுக்கு எங்கடை வாழ்க்கைச் செலவு, ஊர்போகிற போக்கு, நாட்டின் நிலவரம், என்னதெரியப் போகுது? மணி ஓடரிலே காசு வருகுது எடுத்துச் சாப்பிட்டுக்கொண்டு சும்மா திரியுதுகள். மணியோடரும் வராமல் விடவேணும், இவையடைபாடு தெரியும். எங்கட செலவைப் பற்றி எங்களுக்குத்தானே தெரியும். அதைப் பற்றி மற்றவர் ஆர் கவலைப்படப் போகினம். அவையளுக்கு எங்கடை செலவைச் சொன்னுல் புரியப் போகுதா? நீங்க ரெண்டுபேர் தானே. ஆளும்... ஆளும்... உங்கடை சம்பளம் மிச்சம் எண்டு சொல்லினம்..... இந்த நேரத்திலே ஏதாவது பிள்ளை குட்டியெண்டும் வந்திட்டா ... பணத்துக்கு எங்கை போறது ... எங்கடை சம்பளத்தை எடுத்து எத்தனையாப் பிரிக்கிறது, இப்பவே சம்பளத்தை எதிர்பார்த்துக் கடன் வாங்கி, கடனைக் கொடுத்துப் பின் கடன் வாங்கி பின் சம்பளத்தைக் கொடுத்து காலத்தை ஓட்டவேண்டி இருக்கு. பிள்ளை எண்டும் வந்திட்டா...... டொக்டரைப் பாக்கிறதுக்கும், மருந்துக்கும் மாவுக்கும் எங்கை போறது, உங்கடை அப்பா, அம்மாவா தரப்போகினம். அவை யட்டைத்தான் இருக்கா.. இப்ப ஏன் நாங்க அவசரப்படுவான்? பிள்ளை வாற காலத்திலே வந்திட்டுப் போகுது. அதுக்காக இப்பவே ஒவ்வொரு டொக்டரிட்டையும் காவடி எடுக்க வேணுமா.. ...''

அனைத்தையும் கேட்டுக்கொண்டு பேசாமல் சரிந்து படுத்திருந்து, கண்ணை விழித்து முகட்டைப் பார்த்த வண்ணம் சிந்தனையில் ஆழ்ந்தாள், ஏதோ நினைத்துக் கொண்டவள் போல.

''இப்ப பாத்தா, புதிய பிரச்சனைகள் எல்லாம் வருகுது. எங்கட தாம்பத்திய வாழ்வு......பிள்ளையள் இல்லாட்டி குறையாம். எல்லாத்தையும் விட உங்கடை ஆண்மையிலேயும் என்னிலேயும் குறைகாணுகிறபோது தான் ...எனக்குப் பொறுக்கமுடியாம இருக்கு...''

தனது ஆற்ருமையை மூச்சுவிடாமல் கூறினுள். பயங்கரமான அறிகுறிகள் கடுமையடைந்து அவளுடைய முகத்தில் உறைந்திருந்தன.

என்னுடைய ஆண்மை, உன்னுடைய குறை அது உனக்கும் எனக்கும் இடையிலை இருக்கிற பரஸ்பர சங்கதி. மற்றவர்கள் அதைப் பற்றி ஏன் கவலைப்படவேணும். என் ஆண்மையைப் பற்றி நீ எப்பிடி எடுத்துக் கொள்கிருய். அதிலைதான் என்னுடைய கவலையும் பிரச்சனையும் தங்கியிருக்கு... மற்றவர்களைப் பற்றி நான் கவலைப் படேல்லை. நீயும் என்னைப் பற்றிக் குறையாக நினைக்கிருயா? அதுதான் எனக்குத் தேவை...''

''உங்களுக்கு எத்தனை தரம் சொல்லியிருக்கிறன். அதைப்பற்றி நான் எக்காலத்திலேயும் சந்தேகப் படேல்லை... திரும்பதிரும்ப அதைக் கேட்டு என்னை ஏன் குழப்பறீங்க...''

''அப்படி எண்டா நீ ஏன் கவலைப் படவேணும்?''

''நான் கவலைப்படேல்லை. ஆனு... இந்தச் சமூகம் கவலைப்படவைக்குது...?

''பிறருடைய வாழ்க்கையைப் பற்றிக் கவலைப்படுகிற சமூகம் எந்தக் காலத்திலேயும் இருந்து கொண்டேயிருக்கும். முக்கியமாக கிராமத்திலே அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள்தான் அநேகம். கவலைப்படுகிற அந்தச் சமூகம் உதவி செய்ய முடியா விட்டாலும் மனத்துன்பத்தை மட்டும் கொடுக்கும். அதுக்கு அதுதான் தொழில்''

தான் பெரிதாக நினைத்த மனைவி கூட சில வேளைகளில் சாதாரண மனிதர்களின் சொற்களைப் பெரிதாக மதித்துக் கவலைப்படுகிருளே என்பதை நினைத்துத் துக்கப்பட்டான்.

''நீங்க சொல்ற மாதிரி நடந்து... கடைசியில் பிள்ளையளே இல்லாட்டி...''

''பிள்ளையளே இல்லாட்டி... என்ன குறைஞ்சா போயிடுவம்; நமக்குப்பிறக்கிற பிள்ளையள்தான் உலகத்தைத் தாங்கிப் பிடித்து நிமித்திவிடுமா? பிள்ளையளே இல்லாட்டி அப்படியே இருந்திட்டுப் போறது?

ஆத்திரத்துடன் கூறினுன்.

அவளுக்கு உலகம் சுழன்று கொண்டு வந்தது. அப்படி எண்டா நாங்க மலடுகளாகவே இருக்கிறதை நீங்க விரும்புறீங்களா?

''நாங்க ஒரு வகையில் மலடுகள் தானே. காசில்லாத மலடுகள். மலடுகளால்தான் எதையும் செய்துவிட முடியாது. அவர்கள்தான் கையாலாகாதவர்கள், ஒரு தகுதியும் அற்றவர்கள். நாங்கள் மலடுகளாகவே இருந்திட்டாலும் பரவாயில்லை...''

அவளால் ஏதும் பதில் கூறமுடியவில்லை. ஆனுல் புதிய விஞ்ஞானத்தை அவள் திடமாக நம்பினுள். விஞ்ஞான சோசலிசத்தில் நம்பிக்கையுள்ளவன் விஞ்ஞானியாக இல்லையே என்ற கவலை அவளுக்கு இல்லை.

# இலங்கைத் தூதின் படிப்பினைகள்

பேராசிரியர்
டட்லி சியர்ஸ்

தமிழில்-சு. மகாலிங்கம்

[குறிப்பு: பேராசிரியர் டட்லி சியர்ஸ் அவர்கள் தற்போது இங்கிலாந்திலுள்ள சுசெக்ஸ் பல்கலைக்கழகத்தின் கீழுள்ள அபிவிருத்திக் கல்விக் கழகத்தின் நெறியாளராகக் கடமையாற்றுகின்றார். அவர் சர்வதேச தொழிலாளர் அமையத்தினரால் (ILO) இலங்கைக்கு அனுப்பப்பட்ட வேலைவாய்ப்பு ஆய்வுக்குழுவுக்கு தலைவராகக் கடமையாற்றினார். ஏற்கனவே, தென்னமெரிக்காவிலுள்ள கொலம்பியா தேசத்திற்கு அனுப்பப்பட்ட வேலைவாய்ப்பு ஆய்வுக் குழுவுக்கும் அவரே தலைவராகக் கடமையாற்றினார். எனவே அவரின் இக்கட்டுரையில் கொலம்பியாவின் நிலையுடன் இலங்கையைப் பலவிடங்களில் ஒப்பிட்டுக் குறிப்பிடுகின்றார். இலங்கைபற்றிய அவரின் தூதுக்குழுவின் அறிக்கை ''வேலைவாய்ப்புகளையும் எதிர்பார்ப்புகளையும் இணைத்தல்'' (Matching Employment Opportunities and Expectations) என்ற தலைப்புடன் 1971ம் ஆண்டிறுதியில் வெளிவந்துவிட்டது. அந்த அறிக்கையின் முக்கிய அம்சங்களை இக்கட்டுரை கோடிட்டுக் காட்டுகிறது. இக்கட்டுரை பெப்ரவரி 1972இல் வெளியிடப்பட்டது.]

மக்கள் தொகைப் பெருக்கத்தால் ஏற்பட்ட பெருந் தொகையானோர்க்கு வேலை கொடுக்கவேண்டிய தீவிர பிரச்சினையே கொலம்பியாவைப்போல இலங்கையிலும் அடிநாதமான பிரச்சினையாகும். ஆனால் இலங்கையில் அப்பெருக்கத்திற்கான காரணங்கள் வித்தியாசமானவை. மலேரியா ஒழிப்பினால் மிக வேகமாகப் பெருகிய மக்கள் தொகைக்கு இலங்கை சிறந்த உதாரணமாகும். காரணங்கள் வித்தியாசமானவையாயினும் அவற்றின் விளைவுகளான வேலையின்மை, குடித்தொகையைக் கட்டுப்படுத்தும் கொள்கை என்பன இருநாடுகளுக்கும் ஒத்தவையெனலாம்.

கொலம்பியாவைப் போன்று இலங்கையிலும், ஒரேவகைக் காரணங்களால்; தொழில் நுட்பமுறைகள் அதிகம் மூலதனச் செறிவுள்ளவையாக இருக்கின்றன. இதனால் மூலதனப் பொருட்களுக்கு மிகையான செலவாணி விகிதம், மிகக்குறைவான வட்டிவீதம், முதலீட்டை மிதமிஞ்சி ஊக்கப்படுத்தும் வரிமுறைகள் என்பன காணப்படுகின்றன. இவை எல்லாவற்றையும்விட, மிகுந்த வெளிநாட்டுச் செலாவணியைச் செலவழித்து பிறநாட்டுத் தொழில் நுட்பமுறைகள் புகுத்தப்படுவதற்கு எவ்வித கட்டுப்பாடும் இங்கு இல்லாதிருப்பதே மோசமான நிலையாகும். பொருத்தமற்ற தொழில்நுட்ப முறைகள் (கொலம்பியாவில் வங்கிக் கணக்குகளைச் செய்ய மின்கணனியைப் பயன்படுத்தல், இலங்கையில் மிதமிஞ்சிய உழவு யந்திரங்கள் பயன்படுத்தப்படல்) நாட்டுக்குநாடு வெவ்வேறு வகையில் அமைந்துள்ளன. எனினும் அவற்றிற்கு ஒரே மாதிரியான அடிப்படைத் தீர்வுகளே தேவைப்படுகின்றன.

கொலம்பியாவைப்போல் இலங்கையிலும் தற்போதுள்ள நிலத்தைப் பயன்படுத்தும்முறை வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிற்கு ஒரு பெரிய தடையாக இருக்கின்றது. ஆயினும் இருநாட்டிலும் அவை ஒரேயளவாக இல்லை. இருநாடுகளிலும் நிலம் மறுபங்கீடு செய்யப்படாமல் அவற்றின் பெருகிவரும் மக்கள் தொகையில் கணிசமான பங்கினர்க்கு கிராமப் புறங்களில் வேலைவாய்ப்பினை ஏற்படுத்துவது சிரமமான காரியம். சிறு துண்டுக்காணிகள் பெரியதுண்டுகளிலும் மிகத்தீவிரமாகப் பயிரிடப்படுகின்றன. அதனால் அவற்றில் சராசரியாக ஏக்கருக்கு கூடிய மனித உழைப்பும், கூடிய விளைச்சலும் ஏற்படுகின்றன. எனவே இங்கு உயர்மட்ட வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு நிலச்சீர்திருத்தம் தவிர்க்கமுடியாத ஒன்றாகும்.

கொலம்பியாவில் வருமானம் சிலர் கைகளில் மட்டுமே குவிந்திருந்தது. அவர்கள் சம்பளத்தின் பெருமளவினை இறக்குமதிசெய்யப்பட்ட பொருட்களிலும் வெளிநாட்டுப் பிரயாணத்திலும் செலவழித்தனர், எனவே கொலம்பியா பற்றிய அறிக்கையில் வேலையின்மைக்கான பொறுப்பு அவர்கள் மீது சுமத்தப்படுகிறது. இருநாடுகளிலும் வருமானப் பகிர்வின் அளவுபற்றிய விபரங்கள் செம்மையாக இல்லையாயினும், இலங்கையில் கூடிய சமமான முறையில் வருமானப் பகிர்வு நடைபெறுகின்றதென்பதை அவை காட்டுகின்றன. கொலம்பியாவில் உயர்மட்டத்திலுள்ள 5 சதவீதத்தினரின் வரி செலுத்துவதற்கு முந்திய வருமானத்தின் விகிதம் 30 தொடக்கம் 40 சதவீதமாகும். இலங்கையில் இவ்விகிதம் 20 சதவீதம் வரையாகும். அத்துடன் இலங்கையில் கூடிய நேர்முகவரி. பரவலான உணவு மான்யம், பிற நலம்பேணல் சேவைகள் என்பனவும் கவனிக்கத்தக்கவை. உண்மையில் இலங்கையில் வருமானப் பகிர்வு ஒரு தொழில் மயமான நாட்டிற்கு அதிகம் ஒத்ததாக இருக்கிறதெனலாம். இங்கு நகர்ப்புற,கிராமப்புற மக்களின் வாழ்க்கைநிலை, வருமானம் என்பவற்றிற்கிடையே அதிக வேறுபாடில்லை. கொழும்பையும் பிறபட்டினங்களையும் நோக்கி மக்கள் இடம்பெயர்வது குறைவாக இருப்பது அதனையே காட்டுகிறது. மேலும் இலங்கையில் புதிய தொழிலாளரைப் பயன்படுத்துவதினைக் குறைக்கும் வகையில் தொழிற்சட்டங்கள் தொழிலாளரின் கூலியைக் கூட்டியதாகத் தெரியவில்லை.

## படித்து வேலையற்றிருப்போர்

அமைப்புமுறை வேலையின்மை பற்றிக் கவனம் செலுத்தியிருப்பது இலங்கை பற்றிய அறிக்கையின் முக்கிய புதுமையாகும். உண்மையில் உலகம் முழுவதும் தொழிற்பற்றுக்குறை இருந்துவருகிறது. யான் விபரிக்கப்போகும் அமைப்புமுறை இடர்ப்பாடுகள் இல்லாமலிருப்பினும் வேலையின்மை மோசமாகவே இருந்திருக்கும்-

அண்மைக்கால சமூக பொருளாதாரக் கணக்கெடுப்பின் முடிவுகள் எமது சிந்தனைப் போக்கில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தின. அவை வெளிப்படையான வேலையின்மை உயர்ந்த அளவிலிருப்பதைக் காட்டின. அது கொலம்பியாவின் பட்டினங்களைப் பெரிதும் ஒத்தவகையில் 14 சதவீதமளவு இருந்தது. ஆனால் அவை வேலையின்மைக்கும், வயது கல்வித்தரம் என்பவற்றிற்குமிடையேயுள்ள நெருங்கிய தொடர்பினைக் காட்டின. (அட்டவணை I, II என்பவற்றைப் பார்க்குக). வயது குறைந்த குழுவினரிடையே வேலையின்மை மிகக் கூடுதலாக இருக்கிறது. அதுவும் க. பொ. த. சாதாரண தரம் உடையோரிடையில் குறிப்பிடத்தக்கதாயிருந்தது. ஏப்ரல் 1971 கிளர்ச்சிக்கு இதுவும் ஒரு காரணமாக இருந்திருக்க வேண்டும்.

அட்டவணை I: இலங்கை; சாதாரண தரம் சித்தியடைந்த சித்தியடையாதோரிடையே வயதின்படியுள்ள வெளிப்படையான வேலையின்மை விகிதம்—1969-70

(வேலைதேடுவோர் வேலையிலிருக்கும் முழுத்தொகையினரின் நூற்று வீதமாகத் தரப்பட்டுள்ளனர்.)

| வயது | சாதாரணதரம் சித்தியடைந்தோர் | ஏனையோர் |
|---|---|---|
| 15—19 | 92 | 38 |
| 20—24 | 64 | 25 |
| 25—34 | 17 | 6 |
| 35—44 | 6 | 1 |
| 15—59 | 32 | 12 |

அட்டவணை II: இலங்கை: இளைஞரிடையே அடைந்த கல்வித்தரத்தின் படியுள்ள வெளிப்படையான வேலையின்மை விகிதம் 1969–70.

(வேலைதேடுவோர் வேலையிலிருக்கும் முழுத் தொகையினரின் நூற்று வீதமாகத் தரப்பட்டுள்ளனர்.)

| அடைந்த கல்வித்தரத்தின் உயர் மட்டம் | 15-19 வயது | 20-24வயது |
|---|---|---|
| கற்காதவர் | 23 | 8 |
| ஆரம்பநிலை | 34 | 15 |
| நடுத்தரநிலை | 46 | 39 |
| உயர்நிலை(சாதாரணதரம்) | 92 | 63 |
| உயர்நிலை (உயர்தரம்) | — | 69 |
| எல்லா நிலையும் | 41 | 34 |

ஆதாரங்கள்: சமூக-பொருளாதாரக் கணக்கெடுப்பு 1969-70

விசேடமாக அறுவடைக்காலத்தில் கிடைக்கக்கூடிய உடலுழைப்பு தொழில்வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால் அவற்றை படித்த வேலையற்றோர் ஏற்றுக்கொள்வதில்லை. அவற்றிற்கான வெற்றிடங்கள் எவ்வளவுள்ளனவென்பது தெரியவில்லை. ஆனால் அவற்றில் சில நிரப்பப்படுதல் கஷ்டமென்பது தெளிவாகவுள்ளது. ஐந்து இலட்சத்திற்கு மேற்பட்டோர் வெளிப்படையாகவே வேலையற்றிருக்க அரசாங்கம் இந்த ஆண்டில் பல்லாயிரக்கணக்கான இந்தியத் தொழிலாளர்களை கள்ளுச்சீவலுக்காகவும் அதனோடுகூடிய வெளிக்களவேலைகளுக்காகவும் கொண்டுவரத் தீர்மானித்தது. இது மேற்குறித்த நிலைக்குச் சிறந்த உதாரணமாகும். 19ம் நூற்றாண்டிலும், 20ம் நூற்றாண்டின் ஆரம்பப்பகுதியிலும் கோப்பி, தேயிலை, இறப்பர் பெருந்தோட்டங்களில் வேலைசெய்ய இந்தியத் தொழிலாளர்களை இறக்குமதி செய்ததின் விசித்திர எதிரொலிப்பாகவே மேற்குறித்த செய்கையும் விளங்குகிறது.

வேலை எதிர்பார்ப்புகளுக்கும் வேலை வாய்ப்புகளுக்கும் இடையேயுள்ள முரண்பாட்டிற்கு இலங்கையறிக்கையின் தலைப்பில் நாங்கள் அழுத்தம் கொடுத்திருக்கிறோம். சுருக்கமாக, நடந்திருப்பதென்னவெனில் கல்வியமைப்பின் விரிவினால் உயர்நிலைப்பாடசாலைத்தகைமைபெற்றோர் தொகை பெருகிவிட்டது. அத்தகைமையுடையோர் தமக்குக் கிடைக்கவேண்டுமென பொதுவாக எதிர்பார்க்கும் கந்தோர் வேலைகளின் அளவு பொருளாதார அமைப்பினால் இயலக்கூடியதை விட மிகக்

கூடியதாகும். இத்தகைய எதிர்பார்ப்பு 1950-ஆம் ஆண்டுகளில் நியாயமானதாக இருந்திருக்கலாம். மேலும் அத்தகைய வேலைகளுக்காகக் காத்திருப்பது அவர்களின் மடத்தனமுமில்லை. அப்படிக் காத்திருப்பதற்கு நல்ல காரணமுமிருக்கிறது. ஏனெனில் ஒரு உடலுழைப்புத்தொழிலுக்குக் கிடைப்பதிலும் பல மடங்கு ஊதியம் ஒரு வெள்ளைச்சட்டை உத்தியோகத்திற்குக் கிடைக்கிறது. அத்துடன் அது மிகக்கூடிய பாதுகாப்பையும் அளிக்கிறது. மேலும் உத்தியோகம் வகிப்பது ஒப்பற்ற சமூக மதிப்பையும் கொணர்கிறது. இந்த நன்மைகளில் எது கூடிய முக்கியத்துவம் வாய்ந்ததென்று சொல்வது சிரமமானது. பாடசாலையை விட்டு விலகுவோர் ஒரு உடலுழைப்புத் தொழிலை ஏற்றுக்கொள்ளின் குறித்த பெரிய நன்மைகள் தரும் உத்தியோகம் பெறும் வாய்ப்பைக் குறைத்துக் கொள்கின்றனர். எனவே அவர்கள் தமக்குத்தகுந்த உத்தியோகத்திற்காக காத்திருத்தலினால் நாட்டிற்கு எவ்வளவு வீண் செலவு ஏற்படினும் அவர்களின் சொந்த நன்மையைப் பொறுத்தமட்டில் அது மிக மிக நியாயமானதே.

கிட்டத்தட்ட எல்லா அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலும் கல்விகற்றோரிடையே வேலையின்மை உருவாகி வருகிறது அல்லது உருவாகத் தொடங்கியிருக்கிறது. நிரப்பப்படாத பல வெற்றிடங்களிருந்தும் இந்நிலை ஏற்படுகிறது. வேலைப் படையில் சேரப் புதிதாக வருபவர்களின் வேலை எதிர்பார்ப்புகள் கிடைக்கக் கூடிய வேலைகளிலிருந்து வர வர அதிகம் வேறுபடுகின்றன. உண்மையில் இத்தகைய வேறுபாட்டினால் வரும் பொருத்தமின்மை அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் தோன்றத் தொடங்கியுள்ளது. ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையில் இப்பிரச்சினை மிக மோசமாகவுள்ளது. இது பல வகையில் குறிப்பிடத்தக்க ஒருசாதனையாக விளங்கும் இலவசக்கல்வியின் துரித வளர்ச்சி காரணமாக ஓரளவு ஏற்பட்டதெனலாம். இன்னொரு காரணம், பிறிதொரு சாதனையாகக் கருதத்தக்க இலவசப்பங்கீட்டரிசியினால் (விலை குறைக்கப்பட்ட மேலும் ஒரு கொத்துடன்) குடும்பங்களுக்கு தம் உறுப்பினர்கள் ஆண்டுகள் பலவாக வேலையின்றியிருத்தலைத் தாங்கிக் கொள்ளல் மிக இலகுவாக்கப்பட்டிருப்பதாகும்.

இங்ஙனம், வெளியிடப்பட்ட வெளிப்படையான வேலையின்மையின் விகிதத்தின் கருத்துப்பற்றி பாரதூரமான ஐயப்பாடுகள் உள. வருமானம், சமூகமதிப்பு முதலியவைபற்றி வேறுபட்ட நாட்டமுடையோரின் எண்ணிக்கையைக்கூட்டி உருவாக்கப்பட்டதே வேலையற்றோர் பற்றிய புள்ளி விபர எண்ணிக்கை. அதில் அயலிலுள்ள எந்தவேலையையும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அதிககல்வியற்றோர், பாதுகாப்பான கந்தோர் வேலைக்காகக் காத்திருக்கும் உயர்நிலைப் பாடசாலையை விட்டு விலகியவர்கள், குறிப்பிட்ட சில நிர்வாகவேலைகளைத் தேடும் பல்கலைக்கழகப் பட்டதாரிகள் என்போர் இடம் பெறுகின்றனர்.

இங்கு அளிக்கப்படும் கல்வியின் இயல்புபற்றிய ஒரு பெரிய கேள்வியையும் இந்தப் புள்ளிவிபரஎண்ணிக்கைகள் எழுப்புகின்றன. பரீட்சைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதினால் இலங்கையின் கல்வி முறையை நாங்கள் கண்டித்தோம். பரீட்சைக்கு அத்தகைய முக்கியத்துவம் கொடுப்பதினால் அது இன்னும் அடிப்படையான கல்விக்கு வழிசெய்யாமல் மேலும் கூடிய பாடசாலைக் கல்விக்கும் பரீட்சைக்குமே வழிவகுக்கிறது. உதாரணமாக, ஆரம்ப பாடசாலைக்கல்வி அப்பாடசாலையை விட்டு நீங்கும் பெரும்பான்மையோரின் தொழிலாகிய கமத்தொழிலுக்கு மாணவர்களை ஆயத்தம் செய்யாமல் உயர்நிலைப் பாடசாலைக்கல்விக்கே அவர்களை ஆயத்தம் செய்கிறது. பாடசாலையை விட்டு விலகுவோரின் எண்ணிக்கையைக் கொண்டு பார்க்கும்போது அங்ஙனம் செய்வது மிக்க செலவான வழியாகவே இருக்கிறது. உயர்நிலைப் பாடசாலை அதன் மாணவர்களை க. பொ. த. சாதாரண தரத்திற்கும் பல்கலைக் கழகப் பிரவேசத்திற்கும் ஆயத்தம் செய்கிறது. அத்துடன் வேறுபல பாரிய செலவுகளும் ஏற்படுகின்றன. இம்முறைகளினால் பலமுறை திரும்பத் திரும்பத் முயற்சி செய்து பரீட்சையில் தோல்வியடைந்து விரக்தியடையும் பெரும்பான்மையான மாணவர்களுக்கா அல்லது இப்பரீட்சையில் எல்லாம் வெற்றி பெறும் சிறுபான்மையினருக்கா கூடியதீமை ஏற்படுகிறதென்பதைத் தெரிந்து கொள்ளல் சிரமமாகவிருக்கிறது. பின் கூறப்பட்டோர் படித்தலை ஒரு தொழிலைச் செய்வதற்கான அறிவைப் பெறுவதற்கான கருவியாகக்கருதாமல் ஒரு தொழிலைப் பெறுவதற்கான வாய்ப்பைத் தரும் சாதனமாகவே கருதும்படி பழக்கப்பட்டுவிட்டார்கள். அதனால் அவர்கள் பின்பு பெறும் தொழிலை பலவாண்டுகள் பாடங்களை உருப்போட்டதற்கான பயனாகக் கருதிக் கொள்வதில் வியப்பில்லை.

இந்தப் பிரச்சினை மேலும் மோசமடைவது திண்ணம். இப்போதுள்ள திட்டப்படி பார்க்கின் 1985 அளவில் வேலைப்படையில் சேர்பவர்களில் முக்காற்பங்கினர் சிலவாண்டு உயர்நிலைக் கல்வியைப் பெற்றவர்களாகவிருப்பார்கள். அதனாலேயே கல்விச் சீர்திருத்தத்தின் தேவை அவசரமாகிறது. இப்போதிருக்கும் ஒரேயடியாகத் தொடர்ந்து படிக்கும் முறையிலிருந்து நீங்குவதற்கான படிமுறைகளை நாங்கள் தெரிவிக்கிறோம். அதனை, ஓரளவு செய்கைமுறை வேலைகளுக்கும் உளச்சார்பு சோதனைகளுக்கும் கூடிய அழுத்தம் கொடுப்பதாலும், ஓரளவு இளைஞர்களை தமது கல்வியை, சிறப்பாகப் பாடசாலையை விட்டு விலகி பல்கலைக்கழகத்தில் பிரவேசிக்கும் காலத்தில், இடையில் நிறுத்தி உற்பத்தித்தொழில்களில் ஈடுபடுமாறு செய்வதின் மூலமும், செய்யலாம். பின்பு எல்லோரும் பல்கலைக் கழகக் கல்வியைப் பெறுவதற்கு விண்ணப்பிக்கமுடியும். பட்டம் பெற்ற பின்பு அவர்கள் வழக்கமாக தமது முன்னைய வேலையிடத்திற்கே திரும்புவர். இம்முறை, பல்கலைக்கழகத்தில் கூடிய உற்சாகத்தினைக் கூட்டக் கூடியதாயிருக்கும்.

ஆனால் இத்தகைய பாரதூரமான கல்விச் சீர்திருத்தங்கள் தம்மளவில் போதியவையல்ல. அவற்றிற்குத்துணையாக எழுதுவினைஞர், நிருவாகவேலைகளுக்கான சம்பளம் பிற வேறுபடுத்தும் காரணிகள் (இலவசபுகையிரதப் பிரயாண வசதி போன்றவை)

குறைக்கப்பட வேண்டும். இது நாட்டிற்கு ஓரளவு முன் மாதிரிகாட்டுவதாக அமையும் குடியியற் சேவை (சிவில் சேவை) க்கு விசேடமாகப் பொருந்தும். ஏற்கனவே இவ்வேறுபடுத்தும் காரணிகள் குறைந்து செல்வதற்கான அறிகுறிகள் தெரிகின்றன; எனினும் அவை தற்போதைய பாடசாலை விட்டு விலகுவோர்களின் மனப்பான்மையினை மிகமிகமெதுவாகவே மாற்றக் கூடியவை. வெள்ளைச்சட்டை உத்தியோகத்திற்கான வேட்கையைக் குறைப்பதற்குள்ள ஒரேயொரு வழி கந்தோர் வேலைகளை மிகக்குறைவான கவர்ச்சியுடையதாக்குவதே. எனினும் தற்போதுள்ள சம்பளத்தினைக் குறைப்பது இன்னல்களையும் அரசியல் நெருக்கடிகளையும் உண்டாக்கும். எனவே குடியியற் சேவையில் புதிதாகச் சேருபவர்களினை முன்பிருந்ததை விட எல்லா மட்டத்திலும் குறைவான சம்பள விகிதத்தில் சேர்ப்பதே ஏற்புடையதென நாங்கள் உணர்கிறோம்.

## பெருந்தோட்டங்களில் வேலையின்மை

இலங்கையில், இரண்டாவது பெரியவகை அமைப்புமுறை வேலையின்மையை தேயிலை, இறப்பர் பெருந்தோட்டங்களில் காணமுடியும். இங்கு இந்திய வம்சாவளி மக்கள் தொகையினர்க்கு குறைந்த கூலியுடன் பெரும்பாலும் பகுதிநேரவேலை வழங்கப்படுகிறது. இவர்களுக்கு பொருளாதாரத்தின் பிறதுறைகளில் வேலை பெறும் வாய்ப்பு மிகச் சிறிதாகவேயுளது. மொழி, சமூக, வகுப்புவாத வேறுபாடுகள் உழைப்பினசையுந் தன்மைக்கு தடையாயிருத்தல் பிறநாடுகளில் காணப்படாத ஒன்றல்ல. ஆனால் அதன் விளைவாக ஒருதுறையில் மிதமிஞ்சிய நெரிசல் ஏற்படல் இலங்கையிலுள்ளதைப் போன்று மோசமாகவிருத்தல் அரிதாகவேயுள்ளது.

பெருந்தோட்டங்களில் வேலை வாய்ப்புப் பெருகுவதற்கான எதிர்கால வாய்ப்புக் குறைவாகவேயுளது. எனவே அங்குள்ள வேலையின்மையின் போக்கு இலங்கை இந்திய ஒப்பந்தம் 1964 (சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தம்) செயற்படுத்தப்படும் வேகத்திலேயே பெரிதும் தங்கியுள்ளது. அதன்படி இவ் வேலைப்படையின் பெரும்பகுதி இந்தியாவுக்குத் திருப்பியனுப்பப்படல் வேண்டும் அல்லது இலங்கைக் குடியுரிமை அவர்களுக்கு வழங்கப்படவேண்டும். இதுவரையில இந்த ஒப்பந்தம் சிறிதளவே செயற்படுத்தப்பட்டுள்ளது. அதனைச் செயற்படுத்தல் பெருந்தோட்டங்களின் கூலி, வேலை நிபந்தனைகள் போன்றவற்றை பிறதுறைகளுக்கு ஒத்ததாக ஆக்கவேண்டிய விருப்பத்தையும் நிர்ப்பந்தத்தையும் ஏற்படுத்தும். இது எவ்வகையிலும் அவற்றிலிருந்து பெறும் இலாபத்தை ஓரளவு குறைக்கும். இந்த இலாபம் ஏற்கனவே ஏற்பட்ட அப்பொருட்களின் விலைவீழ்ச்சியினால் குறைக்கப்பட்டுவிட்டது. எனினும் அவை அரசாங்கத்திற்கு பெருமளவு வரி வருமானத்தைக் கொடுக்கும் பொருளாதாரத்தின் முக்கிய ஆதாரமாக இருந்து வருகின்றன.

## கொள்கை இக்கட்டுகள்

இலங்கையறிக்கை உண்மையில் ஒரு உயர்மட்ட வேலைவாய்ப்பினை உருவாக்குவதற்குத் தேவையான கொள்கை முயற்சிகளின் முக்கியத்துவத்தைக் காட்டுகிறது. ஆண்டுகள் பலவாக படிப்படியாக வளர்ந்த இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்தல் எவ்வகையிலும் இலகுவானதல்ல. குடித்தொகை வளர்ச்சி, அதிகரிக்கும் கல்வி, வேகமாக உயரும் அரிசிமானியச் செலவு உட்பட்ட நலம் பேணல் முயற்சிகள் என்பவற்றுக்கு ஏற்புடையதாகப் பொருளாதாரம் விரிந்து பன்முகப்படத் தவறிவிட்டது. ஒரு அரசியல் பொருளாதார அமைப்பாகக் கருதும்போது இலங்கை உலகப் பொருளாதாரத்தின் அபிவிருத்திகளுக்கு, குறிப்பாக அதன் மிக மோசமான வர்த்தக மாற்று விகிதத்திற்கு ஏற்பப் போதியளவு மாறவில்லை.

சமூக பொருளாதார முன்னேற்றங்களுக்கிடையில் சம நிலையின்மையின் ஒரு அறிகுறியாக பெருமளவு வேலையின்மை விளங்க, பிறிதொரு அறிகுறியாக முற்றிய சென்மதிநிலுவைப் பற்றுக்குறை இருந்தது. வட்டி மிகுந்த குறுகிய காலக் கடன்கள் குவிவதற்கு வழிவகுத்த இறுக்கமான செலாவணி, இறக்குமதிக் கட்டுப்பாடுகளிருந்தபோதும் மொத்தத் தேசிய உற்பத்தியின் 5% மேல் சென்மதி நிலுவைப் பற்றுக்குறை சென்று கொண்டிருக்கிறது. (இதனால் வட்டி மிகுந்த குறுகிய காலக்கடன்கள் குவிகின்றன). மேற்குறித்த இரு அறிகுறிகளும் இணைக்கப்பட்டவை. வெளிநாட்டுச் செலாவணிப் பற்றுக்குறை கைத்தொழில்களுக்குத் தேவையான மூலப்பொருட்களுக்கும் உப உறுப்புகளுக்கும் தட்டுப்பாட்டை ஏற்படுத்துகிறது. ஓர் உயர்மட்ட வேலை வாய்ப்பினைச் சென்றடைவதற்கு, வேறுபலநாடுகளில் உள்ளதைப் போல், இலங்கையிலும் இந்த இரு வகைச் சமநிலையின்மைகளும் நீக்கப்படவேண்டும். இதற்கு புதிய ஏற்றுமதிகளை அபிவிருத்திசெய்யும் பெரிய முயற்சி தேவையாகின்றது. கைத்தொழிற் பொருட்கள், கூடிய நுட்ப முறைகளில் உருவாக்கப்பட்ட மரபுவழி ஏற்றுமதிப் பொருட்கள் ஆகிய இருவகையும் அதிலடங்கும். இதற்கு வேலை வழங்கப்படும் ஒவ்வொரு மனிதனுக்கும் குறைவான வெளிநாட்டுச் செலாவணியே தேவைப்படும் துறைகளில் முதலீடு செய்வதினை ஒருமுகப்படுத்தலும் அவசியமாகிறது.

மேலும், இலங்கை எதிர்காலத்தில் மாறும் நிலைமைகளுக்கேற்ப மாற்றங்களையேற்படுத்த நிறுவன மாற்றங்கள்தேவையாகின்றன. சிறந்த கூடிய இன்று மட்டுமான புள்ளி விபரங்கள் ஒரு தேவையாகும். விசேடமாக முக்கிய விவாத விடயங்களாகிய அமைப்புமுறை வேலையின்மை பற்றி அத்தகைய விபரங்கள் தேவையாகும்.உதாரணமாக அரசாங்கத்திற்கு பாடசாலையை விட்டு விலகுபவர்கள் வேலைக்காகக் காத்திருக்கும் காலம் குறுகி வருகிறதா அல்லது நீண்டு வருகிறதா என்பது பற்றியும், குறிப்பாக எத்தகைய பதவி வெற்றிடங்கள் இருக்கின்றன என்பது பற்றியும் விபரங்கள் தேவைப்படலாம். வேலையின்மையின் அளவு, கருத்து பற்றி ஆராயக்கூடிய மேலும் ஆழமான மாதிரிக் கணக்கெடுப்புகள் தேவைப்படுகின்றன. அத்துடன் எந்தவேலைகளை ஏற்றுக்கொள்ள மக்கள் ஆயத்தமாக இருக்கிறார்கள், விவசாயத் துறையில் வேலைசெய்யும் (விசேட

மாகப் பெருந்தோட்டங்களில்)நேரத்தின் அமைப்பு என்பவைபற்றியும் அத்தகைய கணக்கெடுப்புகள் தேவைப்படும்.

மேற்கொள்ளப்பட வேண்டிய கொள்கை நடவடிக்கைகளை ஆலோசனை கூறும்போது நாங்கள் அரசாங்கத்தின் சோசலிச நோக்கங்களையே இயல்பாக ஏற்றுக்கொண்டோம். இந்த அம்சத்தை யான் அழுத்துவதின் காரணம் சில சர்வதேச தூதுக் குழுக்கள் தேசியமயமாக்கல், விசேடமாக வெளிநாட்டுக் கம்பனிகளை அங்ஙனம் செய்தல்போன்ற நோக்கங்களை கொள்கையளவில் ஏற்றுக்கொள்ள சிரமப்பட்டிருக்கின்றன என்பதினாலேயாகும். அதனால் அவை அரசாங்கம் தன் அடிப்படை உத்திமுறைகளை உண்மையில் கைவிடவேண்டுமென்ற கருத்துப்பட தகவுரைகளை வழங்கின. எப்படியாயினும் ஒருவர் எதிர்பார்ப்பதுபோல் இது சிக்கலான பிரச்சினையாக உருவெடுக்கவில்லை. மிகப் பாரதூரமான அமைப்புச் சீர்திருத்தங்களின் தேவை குறிப்பாக மிகப் பாரதூரமான கல்வி, சம்பள அமைப்பு, காணியுரிமை பற்றிய சீர்திருத்தங்கள், வேலையின்மையைக் குறைக்க அல்லது அதன் அதிகரிப்பையாவது தவிர்க்க நினைக்கும் எந்த அரசாங்கத்தையும் எதிர்கொள்பவையாகும்.

அங்ஙனமே தியாகம் செய்ய வேண்டியதின் தேவையுமாகும். வேலைவாய்ப்பு உத்திக்காக பெரும்பாலும் எந்த நாட்டிலும் (ஆனால் விசேடமாக இலங்கையின் இக்கட்டான நிலையில்) ஏற்கனவே வேலையிலிருப்போரின் வருமானத்தில் கட்டுப்பாடுகள் தேவையாகும்.

வேலையின்மையில் விரைவான குறைப்பினை செய்வதற்கான திட்டங்களை உருவாக்கும்படி அரசாங்கம் எங்களைக் கேட்டிருந்தது. ஏப்ரல் மாதப் பயங்கரவாதக் கிளர்ச்சி அத்தேவைக்கு மேலும் கூடிய அழுத்தத்தைக் கொடுத்தது. அதன்பின் தெரிந்தெடுப்பதற்கான கொள்கைகள் மேலும் தீவிரமானவையாகக் காணப்பட்டன.

*அரசாங்கத்தின் 1972—1976 ம்* ஆண்டுகளுக்கான உத்தியோகபூர்வமான வரைபுத் திட்டத்திலுள்ள உற்பத்தி, வேலை வாய்ப்பு இலக்குகளை எமது ஆரம்ப நிலையாக நாங்கள் எடுத்துக் கொண்டோம். அதிலிருந்து 1976 அளவில் வேலையின்மையை மிதமானவளவுக்குக் குறைக்க வேண்டுமாயின் திட்டத்திலுள்ளதை விடமேலதிகமானவிசேடநடவடிக்கைகளும் தேவையென்ற முடிவுக்கு வந்தோம்.

அந்த விசேட நடவடிக்கைகள் ஒரு பெருமளவு கிராமப்புற பொது வேலைத் திட்டத்தை உள்ளடக்கும். அது நாங்கள் மேலே குறித்த நிலச் சீர்திருத்தத்திற்குத் தேவையான கிராம கீழ்மட்ட அமைப்புகளை உருவாக்குவதின் மூலம் அதற்கு ஆதரவும் துணையும் அளிக்கும். சிறுகாணிச் சொந்தக்காரர் தம் காணிகளைக் குத்தகைக்கு விடச் சம்மதிக்கின் அவர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்பு அளிப்பது உறுதியளிக்கப்படும். இங்ஙனம் கிடைத்த காணிகளை ஒன்றுகச் சேர்த்து அதிகாரத்திலுள்ளோர் உருப்படக்கூடிய விவசாயத்துண்டுகளை உருவாக்கலாம். பெருந்தோட்ட வேலையாட்களுக்கும் காணியற்றவர்களுக்கும் இத்திட்டத்தின் கீழ் வேலை கொடுக்கலாம்.

ஆனால் உயர்நிலைப் பாடசாலைச் சான்றிதழ் உடையவர்களை (விசேடமாகப் பெண்களை) இந்த வாய்ப்புகள் திருப்திப்படுத்தாது. பெரிதாக விரிவுபடுத்திவேண்டிய கல்வி சுகாதாரவேலைப்படையில் அவர்களில் சிலரைச் சேர்த்துக் கொள்ளலாமென நாங்கள் ஆலோசனை கூறுகிறோம். எவ்வகையிலும் இந்தச் சேவைகளில் திருத்தங்கள் தேவைப்படுகின்றன. விசேடமாகக் கிராமப் புறங்களில் வேலை வாய்ப்பு, நலம் பேணல், காரணங்களுக்கு முற்றிலும் வேறுபட்டதாக விவசாய விரிவாக்கலுக்கு அரண் செய்வதற்கு இத்தகைய சேவைகள் அவசியம். பெருந்தோட்டப் பிள்ளைகளை இலங்கை வாழ்க்கைமுறையோடு ஒன்றிணைப்பதற்கு குறிப்பான கல்வி முயற்சிகள் தேவைப்படும்.

ஒரு தேசிய இளைஞர் சேவையை அமைக்க வேண்டுமென யோசனை கூறுகிறோம். இது இளைஞர்க்கான பாரித்த பாசறைத் திட்டமாக இருக்காது (ஆனால் அவற்றை அமைத்தலும் கூட நல்லதே). இளைஞர்கள் தேசிய சேவையில் இருப்பதாகக் கருதப்பட்டு அவர்கள் தொழில் பார்க்கும் முதல் மூன்று வருடங்களுக்கும் அவர்களின் கல்வித் தகுதியைக் கவனிக்காமல், அவர்களின் வயதோடு முக்கியமாகத் தொடர்புபடுத்தப்பட்ட விகிதத்தில் ஊதியம் அளிக்கப்படவேண்டும். அவர்கள் ஒழுங்குபடுத்தப்பட்ட இளைஞர் பாசறைகளிலோ அல்லது குடியியல் நிருவாக சேவையிலோ அல்லது ஒரு அரசாங்கக் கூட்டுத்தாபனத்திலோ அல்லது தனிப்பட்ட வேலை கொள்வோரிடமோ எங்கு வேலை செய்தாலும் இந்த ஊதியமே அளிக்கப்படவேண்டும். ஒழுங்குபடுத்தப்பட்ட இளைஞர்க்கான திட்டங்களில் வேலை செய்பவர்கள் அடிக்கடி தங்களை சிறப்புரிமை குறைந்தவர்களாகக் கருதுகின்றனர். எல்லா இளைஞர்க்கும் பொதுவான கூலியளவுத் திட்டம் அத்தகைய உணர்வினை நீக்க உதவும். அதனால் வேறுபல நன்மைகளும் உண்டாகும். இளைஞர்க்கான வேலை வாய்ப்பைப் பெரிதும் விரிவுபடுத்துவதற்கு இது வழி செய்யும். இளைஞர்கள் சுயவேலைவாய்ப்பு அமைப்புகளை (அதில் அவர்களின் வருமானம் மட்டுப்படுத்தப்படமாட்டாது) உருவாக்க இது உற்சாகமளிக்கும். இறுதியாக, எழுதுவினைஞர், நிருவாகத் தரத்தில் புதிதாக வேலையில் சேருவோருக்கு மேலே கூறப்பட்ட குறைக்கப்பட்ட சம்பள விகிதத்தைப் புகுத்துவதனை இது இலகுவாக்குகிறது. அத்துடன் ஏற்கெனவே அரசாங்க சேவையிலுள்ள, விசேடமாக உயர் மட்டத்திலுள்ளவர்களின் சம்பளம் பிறநன்மைகள் சிறிது குறைக்கப்படுவதற்கான நிலையை இது உருவாக்கலாம்.

இத்தகைய பாரிய வேலை வாய்ப்புத்திட்டத்தைச் செயற்படுத்திக் கொண்டு வெளிநாட்டுக் கொடுப்பனவுப் பற்றுக் குறையைச் சீராக்குவதற்கு மிகப் பெரிய அரசாங்க வருமானத் (Fiscal) திட்டம் தேவையாகிறது. அரிசிமானியக்குறைப்பினைச் செய்யவேண்டுமெனக் கூறும் எவரும், விசேடமாக ஒரு வெளிநாட்டவர், ஒரு பெரிய பொறுப்பை ஏற்றுக்கொள்கின்றார். எனினும் விசேடமாக இலங்கை இன்னும் இறக்குமதி செய்

யப்பட்ட அரிசியிலேயே பெரிதும் தங்கியிருப்பதினுல், அதில் கணிசமான குறைப்பினைச் செய்வதிலிருந்து எப்படித் தப்பமுடியுமெனத் தெரியவில்லை.

இங்ஙனம் சேமிக்கப்படும் பணம் வேலை வாய்ப்பினைப் பெருக்குவதில் மட்டும் செலவழிக்கப்படாமல், அரிசி மானயக் குறைப்பினுல் அதிகம் தாக்கப்படக்கூடிய சமூகப் பகுதியினருக்கு (இளம்பிள்ளைகள், தேசிய உதவிப் பணம் பெறுவோர் முதலானவர்க்கு) உதவக்கூடிய வகையில் தெரிந்தெடுத்த நடவடிக்கைகளிலும் செலவு செய்யப்படவேண்டுமென எமது அறிக்கை குறிப்பிடுகிறது. இதன் விளைவாக சமூக நலன் குறைக்கப்படாமல், அதிகரிக்கப்படலாம். இவற்றுடன் சேர்த்து செல்வந்தர் மீது கூடிய வரிவிதிப்பு, உணவுப் பொருட்கள் தவிர்ந்த ஏனைய இறக்குமதிப் பண்டங்கள் மீது கூடிய தீர்வை என்பனசெயற்படுத்தப்படவேண்டும். இத்தகைய தீர்வைகள் மூலம் மூலதனப் பொருட்களுக்கும், அத்தியாவசியமற்ற நுகர்வுப் பொருட்களுக்கும் அளிக்கப்படும் மறைமுகமானயம் நீக்கப்படும்.

நீண்டகால வேலை வாய்ப்பு உத்திக்கு கூலியைக் கட்டுப்படுத்தல் தேவையாயினும், உயர்ந்த வேலை வாய்ப்பு மட்டத்தை ஒரு ஐந்தாண்டுகாலத்தில் அடைவதாயின் அக்கட்டுப்பாடு மிக இறுக்கமாகவும் இருக்கவேண்டும். உண்மையில் நுகர்ச்சியில் ஏற்படும் எல்லாவித அதிகரிப்பையும் புதிதாகத் தொழில் பெற்றோரே பெறுவர். தற்போது தொழிலிலிருப்போருக்கு மெய்யான வருமான அதிகரிப்பு எதுவும் ஏற்படும்வாய்ப்பில்லை.எழுதுவினைஞர், நிருவாக சேவைகளில் உள்ளவர்களுக்கு உண்மையில் ஒரு நுகர்ச்சிக் குறைவே ஏற்படும். ஏற்கனவே வேலையிலிருப்போருக்கு வேலையில்லாதிருந்த குடும்ப உறுப்பினர்களைக் காப்பாற்றும் பொறுப்பு குறைக்கப்படும். இதனுல் அவர்களுக்கு ஏற்படும் பாதகமான தாக்கம் குறைக்கப்படும். எனினும் இது செயற்படுத்துவதற்குச் சிரமம் மிகுந்த கடுமையான கொள்கையாகும். அதற்கு தொழிலாளர் நிறுவனங்களினது ஒத்துழைப்பும், கூலி அதிகரிப்பினைக் கட்டுப்படுத்தும் ஒழுங்குகளை செய்வதும்அவசியமாகும்.

முழு வேலை வாய்ப்பினையடைவதற்கான விரைவான போக்கிற்குத் தேவைப்படுபவைகளை நிரல்படுத்துவது அது எவ்வளவு இடர் மிகுந்த காரியமென்பதனையே காட்டுவதாகவிருக்கும். ஆனுல் அக்காரணத்திற்காக அது அரசியல்ரீதியில் சாத்தியமற்றதென வெறுமனே சொல்ல வேண்டுமென நாம் நினைக்கவில்லை. நாங்கள் தீர்மானிப்பதற்குரிய விடயமல்ல அது. உயர்மட்ட வேலைவாய்ப்பினையடைய என்ன தேவையென்று எங்களிடம் விடுக்கப்பட்ட வினுவுக்கு நாங்கள் விடையளித்தோம். அதற்கான எமது விடையின் கடுமை இங்குள்ள பிரச்சினையின் கடுமையையே பிரதிபலிக்கிறது. கடுமையான வேலையின்மையால் வருந்தும் பிற நாடுகளுக்கும் எமது தீர்வின் முடிவுகள் பயனுடையவையாகலாம். சிறப்பாக அந்நாடுகளில் வேலையில்லாதிருப்போர் பெரும்பாலும் பெருமளவு கல்வி கற்றவராயின் இது சாலப் பொருத்தமுடையது. இலங்கையின் அரசாங்கமோ அல்லது வேறெரு நாட்டின் அரசாங்கமோ இத்தகைய திட்டத்தைச் செயற்படுத்துமோ வென்பது வேலையின்மையைக் குறைப்பதற்கு அது எவ்வளவு முன்னுரிமை கொடுக்கிறதென்பதிலும், அதனைய டைவதற்கான நடவடிக்கைகளுக்கு அரசியல் ஆதரவு போதியதாக இருக்கிறதாவென்பதிலுமே தங்கியுள்ளது.

பிற உலக நாடுகள் உதவி செய்வதற்கு கூடிய முயற்சி செய்யாவிடின் இந்த நடவடிக்கைகளின் தாக்கம் உண்மையில் பழுமிகுந்ததாகிவிடும். இறக்குமதியில் அதிகம் தங்கியுள்ள இலங்கைபோன்ற நாட்டிற்கு வெளிநாட்டுச் செலாவணிப் பற்றுக் குறை ஒரு முக்கிய தடையாகவேயிருக்கும். எனவே பொருளாதார அமைப்பில் செய்யவேண்டிய பெருமளவு மேற் குறித்த மாற்றங்களைவிட பெருமளவு வேலையின்மையைக் குறைக்க வெளிநாட்டுச் செலாவணி விடயத்தில் ஆறுதலளிக்கும் உதவி தேவையாகிறது.

இது ஓரளவு வியாபார ஒழுங்குகளிலும் தங்கியிருக்கிறது. சர்வதேச தேயிலை ஒப்பந்தம் ஒன்றினைச் செய்தல், தேயிலையை இன்னும் அதிக பதனிடப்பட்ட முறையில் விற்பனை செய்தல் தெங்குப் பொருட்களின் ஏற்றுமதியை அதிகரித்தல், கைத்தொழிற் பொருட்களை ஏற்றுமதி செய்தல் என்பன அவற்றிலடங்கும். இவற்றிற்காக இலங்கை பல துறைகளில் புதிய கொள்கைகளைச் செயற்படுத்தவேண்டியிருக்கும். அதே சமயத்தில் இலங்கையுடன் வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் உதவி செய்யும் கூடிய ஆக்கபூர்வமான நோக்குடன் செயற்படுவதும் அவசியமாகிறது.

இது ஒரு வகையில் வெளிநாட்டு தவியைப் பொறுத்திருக்கிறது. வர்த்தக மாற்று விகிதத்தின் மிகமோசமான நிலையின் தாக்கத்தோடு ஒப்பிடும்போது இலங்கை பெற்ற வெளிநாட்டுதவி மிகச்சிறிய அளவேயாகும். மேலும், அவ்வுதவியில் பெருமளவு பயனுள்ள முறையில் திட்டங்களுக்கான உதவியாக, அதாவது சென்மதி நிலுவையைச் சரிசெய்ய உதவுவதாக அமைந்திருந்தபோதும் அது வழக்கமான குறைபாடுகளை உடையதாகவேயிருக்கிறது. பெரும்பாலும் அவ்வுதவிகள், உதவி வழங்கும் நாட்டின் கைத்தொழிலோடு பிணைக்கப்பட்டுள்ளது. சில உதவிகள் இலங்கையினுல் செலுத்த இயலமுடியாத வட்டி விகிதங்களில் வழங்கப்படுகின்றன. அவற்றின் வட்டியை, மேலும் பிறவெளிநாட்டுதவியைப் பயன்படுத்திமட்டுமே செலுத்தக் கூடியதாகயிருக்கிறது. மேலும் இந்த உதவிகள் வழங்கப்படுது குறித்து வெகு காலம் முன் கூட்டியே உத்தரவாதம் அளிக்கப்படின் அவற்றை நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு அடிப்படையான தீர்வு காணப் பயன்படுத்தலாம். ஆனுல் அங்ஙனம் நடைமுறையில் செய்யப்படுவதில்லை இலங்கை போன்ற சிறிய நாட்டின் பொருளாதாரத்திற்கு போதிய நிதியுதவியை முன் கூட்டியே உத்தரவாதம் செய்தல் செலவு மிகுந்ததாக இருக்காது. இலங்கையின் பொருளாதாரவெற்றி இத்தகைய பிரச்சினைகளால் வருந்திக்கொண்டிருக்கும் வேறு பல அரசாங்கங்களுக்கு தாங்களுங் கூட தம்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம் என்ற நன்னம்பிக்கையை ஏற்படுத்தும்.

(நன்றி, International Labour Review)

# உலகப் பரப்பின் ஒவ்வொரு கணமும்....

எம். ஏ. நுஃமான்

குளத்தங் கரையில் குந்தி இருக்கிறேன்.
அழகழகாக, அந்தி மாலையில்
குளத்து நீருட் கொட்டிய நிறமெலாம்
கரைந்து கரைந்து கறுப்பாகின்றன.

விரைந்துசெல்கின்றன பறவைக்கூட்டம்.
எருமைகள் கூட எழுந்துசெல்கின்றன
தவளை ஒன்றும் சப்திக் கின்றது.

குளத்தங் கரையின் குளிர்ந்த புற்களைப்
பச்சைக் கம்பளப் படுக்கையாய் நினைத்துச்
சாய்ந்து கிடக்கிறேன்;
சரிவில் மாடுகள்
மேய்ந்து மேய்ந்து வீடுசெல்கின்றன.

ஆயினும் நான் இங்கமைதியாக
ஓய்வு தேடி உட்கார்ந்திருக்கிறேன்.

யாரோ ஒருவன் அமைதியாக
ஓய்வு தேடி உட்கார்ந்திருக்கவா
புற்கள் இங்கு புதிதாய் முளைத்தன?
புற்களின் ஊடு புகுந்து திரியும்
சிற்றெறும்பிதனைச் சிந்தனை செய்யுமா ?
என்பதைப்பற்றி ஏதும் அறியேன்.
ஆயினும் நான் இங்கமர்ந்திருக்கின்றேன்.

மேய்ந்து மேய்ந்து வீடுசெல்கின்ற
மாடுகள் பற்றியும்
வயல் வரம்புகளிற்
குந்தி இருக்கும் கொக்குகள் பற்றியும்
சத்தமிட்ட தவளை பற்றியும்
புத்தி போன போக்கில், எதையோ
நினைந்து நினைந்து நெடுமூச்செறிகிறேன்.

இனையவை பற்றிநான் எண்ணுதல் போல,
இந்த மனிதன் ஏன்இங் கிருக்கிறன் ?
இந்த மனிதன் யார் ? என இவைகள்
என்னைப் பற்றியும் எண்ணுதல் கூடுமா ?

என்னைப் பற்றி எண்ணவிடினும்
புதிதாய் வளர்ந்த புற்களில் அமர்ந்து, நான்
எதை எதைப் பற்றியோ எண்ணுதல் போல
எதை எதைப்பற்றியோ இவைகளும் எண்ணிச்
செல்லுதல் கூடுமா ?

திரும்பிப் பார்க்கிறேன்.

வீதியில் கார்கள் விரைந்து செல்கின்றன.
வீதியில் மனிதரும் மிகுந்து செல்கின்றனர்.
எங்கெங்கேயோ இவர் செல்கின்றனர் !

எங்கெங்கேயோ ஏகும் இவர்களுள்
துன்ப நினைவுத் தொல்லைகள் உடனும்
இன்ப நினைவின் இனிமைகள் உடனும்
செல்லுகின்றவர்கள் சிலர் இருப்பார்கள்...
இல்லை என்றுநான் எப்படிச் சொல்லுவேன் ?

அவசரமான ஆயிரம் வேலைகள்
இவர்களுக் கிருக்கலாம் !
ஆயினும் இங்கு நான்
இவர்களைப்பற்றி எண்ணுதல் போல
இவர், எனைப் பற்றியும் எண்ணுதல் கூடுமா ?
என்பதைப்பற்றியும் ஏதும் அறியேன் !

இந்நேரத்தில் எதை எதைப் பற்றியோ
இங்கிருந்து நான் எண்ணுதல் போல
எங்கெங் கேயோ எத்தனை பேரோ
எதை எதைப் பற்றியோ எண்ணுதல் கூடுமே !

இதோ ! என் நாட்டில் இனிய சூரியன்
அஸ்த்தமிக்கின்றது;
ஆயின் இந்நேரம்
வேறொரு நாட்டில் விடிந்துகொண்டிருக்குமே !

இங்கே பறவைகள் இல்லம் செல்கின்றன.
அங்கே பறவைகள் அணியணியாக
இரைதேடற்காய் எழுந்து செல்லுமே !

இரவுணவுக்காய் இவர்கள் செல்கையில்
காலைப் பானம் கைகளில் ஏந்தி
அங்கே அவர்கள் அருந்தலாம் அன்றோ ?
இங்கே கூம்பிய இனிய தாமரை
அங்கு மலர்ந்தே அருணன் அன்புடன்
தங்கம் தெளிப்பதைத் தாங்கலாம் அன்றோ ?

யாரோ ஒருவன் நீராடற்காய்
நீருள் துள்ளி நீந்தத் தொடங்கலாம்
யாரோ ஒருத்தி, தன் மார்புக் கச்சையை
அணிந்து கொள்ள ஆரம்பிக்கலாம்.

இந்நேரத்தில் எதை எதைப் பற்றியோ
இங்கிருந்து நான் எண்ணுதல் போல
எங்கெங்கேயோ எத்தனை பேரோ
எதை எதைப் பற்றியோ எண்ணுதல் கூடுமே !

இதோ நான் கிழக்கில்
என்முகம் திருப்பிக்
கிழக்கில் இருண்டு கிடப்பதைக் காண்கிறேன்.
கிழக்குத் திசையின் கிழக்கில் இந்நேரம்
நள்ளிரவாகி நாடுகள் உறங்குமே !
வெள்ளிகள் வானில் மினுங்கிக் கிடக்குமே !
சந்திரன் எழுந்து தண்ணொளி சிந்துமே!

சந்திரன் எழுந்து தண்ணொளி சிந்துமா ?
அன்றேல் மேகம் அணைத்துக் கிடக்குமா ?
என்பதைப் பற்றியும்
ஏதும் அறியேன் !

ஆயினும் வீதியில் ஆட்கள் செல்லலாம்.
எங்கோ ஒருவனின் இல்லத் திருந்து
குறட்டைச் சத்தமும் கொஞ்சம் கேட்கலாம் !
எங்கோ ஒருவனின் இல்லத் திருந்து
குழந்தையின் அழுகுரல் கேட்கவும் கூடும்.
இனிய உணர்வுடன் எவனோ ஒருவன்
மனைவியை அணைத்து மகிழவும் கூடும் !

இன்னும் ஒருவன் தன் காதலியின்
கன்னம் வருடிக் கதைக்கவும் கூடும்!
இரவு விடுதியில் எவளோ ஒருத்தி
ஆடை களைந்தே ஆடவும் கூடும்!
வேத நூலை விரித்துவைத்தே
ஓதி ஒருவன் உருகவும் கூடும்!
குடியானவனின் குடிசையில் யாரும்
இருமிக்கொண்டும் இருக்கலாம் அன்றோ?

இந்நேரத்தில் எதை எதைப் பற்றியோ
இங்கிருந்து நான் எண்ணுதல் போல
எங்கெங் கேயோ எத்தனை பேரோ
எதை எதைப் பற்றியோ எண்ணுதல் கூடுமே!
இதோ, இந்நேரம் எத்தனை பேரோ
மரணவஸ்தையில் வருந்துதல் கூடும்
பிரசவ வேதனைகொண்ட பெண்கள்
எத்தனை பேரோ இரங்குதல் கூடும்
எத்தனை எத்தனை இடத்தில் இந்நேரம்
மரண ஊர்வலங்கள் வருதல் கூடுமோ?

இங்கிவ் விடத்தில் இருந்தபடியே
நண்பரைப் பற்றியும் நான் நினைக்கின்றேன்
கண்கள் காணுக் கனதொலைவுள்ள
நண்பரின் நிலைமையை நான் அறிதற்கும்
இயலுமாயின் எவ்வாறிருக்கும்...!
ஆயினும் அவர்களை அன்புடன் நினைக்கிறேன்;
வாயில் அவர்பெயர் வந்து வந்து
நேயம் உணர்த்தி நிற்கின்றனவே!

நேயம் உணர்த்தி நிற்கும் செய்தியை
அங்கே அவர்களும் அநுபவிப்பார்களா
என்பதைப் பற்றியும் ஏதும் அறியேன்.
அன்புடையோராய் ஆகிய பின்னும்
ஒன்ருய் வாழ ஒண்ணுவதில்லையே!

இந்நேரத்தில் இங்கிருந்து நான்
எதை எதைப் பற்றியோ எண்ணுதல் போல
எங்கெங்கேயோ எத்தனை பேரோ
எதை எதைப் பற்றியோ எண்ணுதல் கூடுமே!
இந்த மாதிரி எண்ணிச் செல்கையில்
இந்த உலகுதான் எத்தனை பெரியது...!
மேற்கை நோக்கி விரைந்து சென்ருல்
மேற்கோ மேற்கிலே விரைந்து செல்கின்றது.
வடக்கை நோக்கி வடக்கே சென்ருல்
வடக்கு வடக்கிலே வழிச்செல்கின்றது.
கிழக்கை நோக்கிக் கிழக்கே போகிறேன்
கிழக்கு கிழக்கெனக் கிழக்கே போகிறேன்
தெற்கை நோக்கித் தெற்கே சென்ருல்
தெற்கு தெற்கிலே செல்லக் காண்கிறேன்!

இப்படியாக என்னைச் சுற்றிய
இந்த உலகுதான் எத்தனை பெரியது!

என்னைச் சுற்றிய இப்பெரும் உலகைச்
சின்னஞ் சிறியதாய்ச் சிருஷ்டித்திருந்தேன்.
இதோ என் கிழக்கென எட்டிப் பிடித்தேன்!
இதோ என் மேற்கென எண்ணிக் கொண்டேன்!

இந்தமாதிரி எண்ணும் போதில்
இந்த உலகுதான் எத்தனை சிறியது!
மற்றவைகளினை மறந்து விட்டு
என்னைப்பற்றியே எண்ணும் போதில்
இந்த உலகுதான் எத்தனை சிறியது!

குளத்தங் கரையின் குளிர்ந்த புற்களைப்
பச்சைக் கம்பளப் படுக்கையாய் நினைத்து
ஓய்வுக்காகச் சாய்ந்திருக்கின்ற
இந்நேரத்தில்... இந்நேரத்தில்
இந்த உலகின் சந்தையில் நிகழும்
நிகழ்ச்சிகள் பற்றி நினைத்துப் பார்க்கையில்
அக உலகத்தின் ஆழத்தே நான்
எதை உணர்கின்றேன் என்பதைத் தெளிவாய்
எடுத்துச் சொல்ல இயலவில்லையே!

எறும்பொன் றெனது எழுதும் தாளில்
உலாவி உலாவி ஊர்ந்து திரிந்தது.
ஏன் அவ்வெறும்பென் எழுதும் தாளில்
ஊர்ந்து திரிந்ததோ?
ஒவ்வொன்ருக
என்ன எழுதினேன் என்பதை அறியவா?

சின்ன எறும்பு செல்லும் வழியிலே
எனது தாளும் எதிர்ப்பட்டதனுல்
தனது கால்களால் தாண்டித் தாண்டிச்
செல்லற்காகவே திரிகிறதன்ருே?
இல்லை என்று நான் எப்படிச் சொல்லுவேன்!

ஒவ்வோர் உயிரும் ஒவ்வோர் உலகாய்ச்
சுற்றிச் சுற்றிச் சுழல்கிற வழியில்
மற்றவற்றையும் வந்து காண்கின்றன.
தனியே செல்லும் தங்கள் பாதையில்
துணைநிற்பவற்றுடன் துணையாய் நின்றும்
எதிர்த்து நிற்பதை எதிர்த்து நின்றும்
சுற்றிச் சுற்றிச் சுழன்றுசெல்கின்றன.

சுற்றிச் சுற்றிச் சுழலும் உயிர்களின்
வழியிலே நானும் வந்துநிற்கின்றேன்.
இதனை விட்டு நான் எங்குதான் செல்வேன்.....?
பாழ்வெளிக் கப்பால் தனித்த பாதையில்
சுற்றிச் சுற்றி நான் சுழலவும் கூடுமா?

யார் என் நண்பர்? யார் என் பகைவர்?
எனது சுழற்சியில் இவர்களைக் காண்பேன்
மற்றவை எனது வழியிலே வருக!
மற்றவை எனது வழியிலே வருங்கால்
சுற்றலின் முடிவு சோபனம் ஆகுக!

இருட்டு வந்தெனை எழுப்பிவிட்டது.
மரங்கள் அசைந்து மகிழும்படியாய்க்
காற்று வீசிக் கடந்து சென்றது.
மேற்கில் இருந்தோர் வெள்ளி வீழ்ந்தது.
குவளை பூத்த குளத்தில் இருந்து
தவளை ஒன்று சத்தமிட்டது.
ஆட்கள் யாரோ யாரையோ நோக்கிக்
கூக்குரல் இட்டுக் கூப்பிடுகின்ருர்.
ஆலையின் இலைகளில் அணைந்தும் ஒளிர்ந்தும்
மின்மினிப் பூச்சிகள் மினுங்குகின்றன.
இன்னும் இன்னும்
இப்படி இப்படி
எல்லா உயிர்களும் இயங்குகின்றன
போய்க்கொண்டிருக்கும் போதில்
சேய்மை அண்மையில் செல்வதைக் கண்டேன்.

# குடியரசு அரசியல் திட்டமும் சிறுபான்மையோர் உரிமைகளும்

அ. சிவராசா

பிரித்தானியர் ஆட்சியின்போதுதான் இலங்கையில் பாராளுமன்ற ஆட்சிக்கான வித்துக்கள் ஊன்றப் பட்டன. படிப்படியாக இடம்பெற்ற அரசியலமைப்புச் சீர்திருத்தங்களினூடாக இலங்கை பாராளுமன்ற ஜனநாயக ஆட்சியை நோக்கி வளர்ந்து வந்தது. கோல்புறூக் கமெரன் சீர்திருத்தங்கள் 1833, மக்கலம் சீர்திருத்தங்கள் 1910, மானிங் டிவொன்சியர் சீர்திருத்தங்கள் 1920, டொனமூர் அரசியல் திட்டம் 1931, சோல்பரி அரசியல் திட்டம் 1947, என்பனவே அவையாகும். இந்த வரிசையில் இறுதியாக புதிய குடியரசு அரசியல் திட்டம் இடம் பெற்றுள்ளது. முன்னைய அரசியல் திட்டங்கள் பிற நாட்டவரால் ஆக்கப்பட்டிருக்க, புதிய அரசியல் திட்டம் இந் நாட்டு மக்களின் பிரதிநிதிகளால் வரைந்தளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதொரு அம்சமாகும்.

எமது நாடு பல இன மக்களையும் பல மதங்களைப் பின்பற்றுபவர்களையும் கொண்டதொரு நாடாக இருப்பதால், புதிய அரசியல் திட்டம் புகுத்தப்படும் போது, தமக்குப் போதியளவு உரிமைகள் அரசியல் திட்டத்தில் வழங்கப்படவில்லையென இனத்தால் வேறுபட்ட எண்ணிக்கையில் குறைந்த மக்கள் குறை கண்டு வந்துள்ளனர்.

அந்நியராட்சியின்போது குறிப்பாக பிரித்தானியர் ஆட்சியின்போது சட்டசபைகளில் தமக்கு போதியளவு பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை என எழுந்த இவ் எதிர்ப்பானது சுதந்திரத்தின் பின்னர் மொழி, மதம் என்ற அடிப்படையில் திசை திரும்பியுள்ளது. டொனமூர் அரசியல் திட்டத்துக்கு எதிர்ப்புக்காட்டும் முகமாக அதன் கீழ் நடந்த 1வது பொதுத் தேர்தல் வடமாகாணத்தில் பகிஷ்கரிக்கப்பட்டமை இவ்வாறான எதிர்ப்புக்களுக்கு ஒரு உதாரணமாகும். ஆனால் கடந்த காலங்களை விட தற்போது புதிய அரசியல் திட்டத்துக்கு சிறுபான்மையோர் குறிப்பாகத் தமிழ் மக்கள் காட்டிய எதிர்ப்பு சற்றுத் தீவிரமானதாகக் காணப்பட்டமை பலரது கவனத்தையும் கவர்ந்துள்ளது. ஆகவே புதிய அரசியல் திட்டத்தின் பிரதானமான அம்சங்களையும் சிறுபான்மையோர் அதனை எதிர்ப்பதற்குக் காட்டுகின்ற காரணங்களையும் அறிந்து கொள்ளுதல் அவசியமாகின்றது.

சுமார் இரண்டாயிரத்தைநூறு வருட காலமாக முடியாட்சி நிலவிவந்த இந்த நாட்டில், அதில் இறுதி ஐந்நூறு வருட காலமாக அந்நியராட்சியில் சிக்குண்டிருந்த இலங்கையை, ஒரு குடியாட்சி நாடாக ஆக்கும் நோக்குடன் ஒரு புதிய அரசியல் திட்டம் உருவாக்கப்பட்டது. இலங்கையின் அரசியல் கட்சிகளுள் முக்கியமானதொன்றாக விளங்கும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைத் திட்டத்தின் அடிப்படை அம்சங்களில் ஒன்று; இந் நாட்டினை மேலைத் தேய ஏகாதிபத்திய ஊடுருவல்களிலிருந்து முற்றாக விடுவிக்க ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்குதல் ஆகும். எனவே, அந்த நோக்கத்தை செயற்படுத்து முகமாக அமைக்கப்பட்ட அரசியற்றிட்ட வரைவுக் குழு இதனை மேற்கொண்டு நிறைவேற்றியது.

சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழ் இலங்கை சுதந்திரம் பெற்றது என்று பொதுவாகக் கூறப்பட்டு வந்த போதும் அது பரிபூரண சுதந்திரம் பெறவில்லை என்று அரசியலறிஞர்களால் வாதிடப்பட்டது. பிரித்தானிய மகாராணியார் இலங்கையின் மகா தேசாதிபதியினைத் தெரிவு செய்யவும், இலங்கைக்காக யுத்தப் பிரகடனஞ் செய்யவும், சமாதான ஒப்பந்தம் செய்யவும் உரிமை பெற்றிருந்தார். எமது நாட்டு பிரஜைகள் இலங்கையில் தமக்கு சரியாக நீதி வழங்கப்படவில்லை என்று எண்ணுமிடத்துப் பிரித்தானிய மேன் முறையீட்டு நீதிமன்றுக்கு மேன்முறையீடு செய்துவந்தனர். இவைகள் இலங்கை பூரணமான இறைமை பெற்றிருக்கவில்லை என்பதற்கு சில உதாரணங்களாகக் காட்டப்பட்டன. கௌரவ திரு. D. S. சேனநாயக்காவுக்கும் பிரித்தானிய அரசாங்கத்துக்குமிடையே நடந்த பேச்சுவார்த்தைகளின் வெளிப்பாடே சோல்பரி அரசியல் திட்டம் எனக் கூறப்பட்டது.

புதிய அரசியல் திட்டம் பிரித்தானிய முடிக்கு இந்நாட்டின் மீதிருந்த சகல உரிமைகளேயும் அதிகாரங்களேயும் நீக்கி இந் நாட்டு மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதம மந்திரியே நாட்டின் தலைவராகிய ஜனுதிபதியினைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பினை அளித்துள்ளது.

புதிய அரசியல் திட்ட மொன்றினை வரைவதற்கு ஆளுங் கட்சியாகிய ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினை முக்கியமாகக் கொண்ட கூட்டு முன்னணியினர் இலங்கையின் சகல அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்தபோது எல்லா அரசியல் கட்சிகளும். நவரங்கசல மண்டபத்தில் நடந்த அங்குரார்ப்பண வைபவத்தில் கலந்து கொண்டன. ஆனுல் பின்னர் அதற்காக அமைக்கப்பட்ட அரசியல் திட்ட அசெம்பிளியிலிருந்து தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் கட்சியாகிய தமிழரசுக் கட்சி விலகிக் கொண்டமை குறிப்பிடத் தக்கதாகும். சமஷ்டிக் கட்சியினுல் (தமிழரசுக் கட்சி) கொண்டு வரப்பட்ட – இலங்கையை ஒரு சமஷ்டி அரசியல் அமைப்பாக ஆக்க வேண்டுமென்ற – கோரிக்கை அரசியல் திட்ட வரைவுக் குழுவினுல் நிராகரிக்கப்பட்டமை ஒரு புறமிருக்க, தமிழ் மொழிக்கும், பௌத்தம் அல்லாத பிற மதங்களுக்கும் அரசியலமைப்பில் போதியளவு இடமளிக்கப் படவில்லை என்பதே அவர்கள் அதனை எதிர்ப்பதற்கு காட்டுகின்ற காரணங்களுள் முக்கியமானதாக அமைகின்றது. அதனுேடு சோல்பரி அரசியல் திட்டத்தில் இடம் பெற்ற சிறுபான்மையோர் பாதுகாப்புகள் என நம்பப்பட்ட சரத்துக்கள் ஒழிக்கப்பட்டமையும் நீதிமன்ற மொழியில் தமிழுக்கு போதிய இடமளிக்கப் படவில்லை என்பதும் மேலும் அவர்கள் காட்டுகின்ற எதிர்ப்புக்குரிய சில காரணங்களாகும்.

கலா நிதி கொல்வின் ஆர். டீ. சில்வா அவர்களைத் தலைவராகக் கொண்ட வரைவுக் குழு உருவாக்கிய அரசியல் திட்டத்தினை முற்றிலும் புதியது என்று கூற முடியாதுள்ளது. அவற்றுள் சில சோல்பரி அரசியல் திட்டத்தில் காணப்பட்டவை. வேறு சில மேலை நாட்டு அரசியல் திட்டங்களிலிருந்து பெறப்பட்டவை. இருந்த போதிலும் குடியரசு ஜனுதிபதி, அரசியல் அமைப்பு நீதிமன்றம், அடிப்படை உரிமைகளும் சுதந்திரங்களும் அரச கரும மொழி, மதம், நீதிமன்ற மொழி போன்ற அம்சங்களினுல் முன்னைய அரசியல் திட்டங்களிலிருந்து இது வேறுபடுகிறது.

### அரசியல் திட்டத்தின் பிரதான அம்சங்கள்

அரசியல் திட்டத்தின் 1வது அத்தியாயம் இலங்கை சுதந்திரமும் தன்னுதிக்கமும் கொண்ட ஒரு ஒற்றையாட்சிக் குடியரசு என்றும் மக்களின் இறைமை மக்களினுல் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு தேசிய அரசப் பேரவை மூலம் பிரயோகிக்கப்படும் எனவும் கூறுகிறது. இந்த அத்தியாயத்தின் மூலம் மக்களிடமே இறைமை ஒப்படைக்கப் படுவதனுல் குடியாட்சி என்ற அம்சம் வலியுறுத்தப்படுகிறது.

அரசியல் திட்டத்தின் 4 வது அத்தியாயம் 13 வது சரத்து இலங்கையின் அரசியும் ஏனைய இராச்சியங்கள் ஆள் புலங்கள் என்பவற்றின் அரசியும் பொதுநல அரசுத் தலைவியுமான II வது எலிசபெத் பிரயோகித்து வந்த, அல்லது பிரயோகிக்கக் கூடியனவாயிருந்த எவ்வகையான அதிகாரங்கள், சிறப்புரிமைகள், விடுபாட்டுரிமைகள் இலங்கைக் குடியரசு உடையதாகவும் பிரயோகித்தலும் வேண்டும் எனக் குறிப்பிடுகிறது. 14 வது சரத்து இதனை மேலும் வலியுறுத்தி அது எத்தகைய கடமைப் பாடுகள் ஆயினும் அரசியலமைப்பின் கீழுள்ள இலங்கைக் குடியரசு அரசாங்கத்தின் உரிமைகளும் கடமைகளும் ஆதல் வேண்டும் எனக் குறிப்பிடுகிறது. இச் சரத்துக்கள் பிரித்தானிய முடிக்கு இந் நாட்டின் மீதிருந்த சகல அதிகாரங்கள் உரிமைகளையும் இல்லாததாக்கி விடுகிறது – இதன் மூலம் பரிபூரண சுதந்திர நிலையினைத் தெளிவு படுத்துகிறது.

அரசியல்திட்டத்தின் 7 வது அத்தியாயம் குடியரசு ஜனுதிபதி பற்றிஎடுத்துரைக்கின்றது. இலங்கைக் குடியரசுக்கு ஜனுதிபதி ஒருவர் இருத்தல் வேண்டுமெனவும் அவர் ஆட்சித் துறைத் தலைவராகவும் ஆயுதம் தாங்கிய படைகளின் தலைவராகவும் இருப்பர் எனவும் போர் சமாதானம் என்பவற்றைப் பிரகடனஞ் செய்யவும், தேசிய சபையைக் கூட்டவும், கூட்டத் தொடர்களை நிறுத்தவும், தேசிய சபையைக் கலைக்கவும், அதிகாரமுடையவர் எனவும் அவரே முதலமைச்சரையும், பிரதி அமைச்சர்களையும் நியமிப்பார் எனவும் கூறுகிறது.

ஏழாவது அத்தியாயத்தின் 25வது சரத்து தேசிய அரசப் பேரவையின் உறுப்பினரைத் தெரியும் நோக்கத்துடன் தேர்தல் ஒன்றில் வாக்காளராகத் தகுதியுடைய பிரசை எவரும் இலங்கைக் குடியரசின் ஜனுதிபதிப் பதவிக்கு முதலமைச்சரால் பெயர் குறிப்பிடப்படலாம் எனக் கூறுகிறது. இதன் மூலம் ஜனுதிபதியினைத் தெரிவு செய்யும் பொறுப்பு பிரதம மந்திரியின் கையில் விடப்படுகிறது. குடியரசு ஜனுதிபதிகளைத் தெரிவு செய்யும் முறை நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. அண்டை நாடான இந்தியக் குடியரசில் சம அரசுகளின் லோக சபை, ராஜ்ய சபை அங்கத்தவர்களும் மத்திய அரசின் லோக சபை ராஜ்யசபை அங்கத்தவர்களும் வாக்களித்தே ஜனுதிபதி தெரிவு நடைபெறுகிறது. ஐக்கிய அமெரிக்க நாட்டிலும் பிரான்சிலும் ஜனுதிபதிகள் தேர்தல் கழகங்களின் மூலம் தெரிவு செய்யப்படுகிறுர்கள். நாட்டின் தலைவர் மக்களின் நேரடி வாக்கினுல் தெரிவு செய்யப்பட்டால் நடுநிலை தவறிவிடக்கூடும் என்ற காரணத்தினுல் மறைமுகத் தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. குடியரசு ஜனுதிபதிகள் தமது அதிகாரத்தினைப் பொறுத்த வரையிலும் வேறுபடுகிறுர்கள். சில நாடுகளில் ஜனுதிபதி பெயரளவில் தலைமை தாங்குபவராக மட்டுமேயிருக்க ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ், சோவியத் ரூஷ்யா போன்ற நாடுகளில் அவர்களே பிரதான நிர்வாகிகளாகவும், அதிகார

முடையவர்களாகவும் உள்ளனர். இலங்கையின் ஜனாதிபதியும் பெயரளவு தலைமை தாங்கும் ஒருவராகவே காணப்படுகிறார். புதிய குடியரசு ஜனாதிபதியின் நிலையினை சோல்பரி அரசியலமைப்பின் மகாதேசாதிபதியின் நிலையுடன் ஒப்பிடுமிடத்து, அதிகாரத்தைப் பொறுத்தளவு அதிகளவு வேறுபாடுகள் காணப்படாவிடினும் வேற்று நாட்டு அரசி ஒருவர் எமது நாட்டுத் தலைவரைத் தெரிவு செய்யும் நிலை இன்றில்லை, அதனோடு பிரித்தானிய மகாராணியாருக்கு இருந்த கடமைகள் பல ஜனாதிபதியின் கையை வந்தடைந்துள்ளன, அதாவது யுத்தப் பிரகடனஞ் செய்தல் சமாதானம் செய்தல் போன்றனவாகும்.

அரசியல் திட்டத்தின் 6வது அத்தியாயம் 18வது சரத்து அடிப்படை உரிமைகளும், சுதந்திரங்களும் பற்றி எடுத்துக் கூறுகிறது. அது சட்டத்தின் முன்பு ஆட்கள் எல்லோரும் சமமானவர்கள் என்றும், சட்டத்தின் மூலம் கிடைக்கும் சமமான பாதுகாப்புக்கு உரிமையுடையவர்கள் என்றும், சட்டப் பிரகாரம் அன்றி அவர்களது உயிரையோ, சுதந்திரத்தையோ சொந்தப் பாதுகாப்பினையோ இழத்தலாகாது என்றும், சட்டப்படியன்றி பிரசைகள் எவரும் காவலில் வைக்கப்படவோ சிறையில் இடப்படவோ தடுத்து வைக்கப்படவோ கூடாது என்றும், சிந்தனை செய்யும் சுதந்திரமும் மனச் சாட்சியைப் பின்பற்றவும் மத சுதந்திரம் என்பன ஒவ்வொரு பிரசைக்கும் இருக்க வேண்டும் என்றும் சமயத்தை அனுசரிக்கவும் போதிக்கவும் உரிமையுண்டென்றும் கூறுகிறது. அத்துடன் தனது சொந்தக் கலாச்சாரத்தை அபிவிருத்தி செய்யவும் அமைதியான முறையில் ஒன்று கூடவும், ஒருங்கு சேரவும் பேச்சுச் சுதந்திரம் வெளியிடுதல் உட்பட கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரம் என்பன சார்பான உரிமை ஒவ்வொரு பிரசைக்குமுண்டு எனவும் அரசாங்க, உள்ளூர் கூட்டுத்தாபன சேவையில் தகுதியானவர்களுக்கு இனம், சமயம், சாதி, அல்லது பால் காரணமாக அத்தகைய வேறுபாடுகள் காண்பிக்கக் கூடாது என்றும் இலங்கை முழுவதும் தடையின்றிப் பிரயாணஞ்செய்வதற்கும் தான் விரும்பும் இடத்தில் வசிப்பதற்குமான சுதந்திரம் ஒவ்வொரு பிரசைக்கும் இருத்தல் வேண்டுமெனவும் இது கூறுகிறது.

இத்தகையதொரு அடிப்படை உரிமைகள் பட்டியல் பெரும்பாலும் எல்லா நாட்டு அரசியல் திட்டங்களிலும் காணப்படுகிறது. இது ஜனநாயக நாடுகளில் மக்களின் சுதந்திரத்தினை உறுதிப்படுத்துவதற்காக அரசியல் திட்டங்களில் பொறிக்கப்படுகிறது. சோல்பரி அரசியல் திட்டத்தில் இத்தகைய சுதந்திரங்கள் இடம்பெறவில்லை எனக் குறை கூறப்பட்டது புதிய அரசியல் திட்டத்தில் இடம் பெற்றுள்ள சிறப்பான அம்சங்களில் இதுவும் ஒன்றெனக் கொள்ளப்படுகின்றது.

சோவியத்ருஷ்யாவின் அரசியலமைப்பு அடிப்படை உரிமைகள் பற்றி பின்வருமாறு எடுத்துரைக்கிறது. சோவியத்ருஷ்யாவின் பிரசைகள் தொழில் செய்வதற்குரிய உரிமை பெற்றவர்கள். அப்படியாயின் தொழில் உத்தரவாத உரிமை உண்டு என்பதோடு சோவியத் ருஷ்யப் பிரசைகளின் தேசீயம், இனம் என்பவற்றை கருத்தில் கொள்ளாது பொருளாதார, அரசியல், கலாச்சார, அரசாங்க மற்றைய பொது நடவடிக்கைகளில் சமமான உரிமை பெற்றவர்கள் எனக் குறிப்பிடுகிறது.

மக்கள் சீனக் குடியரசின் அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகள் பற்றிய சரத்துக்கள் மக்கள் சீனக் குடியரசின் பிரசைகள் சட்டத்தின் முன் சமமானவர்கள் என ஆரம்பித்து பேச்சு, பத்திரிகை, ஒன்றுகூடல், ஊர்வலம் போன்ற உரிமைகளை பிரசைகளுக்கு உறுதியளிக்கிறது. ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர விதிகள் மனிதனின் அடிப்படை உரிமைகளில் நம்பிக்கை வைப்பதோடு தனிப்பட்ட மனிதனின் அந்தஸ்து-பெறுமதியை கருத்திற்கொண்டு ஆணுக்கும் பெண்ணுக்கும் பெரிய நாடுகளுக்கும் சிறிய நாடுகளுக்கும் சமமான உரிமை உண்டு என உறுதிப்படுத்துகிறது. ஐக்கியநாடுகள் சபையின் சுதந்திரப் பிரகடனம் பின்வருமாறு எடுத்துரைக்கிறது,

''எல்லோரும் கடவுளால் சமமாகவே சிருஷ்டிக்கப்பட்டனர் அவர்கட்கு கடவுள் சீவனமும், சுதந்திரமும் வேற்றுமையாக்க முடியாத சில உரிமைகளையும் சுகத்தைத் தேடிக் கொர்ள்ளும் உரிமையும் அளித்துள்ளார் என்கிறது''

மேற் கூறிய நாடுகளது அடிப்படை உரிமைகள் பற்றிய சரத்துக்களை நாம் நோக்கும்போது இலங்கையின் புதிய அரசியல் திட்ட அடிப்படை உரிமைகள் பற்றிய சரத்துக்கள் இன்னும் சற்று தாராளமானவையாக இருந்திருக்கலாம் எனத் தோன்றுகின்றது. அரசியல் திட்டத்தின் 54ம் சரத்து Iம் உபபிரிவு அரசியலமைப்பினால் அரசியலமைப்பு நீதிமன்றுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணிகளைப் புரிவதற்கென அரசியலமைப்பு நீதிமன்றம் ஒன்றிருத்தல் வேண்டுமெனவும் அது நான்கு வருடங்களுக்கு கடமையாற்றுமெனவும் அதன் உறுப்பினர்களாவதற்கு ஐந்து ஆட்களை ஜனாதிபதி நியமித்தல் வேண்டுமெனவும் கூறுகிறது. சட்ட மூலத்தின் ஏதேனும் ஏற்பாடுகள் அரசியலமைப்புடன் ஒத்துப்போகாததா என்னும் கேள்வியெழும்போது சட்டத்துறை தலைமையதிபதி தனது அபிப்பிராயத்தை சபாநாயகருக்கு அறிவித்தால் அல்லது அத்தகைய சட்டமூலம் தேசீய அரசப் பேரவை நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்ட ஒரு கிழமைக்குள் அங்கீகரிக்கப்பட்ட ஒரு அரசியல் கட்சியின் தலைவரால் அத்தகைய கேள்வி ஒன்று எழுப்பப்பட்டு சபாநாயகர் அறிவித்தல் பெற்றால் அல்லது தேசீய அரசப் பேரவையின் கூட்ட நடப்பெண்ணாக அமையும் தொகையான அங்கத்தவர்களால் ஒப்பமிடப்பட்ட அறிவித்தல்மூலம் கேள்வியெழுப்பப்பட்டால் அல்லது பிரசைகள் எவராயினும்பணிந்து கேட்குமிடத்து அரசியலமைப்பு நீதியன்றத்தின் முடிவு அல்லது அபிப்பிராயம் தரப்படும்வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படலாகாது என்று குறிப்பிடுகிறது.

இந்த நீதிமன்றமுறை புதிய அரசியல் திட்டத்தில் நாம் அவதானிக்கின்ற புதியதொரு அம்சமாகும், அரசாங்கத்தினுல் கொண்டு வரப்படும் மசோதா ஒன்று, அரசியல் திட்டத்திற்கும் அடிப்படை உரிமைகளுக்கும் முரணுனது எனச் சாதாரண பிரசையோ அல்லது மக்கள் பிரதிநிதி ஒருவரோ கருதுவராயின் அதற்கெதிராக அரசியலமைப்பு நீதி மன்றத்தில் வழக்குத் தொடரமுடியும். அண்மையில் பத்திரிகை மசோதாவுக்கு எதிராக ஐந்து வழக்குகள் தொடரப்பட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை வேண்டிநின்றன. உரிய நேரத்தில் அது சமர்ப்பிக்கப்படாததினுல், அது திரும்பவும் அரசியலமைப்பு நீதி மன்றத்துக்கு வந்து தீர்ப்பும் வழங்கப்பட்டுள்ளது. இத்தகையதொரு அரசியலமைப்பு நீதிமன்றம் பிரான்சில் 3ம் குடியரசு காலத்திலேயே காணப்பட்டது. இந்தியக் குடியரசு அரசியல் திட்டத்திலும் இத்தகைய அமைப்பு ஒன்று காணப்படுகிறது.

சமஷ்டி அரசியலமைப்பு உடைய நாடுகளில் உயர் நீதிமன்றம் ஒன்று மத்திய அரசுக்கும் மாகாண அரசுகளுக்குமிடையே பிணக்குகள் ஏற்படுமிடத்து அதனைத் தீர்த்து வைப்பதற்காக அமைக்கப்படுகிறது. ஆனுல் அரசியலமைப்பு நீதிமன்றம் தெரிவு செய்யப்படுகின்ற அரசாங்கம், அரசியல் திட்ட விதிகளை மீறுது நடப்பதற்காக அமைக்கப்படுகிறது. ஆனுல், இதன் அங்கத்தவர்கள் பிரதம மந்திரியின் சிபார்சின் பேரில் ஜனுதிபதியால் நியமிக்கப்படுகிறுர்கள் என்ற அம்சத்தினுல் சிறப்புக்குன்றி விடுகிறது. பிரதமர் தமது கட்சிச் சார்பான அல்லது தனது கொள்கைகளோடு ஒத்துப் போகின்ற அங்கத்தவர்களை இதற்கு நியமிப்பதன்மூலம் தாம் விரும்புவதைச் சாதித்துக்கொள்ள முடியும் என்ற கருத்தும் தெரிவிக்கப்படுகிறது. அரசியல் திட்டத்தின் 14வது அத்தியாயம் 2ம் பிரிவு 1971ம் ஆண்டின் 44ம் இலக்க மேன் முறையீட்டு நீதிமன்றச் சட்டத்தினுல் தேசிய அரசப் பேரவை நீதிமன்றங்களை உருவாக்கித்தாபிக்கலாம் எனக் குறிப்பிடுகிறது. இதன்மூலம் இங்கிலாந்து மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு மேன்முறையீடு செய்யும் நிலை மாறி இலங்கையிலேயே அதனைச் செய்துகொள்ளும் நிலையை ஏற்படுத்தியுள்ளது. வேற்று நாட்டு நீதிபரிபாலனத்துள் இலங்கை கட்டுண்டிருந்த நிலைமாறி இதன்மூலம் சுதந்திரமானதொரு நிலையினை ஏற்படுத்தியுள்ளது என்று கொள்ளப்படுகிறது.

மேற் கூறிய முக்கியமான அம்சங்களை விட மற்றய அம்சங்கள் பெரும்பாலும் சோல்பரி அரசியல் திட்டத்தை ஒத்தே அமைந்துள்ளன. சில அம்சங்கள் பெயர் மாற்றம் பெற்றுள்ளன. சனப் பிரதிநிதிகள் சபை தேசிய அரசப் பேரவை எனவும் பொது சேவை ஆணைக் குழு அரச சேவைகள் ஆலோசனைச் சபை யெனவும் நீதிசேவை ஆணைக் குழு நீதி சேவைகள் ஆலோசனைச் சபை எனவும் பெயர் மாறியுள்ளது. பொது சேவையில் ஒழுங்குக் கடமைகளை மேற்கொள்ள அரச சேவைகள் ஒழுக்காற்று சபை எனப் புதிதாக ஒன்றும் உருவாக்கப் பட்டுள்ளது.

இவை தவிர 4ம், 5ம் அத்தியாயங்கள் பொதுவான ஏற்பாடுகள் அரச கொள்கைகள் கோட்பாடுகள் என்பன பற்றி எடுத்துரைக்கின்றன. இதில் முன்னையது குடியரசின் உரிமைகள் கடமைகள் கடமைப்பாடுகள் மகாராணியாரிடமிருந்து கைமாறு வதனையும்—சட்டங்களின் சென்ற காலச் செயற்பாடு முன்னைய செயல்கள், முடிவுறுத வழக்குகள் போன்றன பற்றியும் கூறப் பின்னையது அரசினது கொள்கைள், கோட்பாடுகள் பற்றி எடுத்துரைக்கிறது. தேசிய அரசப் பேரவையின் அமைப்பு, வாக்குரிமை, உறுப்பினர் தேர்தல், தேர்தல் மாவட்டங்களை வரையறுத்தல், தேர்தல் ஆணையாளர், நிதிக் கட்டுப்பாடு நிர்வாகம் பற்றியவை பெருமளவு சோல்பரி அரசியல் திட்டத்தினையொத்ததாகவே காணப்படுகின்றது.

புதிய அரசியல் திட்டம் ஓரங்க மன்றத்தினை மட்டும் கொண்டியங்குவதன் மூலம் அரசியலில் ஒரு ஆடம்பரப் பொருள் எனவும் கால விரயத்தை ஏற்படுத்தும் சபை எனவும் வர்ணிக்கப்பட்ட செனற் சபை ஒழிக்கப்பட்டதும் ஒரு பிரதான அம்சமாகிறது.

அரசியல் திட்டத்தின் 121 சரத்து 3ம் உப பிரிவு தேசியப் பேரவையில் சமூக மாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினரில் பெரும்பான்மையோடு சட்டங்களை ஆக்கலாம் எனக் குறிப்பிடுகிறது. மேலும் தேசிய அரசப் பேரவை நீதிமன்ற நடவடிக்கை முறையையும் ஒழுங்கு படுத்த முடியும் எனவும் குறிப்பிடுகிறது. இந்த அம்சத்தைப் பொறுத்தவரை அரசியல் திட்டம் உருவாகும்போதே பரவலான எதிர்ப்பு காட்டப்பட்டது. தேசிய அரசப் பேரவை நீதி முறையில் தலையிடுவதன் மூலம் தொழிலாளர் உரிமைகள் சட்டவிரோதமானது என முடிவு செய்யக் கூடும் என நாட்டின் பல பொது ஸ்தாபனங்கள் எதிர்ப்புத் தெரிவித்தது குறிப்பிடத் தக்கது.

அரசியல் திட்டம் மக்கள் மனதில் வருங் காலம் பற்றி ஒரு நிச்சயமான தன்மையை ஏற்படுத்த வேண்டும். மக்களின் தேவைகளையும், அவர்களது அபிலாசைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும். நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதோடு கால மாற்றத்திற் கேற்ப,சமுதாய மாற்றங்களுக்கும்ஒத்ததாக அமைய வேண்டும். இந்த நோக்கில் புதிய அரசியல் திட்டம்அவசியமாக இருக்கலாம். ஆனுல் அது நாட்டு மக்கள்அனைவரதும் வரவேற்புக்குரியதாக அமைதல் சிறப்பாகும்.

இலங்கையில் கொண்டுவரப்பட்ட புதிய குடியரசு அரசியல் திட்டத்துக்கு சிறுபான்மை மக்களுள் முக்கியமான ஒரு பகுதியினர் அதிருப்தி தெரிவித்துள்ளனர். அந்த அதிருப்திக்கு வழி வகுக்கும் அம்சங்கள் எவை எனத் தெரிந்து கொள்ளுதல் அவசியமாகிறது.

இலங்கை குடியரசாவதனை சிறுபான்மையோர் எதிர்க்கவில்லை. குடியரசு அரசியல் திட்டத்தினையே பெருமளவு எதிர்க்கிறுர்கள். அதிலும் சில சரத்துக்களையே மிகக் கடுமையாக எதிர்த்தார்கள். பொது

வாக அது குடியரசு அரசியல் திட்டம் என அழைக் கப்படுவதால், குடியரசாவதனை எதிர்த்துள்ளார்கள் எனப் பொருள் கொள்ளப்படுகிறது. உண்மையில் எப்பகுதிகளை இம் மக்கள் எதிர்க்கிறார்கள் என்பதை நோக்குவோம்.

## சிறுபான்மை மக்களின் நிலை

சிறுபான்மை மக்கள் என்று கூறும்போது இனத் தால் வேறுபட்ட எண்ணிக்கையளவில் குறைந்த தொகையினரையே அது குறிக்கிறது. இலங்கையில் பெரும்பான்மை மக்களாகிய சிங்கள மக்களைவிட வட கீழ் மாகாணங்களில் இலங்கைத் தமிழ் மக்களும் மலை நாட்டுப் பகுதிகளில் இந்தியத் தமிழ் மக்களும் வாழ்கிறார்கள். இவர்களைவிட முஸ்லீம் மக்கள் நாடு எங்ஙணும் பரவியும் மலே, பறங்கிய இன மக்கள் முக்கியமான நகர்ப் புறங்களிலும் வாழ்கிறார்கள். சிறு பான்மையோர் எனக் குறிப்பிடும்போது மேற்கூறிய அனைவருமே அதற்குள் அடங்கிய போதிலும் வட கீழ் மாகாணங்களில் வாழ்கின்ற தமிழ் மக்களும் அவர்களின் அரசியல் தலைவர்களுமே பெருமளவு எதிர்ப்பினை அரசியல் திட்டத்தைப் பொறுத்துத் தெரிவித்துள்ளார்கள் என்பதாலும் சிறுபான்மை யோருள் அவர்கள் பெருந் தொகையினர் என்ற ரீதி யிலும் அவர்கள் எதிர்ப்பதற்கு காட்டுகின்ற கார ணங்களை இங்கு நோக்குவோம்.

| இனம் | மொத்தம் ·000 | % |
|---|---|---|
| சிங்களவர்கள் | 8,814·7 | 71·7 |
| இலங்கைத் தமிழர்கள் | 1,571·1 | 12·7 |
| இந்தியத் தமிழர்கள் | 1,162·3 | 9·4 |
| இலங்கை முஸ்லீம்கள் | 666·0 | 5·4 |
| மலே | 19·4 | 0·2 |
| பறங்கியர் | 7·3 | 0·5 |
| மற்றையோர் | 6·7 | 0·1 |
| | 12,297·5 | 100% |

| மதம் | மொத்தம் | % |
|---|---|---|
| பௌத்தர்கள் | 8,197·7 | 66·7 |
| இந்துக்கள் | 2,243·3 | 18·2 |
| முஸ்லீம்கள் | 693·8 | 5·6 |
| கிறீஸ்தவர்கள் | 1,162·1 | 9·4 |
| மற்றையோர் | ·6 | 0·1 |

மேலே காட்டப்பட்ட அண்மைக் காலப் புள்ளி விபரங்களின் அடிப்படையில் 72% ஆனோர் சிங்கள மக்கள் என்பதையும் சுமார் 28% சிறுபான்மையோர் என்பதையும் அதில் 22% தமிழ் மக்கள் என்பதை அறிய முடிகிறது. அதேபோல் 66% பௌத்தர்களும் 18% இந்துக்களும், 5% முஸ்லீம்களும், 9% ஆன கிறீஸ் தவர்களும்வாழ்கிறார்கள் என்பது தெரியவருகிறது. இவ்வாறாகசிறுபான்மை இன மதங்களைச் சேர்ந்தவர் கள் வாழுகின்ற நாட்டின் அரசியல் திட்டம் அவர்க ளது உரிமைகளையும் மதித்து இடங்கொடுத்து அமைந் திருந்தால் எல்லோராலும் வரவேற்கத்தக்கதாக இருந்திருக்கும். சிறுபான்மையோரின் கருத்துக்க ளுக்குமதிப்பளிக்கும் பெரும்பான்மையோர்ஆட்சிஎன் பது ஜனநாயகத்தின் ஒருதாரக மந்திரமும் ஆகும்.

புதிய அரசியல் திட்டத்தின் IIம் அத்தியாயம் பௌத்த மதம் பற்றி கூறுகிறது. "இலங்கைக் குடி யரசு பௌத்த மதத்துக்கு முதலிடம் வழங்கவேண் டும் என்பதுடன் அதனைப் பேணி வளர்த்தலும் பாதுகாத்தலும் அரசின் கடமை" எனக் கூறுகிறது. முன்னைய அரசியல் திட்டத்தின் 29ம் பிரிவு 2ம் உப பிரிவு பின்வருமாறு எடுத்துரைகின்றது.

29(2) பின்வரும் விடயங்களில் சட்டங்கள் இயற் றப்படக் கூடாது எனக் கூறுகிறது.

a. எந்த மதத்தினதும் சுதந்திரமான இயக்கத்தினை தடைசெய்யும் விதத்திலோ அல்லது வரைய றைக்குட்படுத்தும் விதத்திலோ,

b. வேறெரு இனத்தையோ மதத்தையோ சேர்ந்த ஆட்களுக்கு விதிக்காத சட்டக் கட்டுப்பாட்டினை எந்த ஒரு இனத்தையோ அல்லது மதத்தையோ சேர்ந்த ஆட்களுக்கு ஏற்படுத்தும் சட்டங்கள்,

c. வேறு எந்த இனத்தையோ அல்லது மதத்தையோ சேர்ந்த ஆட்களுக்கோ கொடுக்கப்படாத வாய்ப் புகளையோ சிறப்புரிமைகளையோ ஒரு இனத் தையோ அல்லது மதத்தையோ சேர்ந்தவர்க ளுக்கு வழங்கக் கூடிய வகையில் சட்டங்கள் இயற் றக் கூடாது.

d. எந்தச் சமய அமைப்பினதும்-யாப்பினை அந்த அமைப்பினை ஆட்சிசெய்யும் அதிகாரிகளது சம் மதமின்றி மாற்றுகின்ற சட்டங்களை இயற்றக் கூடாது என எடுத்துக் கூறுகிறது. இந்த அடிப் படையில் நோக்கும்போது புதிய அரசியல் திட் டத்தின் மதம் பற்றிய சரத்துக்கள், சிறுபான்மை மதங்களைப் பின்பற்றுபவர்களுக்கு அளிக்காத சிறப்புரிமைகளை பௌத்த மதத்துக்கு அளித் திருக்கிறது என்பது தெளிவாகிறது.

ஆகவே சிறுபான்மை மக்களுக்கு பாதுகாப்பாக அமைந்திருந்த 29ம் சரத்து 2ம் பிரிவு நீக்கப்பட்டு தனியொரு மதத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட் டுள்ளமையை அம் மக்கள் எதிர்க்கிறார்கள்.

சிறுபான்மை மக்களுள் தமிழ் பேசும் மக்கள் தீவி ரமாக எதிர்க்கின்ற சரத்து அரச கருமமொழி பற்றி யதே. அரசியல் திட்டத்தின் 3ம் அத்தியாயம் 7வது சரத்து இலங்கையின் அரச கருமமொழி சிங்களம் என்று கூற, 8ம் சரத்து 1ம் உப பிரிவு தமிழ் மொழி யின் உபயோகம் 1958ம் ஆண்டின் 28ம் இலக்க தமிழ் மொழி விசேட ஏற்பாடுகள் சட்டத்துக் கிணங்க இருத்தல் வேண்டும் என்கிறது ஆனல் 8 வது சரத் தின் 2ம் உப பிரிவு 28ம் இலக்க தமிழ் மொழி விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டு நடை முறையிலுள்ள விதிகள் அரசியல் திட்டத்தின் ஏற் பாடாக எவ்வகையிலும் பொருள் கொள்ளப்பட லாகாது என்று கூறுகிறது. இதிலிருந்து தமிழ் மொழிக்கு நியாயமானளவு அந்தஸ்து கூட அரசியல் திட்டத்தில் அளிக்கப்படவில்லை என்பது தெளிவா கின்றது. பெரும்பான்மை இனமாகிய சிங்கள இனத்

துக்கும் சிறுபான்மை மக்களுள் குறிப்பாக தமிழ் மக்களுக்குமிடையே நீண்டகாலமாக இந் நாட்டிலே முரண்பாடுகள் நிலவி வருகிறது. அந்நியராட்சிக்கு எதிராக ஒற்றுமையாகப் போராடிய இந்த இரு இனங்களும் படிப்படியாக பொறுப்பாட்சி கிடைத்த போது அதனைப் பகிர்ந்து கொள்வதில் தம்மிடையே முரண்பட ஆரம்பித்தனர். 1919ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இலங்கைத் தேசிய காங்கிரசில் ஒற்றுமையாக அங்கம் வகித்த இந்த இரு இனத்தின் தலைவர்களும் 1920ம் ஆண்டில் அரசியல் திட்டமாகிய மானிங் அரசியல் திட்டத்துடன் பிளவு பட்டு பிரிந்து சென்றனர். அதன் காரணமாக இனரீதியான அமைப்புகளும் உருவாகலாயின. இந்த முரன்பாடுகள் 1956ம் ஆண்டுடன் மொழிப் பிரச்சினையாக உருவெடுத்தது. ஆகவே அரசியல் திட்டத்தில் தமிழ் மொழிக்கு உரிய இடமளிக்கபபடவில்லை என்பது அவர்கள் எதிர்ப்புக்குரிய அடுத்த காரணமாகிறது.

அரசியல் திட்டத்தின் 9வது சரத்து 1ம் பிரிவு, சட்டங்கள் யாவும் சிங்களத்தில் ஆக்கப்படவேண்டும் என்று கூற 2ம் உப பிரிவு அவ்வாறு இயற்றப்படும் ஒவ்வொரு சட்டத்தினதும் தமிழ் மொழி பெயர்ப்பு ஒன்றிருத்தல் வேண்டு மென்கிறது.

அரசியல் திட்டத்தின் 3ம் அத்தியாயம் 11வது சரத்து நீதிமன்றங்களின் மொழி பற்றிக் கூறுகிறது இலங்கை எங்கணும் நீதிமன்றங்கள் நியாய சபைகளினதும் மொழி சிங்களமாதல் வேண்டும் என்றும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வேறு வகையில் ஒழுங்கு செய்யலாம் என்றும் குறிப்பிடுகிறது. 3ம் உப பிரிவின் ஒரு பகுதி அவர்களது வழக்குரைகள், விண்ணப்பங்கள், பிரேரணைகள், மனுக்கள் என்பவற்றைத் தமிழில் சமர்ப்பிக்கலாம் என்பதுடன் அந் நடவடிக்கைகளில் தமிழிலும் பங்கு கொள்ளலாம் என்றும் அத்தகைய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சிங்களமொழி பெயர்ப்பு ஒன்று அதன் பதிவேடுகளின் பொருட்டுத் தயாரிக்கப்படச் செய்தல் வேண்டும் என்கிறது. இதிலிருந்து வட, கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் வாழும் தமிழ் மக்கள் தமிழில் தமது வழக்குகளை எடுத்துரைக்க முடியாதென்பது தெரிகிறது. வடக்கு கிழக்கில்கூட சிங்கள மொழி பெயர்ப்பு இடம்பெற வேண்டும் என்றும் தெரிகிறது. ஆகவே அரச கருமமொழி, சட்ட ஆக்க மொழி, நீதிமன்ற மொழி என்பவற்றில் தமிழுக்கு உரிய இடமளிக்கப்படவில்லை எனத் தெரிய வருகிறது, இதுவே அவர்கள் எதிர்ப்பதற்கு காட்டுகிற காரணங்களில் முக்கியம் வாய்ந்ததாக உள்ளது.

அடிப்படை உரிமைகளும் சுதந்திரங்களும் பற்றியெடுத்துரைக்கின்ற சரத்துக்கள் ஆட்கள் யாவரும் சட்டத்தின் முன் சமமானவர்கள் என ஆரம்பித்துப் பின்னர் பிரசைகள் எனப்பொருள் மாற்றமடைகின்றது. இதனைப்பொறுத்தவரை பிரசா உரிமைக்கு விண்ணப்பித்திருக்கும் இந்தியத் தமிழ் மக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். ஆகவே இதுவும் எதிர்ப்புக்குரிய ஒரு காரணமாகின்றது.

அடுத்து இந் நாட்டின் பிரசைகள் யார் என தெளிவாக அரசியல் திட்டத்தில் வரையறுக்காத காரணத்தினுல் இந்நாட்டில் வாழுகின்ற பிரஜா உரிமைக்கு விண்ணப்பித்துள்ள இந்தியத் தமிழ் மக்களின் எதிர்காலம் கேள்விக் குரியதாக்கப்பட்டுள்ளது. சோல்பரி அரசியல் யாப்பின்கீழ் பிரதிநிதித்துவம் கிடைக்காத நலன்களுக்காக ஆறு நியமன அங்கத்துவம் வழங்கப்பட்டு வந்தது. புதிய அரசியல் திட்டத்தின் 1வது தேசிய அரசப் பேரவையுடன் இந்த நியமன அங்கத்துவம் நீக்கப்படுகிறது. இதற்கும் எதிர்ப்புகள் கூறப்படுகிறது. ஆகவே சிறுபான்மையோர் என்ற கோணத்திலிருந்து பார்க்கும் போது அவர்களது நியாயமான உரிமைகள் சில வழங்கப்பட்டவில்லை என்று தெரிய வருகிறது.

தமிழ் மக்கள் நீண்டகாலமாக இந்த நாட்டில் வாழ்ந்து வருபவர்கள். பல காலமாக சுமுகமான சூழ்நிலையில் பெரும்பான்மையினருடன் வாழ்ந்து வந்திருக்கிறுர்கள். நாட்டின் ஆக்கபூர்வமான முயற்சிகளுக்கு ஆதரவளித்து வந்துள்ளனர். அந்நியராட்சிக்கெதிராக பெரும்பான்மை இனத்தோடு ஒற்றுமையாகப் போராடியவர்கள். ஆகவே அவர்களது உரிமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டியது அவசியமாகின்றது. நாடு பொருளாதார முன்னேற்றம் பெறுவதற்கு தேசிய ஒற்றுமை அவசியம். அதனை அரசியல் திட்டம் வலியுறுத்த வேண்டும். ஆகவே பெரும்பான்மை இனத்தின் அரசியல் தலைவர்கள் இப்பிரச்சினைக்குச் சுமுகமான ஒரு முடிவு காணவேண்டியது அவசியமாகிறது.

---

2000 ஆம் ஆண்டளவில் ரஷ்யர்கள் முற்று முழு தாய தானியங்கி அதிவேக ஆகாய விமானம் ஒன்றினை பறக்க விட திட்டமிடுகிறுர்கள். முக்கியமான சோவியத் விமானம் கட்டும் அமைப்பாளர் ஒருவரின் கருத்துப்படி — அந்த விமானம் உலகத்தின் எப்பகுதியினை அடைவதற்கும் 2 மணித்தியாலங்களுக்கு மேல் எடுக்காது. அதில் பயணிகளின் சேவைகள் எந்திர மனிதர்களால் தான் கவனிக்கப்படும். இருந்தும் ஒரு 'பைலட்' பயணிகளுக்கு நம்பிக்கையூட்டுவதற்காக விமானத்தின் அறையில் இருப்பார்.

இவ்விமானம் மணிக்கு 10.000 கி.மீ. வேகத்திலும், 30.000 மீற்றர் உயரத்திலும் பறக்கும். இந்த வேகத்திலும் உயரத்திலும் பறக்கும் போது விமானத்தின் வெளிப்பகுதி 550° ச. உஷ்ணத்திற்கு உட்படும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

# ஆத்மீகம் என்றால் என்ன?

மு. தளையசிங்கம்

[மு. த. கடைசியாக எழுதிய கட்டுரை. ஆங்கிலத்தில் எழுதிய இக்கட்டுரை கனடாவிலிருந்து வெளிவரும் INTEGRITY என்னும் சஞ்சிகையில் 1973 பெப் பிரவரி மாதம் வெளிவந்துள்ளது. அதன் தமிழாக்கம் இது.]

ஆத்மீகப் பெறுமதிகளுக்கு அழுத்தங் கொடுத்து தங்கள் பத்திரிகையில் வெளியான பல கட்டுரைகளையும் கடிதங்களையும் படித்த ஒருவனது மனதில் எழக்கூடிய கேள்வி இதுதான்.

உண்மையில் ஆத்மீகம் என்றால் என்ன?

இன்றுள்ள ஸ்தாபன ரீதியான மதங்களாலும் கட்டுப் பெட்டித் தத்துவங்களாலும் அமைப்புகளாலும் பீதியூட்டப்பட்டுள்ள இன்றைய மனிதன், உண்மை எதுவென அறியாது, உமியையும் நெல்லையும் ஒன்றென மாருட்டம் செய்யும் நிலைக்கு வந்துள்ளான். இன்று ஸ்தாபன ரீதியான மதங்களும் கொள்கைகளும் அமைப்புகளும் தமது தேவை தீர்ந்து வாழ்வனவாக உள்ளன என்பது உண்மை தான். ஆனால் அதற்காக ஸ்தாபன ரீதியாக்கப்பட்டுள்ள இந்த மதங்கள் தோன்றிய அக்காலத்திலும் அதற்குப் பின்வந்த நீண்ட காலத் தொடர்ச்சியிலும் அவை ஒன்றுமே சாதிக்கவில்லை என்று கூறிவிட முடியுமா?

மனித இனத்தின் நீண்ட வரலாற்றை நடு நிலையோடு நோக்கும் ஒரு சரித்திர மாணவன் இந்தச் சமயங்களை-முக்கியமாக இந்து மதம் புத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய இந்தச் சமயங்களை-மனித நாகரிகத்தை வளர்த்தெடுப்பதற்கு, நான்கு முக்கிய வாகனங்களாய் இருந்துள்ளன என்பதை அறிவான். அதாவது, உடல், உயிர், மனம், இதயம் ஆகிய எல்லாவற்றையும் பூரணமான ஆத்மீக வாழ்க்கைக்குள் ஒருங்கிணைய வைக்க முயன்ற அளவில் இந்த மதங்கள் மனித நாகரிகத்தை வளர்த்தெடுத்த வாகனங்களாகவே உள்ளன. அந்த முயற்சியில் அவை அந்தந்தக் காலங்களில் அவை தோன்றிய இடங்களில் இருந்த சமூக அமைப்பை அடியோடு மாற்றி அமைத்ததோடு மனிதனின் நனவோட்ட நிலையை முன்னெப்பொழுதுமில்லாத அளவுக்கு மிகவும் உயர்ந்த ஆழமான நிலைக்கும் இட்டுச் சென்றுள்ளன. இன்றைய மனிதன் கூறும் உயர்ந்த இலட்சியங்களான அன்பு, விடுதலை, சகோதரத்துவம், சமாதானம் எல்லாம் இந்தப் பண்டைய மதங்களிலேயே உண்மையாக வேர் பாய்ச்சி உள்ளதைக் காணலாம்.

இன்று ஸ்தாபன ரீதியான மத அமைப்புகளெல்லாம் லோகாயத வீச்சுகளால் விழுங்கப்பட்டு விட்டன. அவற்றின் இன்றைய தலைவர்களும் சிறிய அளவிலேனும் ஆத்மீக ஒளியைக் காட்டக் கூடியவர்களாய் இல்லை. இன்றைய மனிதனும் இத்தகைய பிரிவினை மத அமைப்புகளாலும் அவற்றின் கட்டுப்பெட்டிக் கொள்கைகளாலும் சடங்குகளாலும் கட்டுப்படாது அவற்றை மீறி வளர்ந்து விட்டவனாகவே உள்ளான். இருந்தபோதும் இந்த நான்கு முக்கிய மதங்களாலும் வெளிக் கொணரப்பட்ட அந்தப் பொது உண்மையே - அந்தச் சத்தியமே - இன்றும் எல்லாவித ஒழுக்கங்களுக்கும் ஆத்மீகப் பெறுமதிகளுக்கும் அடிகோலுவதாக உள்ளது. யாராவது இந்த உண்மையை-அதாவது பல்வகை மத சுருதிகளாலும் காட்டப்பட்ட இந்தச் சத்தியத்தை மறுப்பாரானால், உடனே எந்தவித ஆத்மீகப் பெறுமதிகளையும் நிறுவமுடியாத ஓர் லோகாயத வெறுமைக்குள் வீழவேண்டிய நிலை ஏற்படுகின்றது. அத்தகைய லோகாயத வெறுமைக்குள், எல்லாவிதக் கோட்பாடுகளும், எல்லாவித வாழ்க்கை முறைகளும் ஒன்றுக்கொன்று சமமானவையாகவும் சரியானவையாகவுமே படும். ஏன், சிலருக்கு மனிதாபிமானம், கொம்யூனிசம் சோஷலிஸம் அல்லது வேறு இன்னோரன்ன ''இஸங்''களை விட நாஸிசம் இன்னும் தர்க்க ரீதியானதாகவும் இசைவுடையதாகவும் படும். உதாரணமாக லோகாயதம் ஒன்றுதான் உண்மையென்றும் இறப்புக்குப் பின்னர் எதுவுமே இல்லையென்றும் வைத்துக்கொண்டால், நேர்மை என்ற ஒன்றை ஒருவன் ஏன் கடைப்பிடிக்க வேண்டும்? பொறுப்புணர்ச்சி ஏன் இருக்கவேண்டும்? இந்த உலகத்தைக் கோழைகளும் இயலாதோரும் ஏன்நிரப்புவதற்கு விட்டுவைக்கவேண்டும்? லோகாயத வெறுமையை ஏற்றுக்கொள்ளும்போது இத்தகையகேள்விகளுக்கு சரியாகவும் நிறைவாகவும்

பதிலளிக்க முடியாமல் போய்விடுகிறது. இது எதை நிரூபிக்கிறதென்ருல், சர்வமதங்களும்அழுத்தும் பொதுவான ஆத்மீக உண்மையை-அத்தச் சத்தியத்தை-மறுத்தால் எந்தவிதமான ஆத்மீகப் பெறுமதிகளையும் அனுசரிப்பதற்கு இடமில்லாமல் போய் விடுகிறது என்பதையே. ஆகவே எந்த விதமான ஆத்மீகப் பெறுமதிகளையேனும் நிலை நிறுத்த விரும்பினுல் இந்தச் சத்தியத்தை நாம் கட்டாயம் ஏற்றுக்கொள்ளவேண்டும். அப்படி ஏற்றுக்கொள்ளும் அதே நேரத்தில் ஸ்தாபன ரீதியான கட்டுப்பெட்டி அமைப்புகளிடமிருந்தும் கோட்பாடுகளிடமிருந்தும் சத்தியத்தைப் பிரித்தறியக் கூடியவர்களாகவும் நாம் இருக்க வேண்டும்.

இன்று உண்மையான ஆத்மீகத்தை வாழ்க்கையில் கடைப்பிடிக்க அக்கறை காட்டும் எவரும், அப்படித் தாம் தேடும் ஆத்மீக வாழ்க்கை, கடைசியில் சர்வமத சுருதிகளும் கூறும் அந்த ஒரே சத்தியப் பொருளை —குரான் கூறும் அல்லாஹ், புதிய ஏற்பாட்டின் பரிசுத்த ஆவி, பௌத்தத்தின் சம்போதி ஞானம், வேதங்களின் பரப்பிரம்மம் — தேடி உணர்தலிலேயே முடிவடைகிறது என்பதை உய்த்துணர்வர். ஆம், மேலோட்டமான, அற்ப தரவித்தியாசங்கள் இருந்தபோதும் உண்மையில் அடிப்படையான ஒருமைப்பாடே சர்வமதங்களின் பண்பாகும். அவதார புருஷர்களான ஸ்ரீ இராமகிருஷ்ணர், ஸ்ரீ நந்தகோபாலகிரி, இன்னும் இன்றைய ஞானிகளான ரமணர், அரவிந்தர், ராமதாஸ் போன்ருேர் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை முறையும் இதனைத் தெளிவுபடுத்தும். இந்த ஒருமைப்பாட்டை உணர்வதினுலேயே ஸ்தாபன ரீதியான மதங்கள் காட்டும் பிரிவினைகளையும் கட்டுப் பெட்டித்தனக் கோட்பாடுகளையும் சடங்குகளையும் கடக்க முடியும். இவற்றுக்கு வித்திடும் அந்த உண்மையை — சத்தியத்தை — தேடி உணர்வதினுலேயே, ஆத்மீக உலக அமைப்பையும் உலகளாவிய சகோதரத்துவப் பண்பையும் கட்டியெழுப்ப முடியும். ஏனெனில் இந்தச் சத்தியந்தான் எல்லாவற்றினதும் உள்ளோடிய ஆத்மாவாகவும் எல்லாவித ஆத்மீகக் கோட்பாடுகளினதும் ஊற்றுக்கண்ணுகவும் உள்ளது.

---

# சாபம்

எஸ். எல். எம். ஹனீபா

ம்ஹ் இவனுகள் பெரிய மனுஷனுகளாமே!

பெரிய மனுஷனுகள் செய்யிற காரியத்தையா செய்யிறுனுகள். இல்லாட்டி இப்படி இவனுகள் நினைச்சதை எல்லாம்.........இவங்க பலவானுகளாம் அதுக்காக இவங்கட பலத்தையெல்லாம் பலவீனமானவங்களுக்கிட்டயா காட்டிற.

அதுவும் ஒரு பெண்.

இந்த மண்ணில் பொறந்த நாள் தொடங்கி இண்டைக்கு வரையிலும் அந்த பொண்ணு பட்ட கஸ்டங்கள் நினைச்சாலும் நெஞ்சி பகிரெண்ணுது.

உதவி ஒத்தாசையில்லாமல் அனுதையா வளர்ந்த இவள் இப்பிடியான மனத்தோடையா வாழுவாள்.

வாழுமுளோ இல்லியோ? இவனுகள் எல்லாம் சொன்னுச் செரிதானே...!

கண்கெட்ட நாலுபேரு சென்னு கருத்துக் கெட்ட பத்துப் பேரு நம்புருனுகள்.

அப்படி என்னத்தை அவள் செஞ்சி போட்டாள். இவனுகள் சொத்துச் சேர்க்க எப்படியான பாபத்தை யெல்லாம் பண்ருனுகள். இவள் தண்ட பத்திற வவுத்தை நூக்க இப்பிடி வாழ்ந்தா இவனுகளுக்கு அடுக்காது.

நல்ல சமத்துவம் பேசிறுங்க மானங் கெட்டவங்க ஆனு அதன்படி வாழமட்டும் மாட்டாங்க. வாழ்க்கைக்கு சேத்துக் காதைதப்பத்திப் பேசி என்ன பயனே?

இல்லே.........இல்லே!

இவனுகள் வாழ்க்கையை— சமூகத்தை இப்பிடி இவனுகள்ற புறியத்திக்கு மாத்தியமைச்சத்திக்கு சமத்வம் என்ன செய்யும்? அது செல்ருப் போல நடந்தாத்தானே!

அவள் குமர்ப் பொட்டையாம்.

ஆனை வயிறனுகளும் பெரிய மனுசனுகளும் அங்கலாய்க்கானுகள். இவளைப்பாக்க இவனுகளுக்குத் தாங்கலப்போல.

இதுக்கு அவள் என்ன செய்வாள்?

இவள் மட்டுந்தானு இந்த ஊர்ல குமர்ப்பொட்டையாயிருக்காள்?

சேர்மண்ட தங்கச்சிம் குமர்ப் பொட்டை தானே!

அதெல்லாம் இவனுகள்ற கண்ணுக்குள்ள தைக்காது. அதை மூடி மறைக்கத்தான் மரைக்காரு, ஜேபி, ஹாஜியார் பட்டமெல்லாம் இரிக்கே!

அவள் ஒரு குமர்ப்பெட்டை.

குமரென்ருல் பசிக்காதோ ?

முதலில் அவள்ற பசியைப் போக்கிப் போட்டிலுவா இவனுகள் நீதி செய்யனும்.

இவனுகள் நீதி எண்டால் என்னண்டல்லவா கேட்கப் போருனுகள்? இல்லாட்டி இப்பிடியும் செய்யிவானுகளா ? இவனுகள் பெரிய மனுஷன் பத்த இவள் அப்பிடி என்ன சின்ன மனுஷிபத்தினவள் ?

ஒவ்வொரு நாளும் சாயந்தரத்தில இந்த ஊர்சேர்மண்ட தங்கச்சிந்தான் இந்த ரோட்டால போருள்.

அவள் கோலம் சுப்ஹானல்லாஹ்..! முதுகுப்பக்கம் அப்பிடியே வாளமட்ட போல வெட்டாறினக் கிடக்கு. முன்பக்கம் முலேக்காம்பு வெளில ஓடிவரப்பாக்கு. வெள்ளரிப் பழத்தைப்போல அடிவைத்தயும் காட்டிக்கிட்டு இவள் குலுக்கித் திரியிற தெல்லாம் இந்தப் பெரிய மனுஷனுகள்ற கண்ணில படமாட்டிது.

அப்பிடிப்பட்டாலும் அதுதானே அவனுகளற நாகரீகம். ஆனு......

தண்ட பசியைத் தீக்க மத்த வங்கட கையைப் பாக்காம இவள் கஸ்டப்படிறதை மட்டும் இவனுகளால பொறுக்க முடியாது. பாழ் பட்டுப் போவானுகள் !

அவள் துண்டுப் புடவை உடுத் திருக்காளாம்.

நேத்து வட்டி மூஸா ஹாஜியார்ர பெண்சாதி இப்பிடிச் சொல்ருள்.

இதுக்குப் போன கிழமை இவள் நைலோன் புடவையை உடுத்துக் கிட்டு தண்ட அழுக்கையெல்லாம் விளம்பரஞ் செய்துக்கிட்டு காணிவல் பாக்கப் போனதை நான் கண்டனுன். இதெல்லாம் இந்தப் பெரிய மனுஷனுகளுக்கு முமீன் கள்ற அடையாளம்.

ஆனல்...

இவள் துண்டுப் புடவையை உடுத்துக்கிட்டு, தண்ட வயித்தையும் கண் தெரியாத தாயிட வவுத்தையும் கழுவுறத்திற்காகச் செய்யிற காரிய மட்டும் 'ஹறும்' என்கிருனுகள்.

நல்ல ஹலாலும் ஹறுமும்தான்.

இந்த வளுசல்களுக்கும் இந்த வார்த்தைகளுக்கும் வெகுதூரம். நேத்து முஸ்த்தபா ஹாஜியார் இவளுக்குச் செய்த அநியாயம். இதுக்கு இவண்ட மகன் போனமாசம் கொழும்பில ஆரோ ஒரு சிங்களப் பொட்டையொட கூடித்திரிஞ்சண்டு வாங்கு வாங்கென வாங்கிட்டானுகளாம். போதாதற்கு கைலயும் ஒண்டை உடைச்சி கழுத்தில மாலயாகவும் கட்டிட்டிருக்கானுகள்.

அவனுகள்தான் சரியான ஆம்புளேகள்.

இதெல்லாம் இந்தச் சண்டியனுகளுக்குத் தெரியாது.

இவனுகளுக்குத் தெரிஞ்ச தெல்லாம் முஸ்தபா ஹாஜியார்ர மகன் றக்கர் விளேயாட்டில கையை உடைச்சிக்கிட்டாராம் எண்ட சங்கதி தானே !

பாவம் நேத்து அவள்பட்ட ஆக்கினே. அவள்ற தலேயிலயிருந்த சட்டி பானேயெல்லாம் நொறுக்கி...அந்த வண்டிவயிறன் மக்காவுக்குப் போன ஹாஜியார்-எம்பியின் வலதுகையாம்.

அவள்ற கொண்டையைப் புடிச் சித் திரிவி......

சீ ! மானங்கெட்ட செயல்.

அடியே ! தட்டுவாணி சட்டி பானே விக்கிற சாட்டில பொடியனேகளெல்லாம் கெடுத்துக் குட்டிச் சுவராக்கப்போருய் இலுவாடி. உண்ட சாமான்ல மண்ணேப் போட்டு... சீ ! என்ன அசிங்கமான வார்த்தைகள்— அதுவும் மக்காவுக்கு போன ஹாஜியார்ர வாயிலயிருந்து......

பேசவும் வெட்கமாயிருக்கு. எழுதவும் வெட்கமாயிரிக்கி. இதுக்கு இவர்ர ராத்தாட பொடியனுகள் போன இலக்ஷனில கட்டைப் பாவாடப் பொட்டைகளோட கட்டாக் காலிகளாகத் திரிஞ்சானுகள்.

இவனுகள்ற நாத்தத்தை எப்பிடியோ மூடி மறைக்கானுகள்

ஹிப்பிப் பொம்பிளேயெண்டாலும் இவனுகளுக்கு கழிவில்ல. ஏழைகள் எண்டால்—அதுவும் பகலில ஒர நியாயம்தான். இண்டைக்கெல்லாம் அவள் சந்தைப் பக்கம் சட்டிபானே விக்க வரவுமில்லே. ஓம் ! உம்மாவும் மகளும் இன்டைக்குப் பட்டினி தான்.

நாசமாப் போவானுகள்.

---

# சருகு !

யூ. எல். எஸ். ஹஸன்

சுரி சேறு; அதனிடையே
செங் கமலம்!
மலரின் நறுமணம்;
சுரி சேற்றின் துர் நாற்றம்.
நெஞ்சைத் தொடும் நறுமணம்;
நெருங்கிட அச்சம்; சுரிசேறு.
மலரிதழ் விரிப்பு-
மங்கள வரவேற்பு.
அனுபவிக்க ஆசைத் துடிப்பு;
அணுகிட அச்சம்;

சுரிசேறு – சகதி
ஆசை ...?
அச்சம் ... ?
ஏக்கம் !
கோடையின் கொடுமை;
சேறிருந்த இடத்தில் புழுதி
மலரிருந்த இடத்தில் சருகு
நினேவில் மலரிதழ் விரிப்பு;
நறுமணத்தின் சாயல்
மலர் இருந்த இடத்தில்... சருகு !

# மாடுகள்...!

திக்குவல்லை-கமால்

விளக்கேற்றும் வேளை.

மாட்டுக் கொட்டிலைத் துப்புரவு செய்து, வைக்கோற் கட்டுகளை அவிழ்த்து முன்னே விரித்துப்போட்டு, அந்தச் சிறிய காளை மாட்டுக்கன்றின் உடம்பை மென்மையாகத் தடவி, அதன்மேல் தனக்குள்ள பற்றை வெளிக்காட்டிக் கொண்டிருந்தான் ஸமீம். அதுவும் ''ம்பே...ம்பே...'' என்று கத்தித் தனது மகிழ்ச்சியையும் வழமைபோல் வெளிக்காட்டிக் கொண்டிருந்தது.

''இன்ன ஓங்கள தாரோ கூப்பிடிய''— சமையலறை வெளிக்கதவண்மையில் நின்று இப்படி அவன் மனைவி குரல் தொடுத்தாள்.

மாட்டுக் கொட்டிலிலிருந்துவெளியிறங்கியவன், உயர்த்திக் கட்டியிருந்த ஸாரத்தின் முடிச்சவிழ்த்துவிட்டு, அங்குமிங்கும் ஒட்டிநின்ற வைக்கோல் துண்டுகளைத் தட்டியபடி வந்து, கொடியில்... வியர்வை ஊறியதால் காற்றுடப் போட்டிருந்த கைபனியனை எடுத்துப் போட்டுக் கொண்டு, பின் கதவால் வீட்டினுள் புகுந்தான்.

வீடுதேடிவந்து, யாரும் அவனைச் சந்திக்கக்கூடிய அளவுக்கு, அவன் ஏதோ பெரிய அந்தஸ்திலோ உயர் பதவியிலோ இருப்பவனல்லவே!

'என்னை யார்தேடி வரவேண்டும்' என்ற யோசனையுடன் முன்வாசலை அடைந்தபோது, அங்கே ..முற்றத்தில், மாட்டு வியாபாரி முகம்மது நின்று கொண்டிருந்ததை அவன் கண்கள் கண்டு கொண்டன.

அவசரஅவசரமாக முன்வாசல் மூலையில் குவிக்கப் பட்டிருந்த பலா இலைக் கட்டை வாரிக் கொண்டுபோய் உள்ளே போட்டுவிட்டு, மேசை லாம்பைக் கொண்டு வந்து முன்வாசலில் வைத்தான்.

''வாங்கொ.. மொதலாளி வாசலுக்கு வாங்கொ''

வெகு ஆவலுடன் அவனது வரவை எதிர்பார்த்துக் காத்திருந்ததைப் பறைசாற்றும் முகப்பொலிவுடன் மெதுவாக முன்னேக்கி வந்தார் முகம்மது முதலாளி.

''இப்பதான் நான் நாட்டில பெய்த்திட்டு வந்து, பின்னுக்கு வேல செஞ்சிக்கொட்டீந்த...'' — சொற்ப நேரம் அவரைக் காக்க வைத்ததற்கான காரணத்தையும் சொல்லி, தலையைச் சொறிந்து... கழுத்தை வளைத்து... சிரித்துக் கொண்டான்.

''அதுக்கெனத்த இப்ப நான் வந்து அஞ்சி நிமிஷமாலும் ஆகல்லயே''— பின்னே ஏதோ 'பிடி'யை வைத்துக்கொண்டு விட்டுக்கொடுப்பது போலிருந்தது அவர் பேச்சு.

''இரீங்கொ மொதலாளீ நிண்டுக்கொண்டீக்காம''— கதிரையைத் துடைத்துக் கட்டிலிலிருந்த தலையணையை எடுத்துப்போட்டுக் கையாலும் சமிக்கை செய்தான்.

ஒருமுறை நாலு புறமும் இலேசாக நோட்டம் விட்டவர், மனம் இருக்க இடம் கொடுக்காததைக் காட்டிக்கொள்ளாமல் ''ஒரு அவசரமான ஓடர் வந்தீக்கி ஸமீம்'' என்று நேரே விஷயத்துக்கு வந்தார்.

அவன் கழுத்தை இலேசாக வளைத்து அவரது பேச்சுக்குக் காது கொடுத்தான்.

''தெரீமா? களுத்தரேலீந்து ஆளனுப்பீக்காங்க. நாளக்கி எப்பிடியாலுமொரு மாட்டுலொறி அனுப்பச் செல்லி... இப்பேக்கு மூனு பொணயல் கொறவு.. ஒனக்கு இன்டக்கி ஏதாலும் பட்டுதான்டு பாத்துட்டுப் பொக வந்த''

''அப்பிடியா... நாளக்கித்தானே ஒணும்... நான் ரெண்டு பொணயல் வெல பொறுந்தி வெச்சிட்டு வந்தீக்கி. நாள வெளனைக்குக் கொணுவந்து தந்தாப்போதுந்தானே மொதலாளி''

''அப்பசரி நான் மத்தொரு பொணயலேம் எங்களயாலும் தேடிக் கொளுவன். சரி இனி எங்கியன் வெல பொறுந்தீக்கி?''

''எங்கியென்டாலும் கொணுவந்து தந்தாச்சரிதானே மொதலாளி. நீங்க கேட்டாப் பொறகு நான் வேற தாருக்காலும் குடுக்கப் போறேனு?''

''ஹ்ம்... ஒன்ன எனக்கு நம்பிக்கில்லாமலயா ஸமீம். சும்ம பேச்சிவாக்கில எங்கியென்டு கேக்கியன்''

''அதுதான் கிரினெலீ ஆரச்சி மகத்ய ஈக்கியாரே. அவரட ஊட்டில தான்''

'' சரி, எங்கியென்டாலெனு நாளாக்கிப் பத்துமணிக்கு முந்திக் கொணுவந்து தந்திடு. லொறிய ஏன்டமட்டும் நேரத்தோட அனுப்போணும்; அப்ப நான் வாரன். மறந்திடாத''

''மறக்கமாட்டன் மொதலாளி''- சிரித்துக் குனிந்து மகிழ்ச்சியோடு வழியனுப்பிவைத்தான்.

இரண்டு பிணையல் மாடுகளுக்கும் ஏறக்குறைய நூறு ரூபாதான் அவன் போட்டிருந்த இலாப மதிப்பீடு. ஆனால், முகம்மது முதலாளி வீடு தேடி வந்து கேட்டுச் சென்றிருப்ப

பதால் மேலும்பத்துப்பதினைந்து ரூபா கூட்டிப் பெற்றுக்கொள்ளலாம் அல்லவா?

இந்த மகிழ்ச்சிப் பெருமூச்சுடன், லாம்பைத் தூக்கி முன்னே வைத்துப் பழைய புதிய மாட்டுத்துண்டு (ரசீது) களைச் சரிபார்த்துப் புரட்டிக்கொண்டிருந்தான்.

''ஹ்ம்... மறுபேனம் மழகாலம் தொடங்கிக்கி... ஓட்ட புழுந்தீக்கிய ஆக்கூட்டுச் சொகரச் சுருக்கட்டாட்டி ஒடஞ்சி புழுந்திடும்''— மனைவி விடுத்த இந்த விளக்கமும், விளக்கத்தின் பின்னணியில் மறைந்திருக்கும் விண்ணப்பமும் முதற் தடவையானதல்ல!

''எனத்த செய்ய இனி? நீயும் வாய் நிறுத்தாமச் சொல்லிச்செல்லீக்கியாய், நானும் காது கூசாமக் கேட்டுக் கேட்டீக்கியன். கைல மடீல எனத்தியாலும் மிஞ்சினத்தானே செய்யேலும். கல்லென்டாலும் மண்ணென்டாலும் தாரன் சும்ம தரப்போற. எல்லாத்துக்கும் சல்லியோணுமே''

''நீங்கேம் பரம்பர பரம்பரயா இந்தமாட்டுயாவாரந்தானே செய்த.. இன்னேம் ஒரு ஓட்டச் சொகரச் சருக் கட்ட வழில்ல.

''இன்டக்கிவந்த மகம்மது மொதலாளி இந்த ரெண்டு வருஷத்திலேம் ஊட்டக்கெட்டி... லொறி வாங்கி... மூத்த மகளுக்கு மாஸ்டர் மாப்பிளேயெடுத்து... அன்னவார செழமக்கி மத்த மகளுக்கும் சம்மந்தமாம்''

இப்படியாகத் தனது பரம்பரைத் தொழிற் தோல்வியையும் அவரின் இரண்டு வருடகால வெற்றியையும் ஒப்பிட்டுக்காட்டி, தன்னை மனைவி நையாண்டி செய்ததை அவனால் பொறுக்க முடியாத போதிலும் அவள் சொன்னதில் நிறைய நிறைய நியாயம் இருந்ததால் வந்த கோபத்தை வழிமறித்து நிறுத்திக்கொண்டான்.

''ஹ்ம்... பாத்துப் பாத்தீந்தா எப்பவும் நடக்காது நாளக்கே நான் வேலயத்தொடங்கியன்''— நாளைக்கு நூறு ரூபாவுக்குமேல் இலாபமாகக் கிடைக்கவிருப்பதை மனதில் வைத்துக்கொண்டுதான் அவன் இவ்வாறு தைரியமாக உறுதியளித்தான்.

''அல்லா கிருபை செய்யட்டும்''- முகத்தில் மலர்ந்த சிரிப்போடு பிரார்த்தித்தவளாய் சமையலறைப் பக்கம் சென்றாள் அவள்.

நூறு ரூபாத் தாளொன்று கண்ணெதிரே வந்து காட்சியளிப்பது போலிருந்தது அவனுக்கு! அந்த இனிமையான நினைவூடே கருவாட்டுப் பொரியலின் மணமும் வந்து சங்கமித்துக்கொண்டிருந்தது.

✵ ✵ ✵

அடுத்தநாள் அதிகாலை.

இருள் விலகிக்கொண்டுவரும் நேரத்தில் கயிற்றுக் கட்டையும் சுமந்தபடி, வழமையைவிடக் கொஞ்சம் வேகமாக நடந்துகொண்டிருந்தான் ஸமீம்.

காதுகளைச் சுற்றிக் கட்டியிருந்த மப்ளரும் உதட்டுக்கிடையில்புகைந்து கொண்டிருந்த சுருட்டும் குளிரின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த மேற்கொண்டிருந்த முயற்சிகள்தாம் என்பதை எடுத்துக் காட்டிக்கொண்டிருந்தன.

அவனது கால்களில் ஒருவித அசாதாரண வேகம்...

'இன்று மாலையிலேயே செங்கல், மண், சீமெந்துக்கெல்லாம் ஓடர் கொடுத்துவிட்டால்,மறுநாள் சமையலறை திருத்தும் வேலைகளை ஆரம்பித்து விடலாம். அதற்குப் பிறகு மனைவியின் நச்சரிப்பே இருக்கமாட்டாது'

சிந்தனை வயப்பட்டவனாக நடந்து கொண்டிருந்தவன் தொடர்ந்தும் நடந்தால் நிலைமை மோசமாகிவிடுமே என்பதால் பாதையிலிருந்து பெயர்ந்து ஓலைக் குடிசையொன்றின் ஓரத்தில் ஏறிக்கொண்டான். அத்தனைக்கும் காரணம் சிலுசிலுத்துக் கொண்டிருந்த மழை 'சோ'வெனப் பொழிய ஆரம்பித்ததுதான்!

அவன் எண்ணியதுபோல் கால் மணிநேரம் நகர்ந்து விட்டபோதும் மழை ஓய்வதாக இல்லை; என்றாலும் வேகம் ஓரளவுக்குக் குறைந்துதான் இருந்தது.

மழை முற்றாக ஓயும்வரை எதிர்பார்த்திருந்தால் காரியம் சரிப்பட்டு வராது. நேரகாலத்துடன் மாடுகளைக் கொண்டுபோய்க் கொடுத்தால்தானே வாக்குறுதியை நிறைவேற்றியதாகவும் அதே நேரத்தில் அவரின் நம்பிக்கைக்குரியவராகவும் இடம் பிடிக்கலாம்...!

நடந்து கொண்டிருந்தவன் நேரத்தை மிச்சம் பிடிக்கும் எதிர்பார்ப்புடன்தான்போலும் வயல் வரம்புக்கு மேலால்-குறுக்குப்பாதையால்-நடக்கத் துவங்கினன்.

கால்களில் அப்பியிருந்த சேற்றைக் கழுவிக்கொண்டு ஆரச்சி மகத்தயாவின் தோட்டத்துக்குள் புகுந்தான் ஸமீம். அங்கே வேலை செய்து கொண்டிருந்த அவரின் மூத்தமகன் அவனை வரவேற்றான்.

''மாடுகள எடுத்துக்கொணு பொக வந்தன்'' என்றான் சிரித்தபடி சிங்களத்தில்!

இதைக் கேட்டதுமே சற்று அதிர்ச்சியடைந்தவன்போல ''அதத்தானே கொணுபெய்த்தாங்களே'' என்றான்.

''கொணுபெய்த்தாங்களா? நான் இன்டக்கித்தானே வாரென்ட'' என்றான் எதிர்பாராத ஏமாற்றத்துக்குள்ளான ஸமீம்.

''நீங்க சென்னென்டு நேத்து ராவு முகம்மது மொதலாளிட ஆக்கள் லொறீல வந்து கொணுபெய்த்தாங்க''

''அ...ப்.. பி...டி...யா?''— எத்தனையோ இன்ப நினைவுகளும் எதிர்பார்ப்புகளும் நொடிப்பொழுதில் தூள்தூளாக்கப்பட்டுவிட்டதென்பதை அந்த ஒரேயொரு வார்த்தையும்.. அதனுடன் கலந்துவந்த பெருமூச்சும் பிரதிபலித்தன.

''நீங்க பொறுந்தின வெலயிலேம் பாக்க பத்துப் பத்து ரூவக் கூடேம் தந்தாங்க''

தொடர்ந்தாற்போல் இன்னொரு தாக்கம்!

''சரி எனத்த செய்ய... நான் இதப்பத்திக் கதச்சன். யோசிக்காம வாய் முந்தினத்தாலதான் அவங்க வந்து பொய்செல்லி வாங்கிக்கொணு

பெய்த்திக்காங்க சரி வாரன்''- அவர்களையும் பிழைசொல்ல வழியில்லாத நிலையில் தனது கவனயீனமே முழுமுதற் காரணமென்பதை வெளிக்காட்டிவிட்டு விடை பெற்றுன்.

'சீ! முகம்மது முதலாளியின் அயோக்கியத்தனம். பணம் சம்பாதிக்கத் தான் வேண்டும். அது ஒவ்வொருவரினதும் உழைப்பிலும் முயற்சியிலுமல்லவா தங்கியிருக்கிறது. மாருக, அடுத்தவனை ஏமாற்றிவயிற்றிலடித்துச் சம்பாதிப்பதென்ருல்...' அவனது உள்ளம் நியாயமான கேள்விகளைத் தனக்குள் எழுப்பி நொந்து கொண்டது.

முகம்மது முதலாளி அவனை நன்ருக ஏமாற்றி விட்டிருந்தார். இத்தொழிலில் இத்தனை வருட அனுபவத்திலும் இப்படியொரு தோல்வியை அவன் அனுபவவித்ததேயில்லை.

நேரடியாகப் பேசித் தனக்கு அவசரமாக மாடுகள் தேவை, போய் எடுத்துக் கொள்கிறேன் என்று கேட்டிருந்தால் தனக்கு நஷ்டமே யென்ருலும் அவன் இவ்வளவு தூரம் கவலைக்குள்ளாகியிருக்க நேர்ந்திருக்காது. நாசூக்காக வீடு தேடிவந்து முழு விபரத்தையும் புத்திசாலித்தனமாகக் கேட்டுக்கொண்டு—அதுவும் நாளைக்குத் தனக்கே கொண்டு வந்து தரும்படி சொல்லி விட்டு—இரவோடிரவாக ஆளனுப்பி வாங்கி, தன்னை இவ்வளவுகஷ்டமும் நஷ்டமும் பட வைத்ததையிட்டுத்தான் அவன் வெகுவாகக் கவலைப்பட்டான்.

அந்தக் கவலை போதாக் குறைக்கு அப்போதவனுக்கு வீட்டுச்சமையலறையின் ஓட்டைச் சுவருமா ஞாபகம் வந்து அவனுள்ளத்தில் இன்னும் ஓட்டை போடவேண்டும்!

நேற்று மனைவியின் முன் தைரியமாகப் பேசியபேச்சு அவன் செவிகளில் ஒருமுறை ஒலித்தது போலிருந்தது.

நூறுரூபாத் தாளொன்று கண்ணெதிரே மின்ன, அதை ஆசையோடு எடுக்கக் கைநீட்டியபோது, எதிர்பாராமல் வேறு யாரோ எடுத்துக் கொண்டோடி விட்டால் எப்படியிருக்குமோ அப்படிப்பட்ட நிலையில் தான் அவனும் இருந்தான்.

✽ ✽ ✽

மாட்டு முதலாளி முகம்மது இலேசான பேர்வழியல்ல; கொழும்புக்கும் கதிர்காமத்துக்கு மிடையில் —சம்பந்தப்பட்ட வட்டாரத்தில்— அவரைத் தெரியாதவர்கள்யாருமே இருக்கமுடியாத அளவுக்குப் பிரசித்தமானவர். ஆனுல்அவரின் இந்தச்சின்னத் தனங்களெல்லாம், அவரால்தாக்கப்பட்டவர்களைத் தவிர வேறு யாருக்குமிடையில் பிரசித்தமில்லை'

இதற்கு முன்பும்கூட, பலதடவை அவனுடன் பழகும் சில்லறை வியாபாரிகள் பலர் முதலாளியின் இத்தகைய செயல்கள் பலதை எடுத்துக் காட்டி, இவ்வளவு துரிதகதியில் அவர் முன்னேறுவதற்கு இவைதான் காரணமென்று அழுத்திக் கூறிய போதும் அதையெல்லாம் அவன் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனுல் இன்று முற்றும் முழுதாக அவையெல்லாம் உண்மைதான் என்பதைச் சுய அனுபவபூர்வமாக நன்ருக உணர்ந்து கொண்டான்.

வீட்டை நெருங்க நெருங்க மனைவி தொடுக்கப்போகும் கேள்விக் கணைகளை நினைக்க நினைக்க அவனுக்கு என்னபதில் சொல்வதென்றே புரியவில்லை. கயிற்றுக் கட்டைப் படிக்கட்டில் போட்டுவிட்டு உள்ளே நுழைந்தான்.

''ஆ... நீங்க செல்லிச் செல்லிக்கிய... அன்ன வௌனேலீந்து பேஞ்ச மழக்கி ஆக்கூட்டுச் சொகரு ஒடஞ்சி புழுந்திட்டு''— எதிர்பார்த்ததுபோல் மனைவியின் குரல்; ஆனுல் கொஞ்சமும் எதிர்பார்க்காத விஷயம்!

''போடீ போரத்துக்கு... வந்தொடனே தொடங்கீட்டாய்'' எல்லாக் கோபத்தையும் சேர்த்து வைத்தான் ஒரு சத்தம்.

என்றுமில்லாதபடி கணவன் இன்று இப்படிக் கோபமாக எரிந்து விழுந்ததற்கான காரணம் அவளுக்குக் கொஞ்சமும் புரியவில்லை.

மப்ளரையும் சேட்டையும்கழற்றி ஒன்ருகச் சுருட்டிக் கட்டில் மூலையில் எறிந்து விட்டுப்'படா'ரென்று பின் கதவைத் திறந்துகொண்டுபோய் இடிந்து விழுந்திருந்த சுவரை அப்படியே பார்த்துக்கொண்டு நின்ருன்.

பக்கத்தில் மௌனமாக நின்று கொண்டிருந்தாள் மனைவி.

''ம்பே... ம்பே...''— ஸமீமைக் கண்டுகொண்ட மகிழ்ச்சியில் மாட்டுக் கன்று துள்ளிக் குதித்து ஆரவாரம் செய்தது.

''ஹ்ம்... எங்கள மாடுகளுக் கணக்கெடுத்துக் கொண்டீக்கானுகள்... இவனுகளுக்கு இனி நல்ல பாடம் படிப்பிக்கோணும்'' இப்படி இரைந்து ஸாரத்தை உயர்த்திக்கட்டிக்கொண்டு மாட்டுக் கொட்டிலை நோக்கி நடந்தான் ஸமீம்.

அப்பொழுதுதான் இடையில் வேறேதோ குழப்பம் நடைபெற்றிருக்கிறதென்ற உண்மை அவளுக்குப் புரிந்தது.

---


ஈழத்தின் தனித்தன்மை பேணும் அரிய சஞ்சிகைகள்

**பூரணி**
**மல்லிகை**
**குமரன்**
**ஊற்று**
**சிரித்திரன்**

பணம் கொடுத்து வாங்கிப் படியுங்கள்!

# புத்தகங்கள்

கே. எஸ். சிவகுமாரன்

## ஒருசில விதி செய்வோம் — முருகையன்

பாரம்பரியக் கவிதை மரபுடன் நவீனத்துவத்தை இணைப்பது எப்படி என்பதே இன்றைய தமிழ்க் கவிஞர்களின் முக்கிய பிரச்சினையாகும். பழமை தேங்கி நிற்கிறது என்பது உண்மையே. ஆயினும் போலியான புதுக்கவிதையும் கூடவே இருந்துவருகின்றது. பழம் பெரும் சுமையும், சூனியவாத புதுக்கவிதையும் முரண்பட்டு நிற்கின்றன. நவீனத்துவத்தின் பிரச்சினைகளை ஆராய்வது அவசியம். கண்மூடித்தனமாக பழமை போற்றுதலும், மேலோட்டமான நவீனத்துவ வியப்பும் உண்மையில் சீரழிவின் சின்னங்களாகும். இந்தச் சீரழிவு நிலை ஏன்?

தமிழில் கவிதை விமர்சனம் புறக்கணிக்கப்பட்ட துறை என்று கவிஞனின் குரல் ஒன்று உரத்துக் கேட்கிறது. அவன் ஒரு விமர்சகனும் கூட. அவர் கூறுவது சரியே. உடன்நிகழ்கால உணர்வுக்கு ஏற்ப கவிதையை மதிப்பிடும் தகுதி வாய்ந்த விமர்கர்கள் நம்மிடையே இல்லாமையே இந்தத் தேக்கத்திற்குக் காரணம். கல்விமான்களும் நுண்மையான விமர்சகர்களும் எம்மிடையே இருந்தாலும் இவர்கள் கவிதை விமர்சனத்தில் தீவிரமாக இதுவரை ஈடுபடவில்லை. எனவே ஒருசில அடிப்படை வரன்முறைகளை அனுசரித்தால் கவிதை விமர்சனம் என்பது எட்டாத துறை அல்ல என்பதை நிரூபிக்கும் விதத்தில் கவிஞர் முருகையன் விமர்சகனாக நின்று செயற்பட்டுள்ளார்.

கவிதையை எழுதவும் விமர்சிக்கவும் உதவும் விதத்தில் கவிஞர்களுக்கும் விமர்சகர்களுக்குமாக ஒருசில விதிகளைச் சமர்ப்பித்துள்ளார். 'ஒரு சில விதி செய்வோம்' என்ற நூலில் இவை விபரிக்கப்படுகின்றன. அது ஓர் விமர்சன ஆய்வாகவும் புதுமரபினருக்கு வழிகாட்டியாகவும் அமைகின்றது,

முதலாவது அதிகாரத்தில் தமிழ்நாட்டிலும் ஈழத்திலும் நவீன கவிதை இயங்கி உருவாவது பற்றி போக்கோடு போக்காக விபரிக்கப்படுகின்றது. சோமசுந்தரப்புலவர், நாவற்குழியூர் நடராஜன், நவாலியூர் நடராசன், மஹாகவி ஆகியோர் பற்றி நிதானமாக அவர் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் அவதானிக்கத்தக்கவை. 1956-ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஒளிவிடத் தொடங்கிய நீலா வணன்' காசி ஆனந்தன், ராஜ பாரதி, தான்தோன்றிக் கவிராயர், முருகையன் போன்ருேர் சுதந்திர இயக்கத்துக்குக் கவிதையை ஓர் ஆயுதமாகப் பாவித்தனர்.

சாதாரண பேச்சுவழக்குப் பிரயோகம், மரபில் அமையாத கவிதைப் பொருள்களின் தேர்வு, பரிசோதனையை மேற்கொள்ள அவர்கள் கொண்ட வேணவா ஆகியன அவர்களைத் தமிழ்நாட்டுக் கவிஞர்களில் இருந்து வேறுபடுத்திக்காட்டின. அதே காலப்பகுதியில் தமிழ்நாட்டுக் கவிதையில் மூன்று அம்சங்களை இனங்கண்டுகொள்ள முடிகின்றது; திராவிடக் கொள்கை, ஒலிநயம், புதுக்கவிதைப்போக்கு. திரைக்கவிஞர் கண்ணதாசன் மற்றும் சுரதா, முடியரசன், கருணாநிதி, பிச்சமூர்த்தி, வைதீஸ்வரன், ஞானக்கூத்தன், காமராசன் போன்றவர்கள் தென்னிந்திய தமிழ்க் கவிதையுடன் தொடர்புபடுத்தப்பட்டனர்.

முருகையன், ஏனைய அதிகாரங்களில் எளிமை, உள்ளடக்கம், ஒலிநயம் மற்றும் நவீன கவிதையின் இதர அம்சங்கள் ஆகியன பற்றி பகுத்தாராய்கிருர் இந்த எனது அபிப்பிராயம் நீண்டுவிடும் என்ற அச்சத்தில் புதுக்கவிதை பற்றிய அவருடைய குறிப்புக்களை மாத்திரமே இங்கு நான் தருகின்றேன்.

எண்ணங்களின் சேர்க்கை, கற்பனை, அதீத கற்பனை ஆகியவற்றின் உருவ அமைதி, ஒலிநயம் ஆகியவை ஒரு நல்ல கவிதையின் சிறப்பம்சங்களில் சில. இவையும் பிற அம்சங்களும் சம அளவில் அமைதி காணும்பொழுது நல்ல கவிதை என்று சொல்லத் தக்க கவிதை உருப்பெறுகின்றது. தமிழ்ப்புதுக்கவிதை முற்றுகவே ஒலி அமைப்பைப் புறக்கணிக்கின்றது. இதனுல் சமநிலை குலைந்து யாவும் குலைகின்றன. புதுக்கவிதை, யாப்பையும் ஒதுக்குகின்றது. யாப்பு முறையை வாலாயமாக்குவது அப்படி ஒன்றும் கஷ்டமானதல்ல. தமிழ்க் கவிதையில் யாப்பு முறையைத் தெளிவாகவும் விஞ்ஞான ரீதியாகவும் முருகையன் விளக்குகிருர். வெவ்வேறு காலகட்டத் தமிழ்க் கவிதைகளை உதாரணங்களாகவும் அவர் பயன்படுத்து

கின்றார். தமிழ்ப் புதுக் கவிதையின் அடிப்படைக் கோளாறு அதன் பன்முக ஒலி அமைப்பாகும். இந்த அபஸ்வரமும் அவற்றின் உள்ளடக்கமும் தமிழ்ப் புதுக்கவிதையில் கோணங்கிக் கூத் தாக்குகின்றன என்கிறார் அசிரியர். இக்கவிதைகளில் உள்ள அந்நிய அல்லது வித்தியாசமான கவிதைப் பொருள்கள் காரணமாக பலர் இப்புதுக்கவிதைகளை ரசிக்கமுடியாதிருக்கின்றது. அந்நிய சமூக அமைப்பு களில் எழுந்த உணர்வு அனுபவங்களைத் தமிழ்ப் புதுக்கவிதையில் வடிக்க முயல்வது இங்கு சுவாரஸ் யமான பொழுதுபோக்கு அப்பியாசமாக அமைகின் றது.

தமிழ் பேசும் பெரும்பான்மை மக்கள் மத்தியில் ஓர் தாக்கத்தை விளைவிக்க இந்தக் கவிதைகள் சக்தி யற்றவையாக இருக்கின்றன. எனவே தமிழில் புதுக் கவிதை கவிதை மரபின் ஆரோக்கியமான விளைவாக இல்லை என்று கருதுகிறார் இந்தக் கவிஞர் – விமர்சகர்.

மேற்கு நாடுகளை எலியட், பவுண்ட் போன்ற கவிஞர்களின் மதிப்பைக் குறைத்தும் மறுமதிப்பீடு செய்தும் இருக்கும் இவ்வேளையில் அவர்களை பிரதி பண்ணும் நம்மவர்கள் மேற்கு நாட்டுக் கொடுமுடி களை இன்னுமே நாம் புரிந்துகொள்ளவில்லை என்று கண்ணீர் வடிக்கின்றனர். முருகையனின் கருத்துப்படி இப்புதிய கவிஞர்கள் வேஷதாரிப் படைப்புகளை மகத் தானவை என்று மயங்குகின்றார்கள். தமிழ்ப் புதுக் கவிதையின் உள்ளியல்பாக தோல்வி மனப்பான்மை யும் அவநம்பிக்கையும் இருந்து வருகின்றன.

'இன்சைட் மிஸ்ரர் என்டர்பி' என்ற நாவலில் கதாநாயகனுடன் புதுக்கவிதையாளர்களை முருகை யன் ஒப்பிடுகின்றார். இவர்கள் குளியலறைக் கவிஞர் கள் என்கிறார் ஆசிரியர். வேறுசில புதுக்கவிஞர்கள் உறுதியான பயன்மதிப்புகள் பற்றி எழுதியபோதிலும் இயக்கங்களில் ஈடுபடாமல் ஒதுங்கிநின்றனர். இவர்க ளுடைய கவிதைகள் புரட்சிக்கான கற்பனையைக் கனவு கள். அதீத கற்பனையும் கனவும் (அதாவது கற்பனாவாதக் கவிதை) உண்மைக் கவிதை என்று குழப்பமடையக்கூடாது என ஆசிரியர் எச்சரிக்கை விடுத்திருக்கிறார். உறுதியான நம்பிக்கை தரும் விருத்தி பற்றிய பிரக்ஞையே முதலில் வேண்டப்படு வது. பழம் சிறப்பு மாத்திரமே விரும்பத்தக்கது என்ற மயக்க நிலை கைவிடப்படவேண்டும். மனித வரலாறு வீழ்ச்சியின் துன்பக் கதை அல்ல. அது நம்பிக்கையூட் டும் உறுதியான பயன்மதிப்புகளின் கதையாகும். கற்பனா அவஸ்தையும் சோகம் சார்ந்த அவநம்பிக் கைப் போக்கும் எமது கவலுறும் கவிஞர்களை மருட் டக்கூடாது என்று கவிஞர் சட்டம் வகுக்கிறார்.

உள்ளடக்கத்தின் சேவகர்களே யாப்பும் ஓசை யும் ஆகும். கலைக்காக உத்திகளை அன்றி உத்தி மாத் திரமே கலையாகாது. சொற்சிக்கனமும் புலன்களுக்குப் புலப்படும் உடன் சூழலில் இருந்து பெறப்படும் படி மப் பிரயோகமும் வாசகருக்குப் புரியும் வண்ணம் எழுதுதலும் கவிஞர்கள் கவனத்திற்கு எடுத்துக்கொள் ளத்தக்கவை. நவீன கவிதையின் அடிநாதமாக தெளிவு இருத்தல் வேண்டுமேயன்றி மயக்கம் அல்ல என முருகையன் சுட்டிக்காட்டுகிறார்.

எந்தவிதமான எழுத்திலும் எவரும் பின்பற்ற வேண்டிய வெளிப்படையான அனுசரணைகளே இவை. ஆயினும் தமிழில் இது வலியுறுத்தப்படுவதற்கான காரணம் தற்சமயம் தமிழ்க் கவிதை வலுவிழந்து நிற்பதுதான். கவிதை பற்றி பொதுவாகவும் தமிழ்க் கவிதை பற்றிக் குறிப்பாகவும் மேலும் பல விஷயங் களை ஆசிரியர் காத்திரமான முறையில் சொல்லி யிருக்கிறார். இங்கு நான் இந்த நூலை வெறுமனே அறிமுகப்படுத்தியுள்ளேன். கவிதையில் உறுதிப் பொருட்கள் அல்லது அம்சங்களை முழுமையாக இந்த நூல் ஆராய்கின்றது. முருகையன் வழமையாக உயர் கல்விப் பாங்கான நடையில் எழுதுபவர். இதனை அவர் நேரடியாகவும் இறுக்கமாகவும் எழுதியுள்ளார்.

---

## நான் சாகமாட்டேன்

—செ. கதிர்காமநாதன்

இலக்கியம் என்பது வாழ்க்கையின் கூற்று என்றால், காலஞ்சென்ற கதிர்காமநாதனின் 'வியட்னாம் உனது தேவதைகளின் தேவ வாக்கு' என்ற சிறுகதை ஒரு மனித வாழ்வுக் கூற்றாகும். சைகோனில் அமெரிக்கத் துருப்புக்களின் பிரசன்னம் இருப்பதைக் கண்டனம் செய்யும் தேசாபிமானியாகிய வியட்னாமிய பெண் ஒருத்தியின் கூற்று அது. அத்துடன் ஏகாதிபத்தி யத்தை – அது ஜப்பானிய, பிரேஞ்சிய அல்லது அமெ ரிக்க ஏகாதிபத்தியமாகவும் இருக்கலாம் — எதிர்க்கும் வியட்னாமிய மரபின் தொடர்ச்சியாகவும் அவள் மூலம் அந்தக் கூற்று அமைகின்றது.

தேசியவாதத்தின் வளர்ச்சி சர்வதேசியமயமாக வியாபிப்பதாக இருந்தால் (தேசாபிமானத்தை வளர்க்க தேசியவாதம் பயன்பட்டு, ஓய்ந்த பின்னர் தேசியவாதம் என்ற ஒடுங்கிய வரையறையில் இருந்து குதிர்த்தெழும் எழுத்தாளர்களின் நோக்கத்தைக் தெளிவாக்கும் விதத்தில் கதிர்காமநாதனின் அந்தக் கதை அமைந்துள்ளது. அவர் எழுதிய கடைசிக் கதை இதுவாகும்.

சென்ற ஆண்டு செப்ரெம்பர் மாதம் தமது முப் பதாவது வயதில் கதிர்காமநாதன் மரணமடைந் தார். அவர் மறைவின் பின்னர் மூன்று சிறுகதை

களும் ஒரு மொழிபெயர்ப்பும் அடங்கிய தொகுப்பு வெளியாகி இருக்கின்றது. தமிழ்மொழி மூலம் பட்டதாரிகளாகிய முதலாவது எழுத்தாளர் குழுவில் கதிர்காமநாதன் பெரும் திறனுற்றல் பெற்றவராக விளங்கினர்.

தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்களில் அவர் ஒரு முக்கிய படைப்பாளி. அவருடைய சிறுகதைகளில் ஒன்று யுனெஸ்கோவினுல் 42 மொழிகளில் பெயர்க்கப்பட்டு வருகின்றது. 'ஒரு கிராமத்துப் பையன் கல்லூரிக்குச் செல்கின்முன்' என்ற அந்தச் சிறுகதையும் இந்தத் தொகுப்பில் உண்டு. அத்துடன் முன்னர் கூறிய வியட்னும் கதையும் இடம்பெற்றிருக்கின்றது. கரவெட்டி கிராமத்தைப் பூகோள ரீதியாக விபரிக்கையில், மட்டுமீறினுலும் கிராமியப் பாடசாலை சார்ந்த நிலமானிய அமைப்பை உள்ளார்த்தமாக கதிர்காமநாதன் கிராமத்துப் பையன் கல்லூரிக்குச் செல்கின்முன் என்ற கதையில் சித்திரித்துள்ளார். பழைய சமூக அமைப்பின் சிதைவைப் பிரதிநிதிப்படுத்தும்சாதிவெறிகொண்ட ஆசிரியர் ஒருவரின்வீழ்ச்சியையும் அவருக்கு எதிராகப் போராடும் ஒரு முற்போக்கு இளைஞனின் உளப்போராட்டத்தையும் அவர் இந்தக் கதையில் சித்திரிக்கின்முர்.

மூன்ருவது கதையான 'வெறும் சோற்றுக்காக' என்ற கதை வெறும் ஆட்சேபனைக் கதையாக அமையாது வேலைக்காரச் சிறுமி ஒருத்தியின் உள் மனக் கோவையை மென்பையாகச் சித்திரிக்கின்றது. எஜமானி தன் மீது திணிக்கும் கட்டுப்பாடுகளில் இருந்து விடுவிக்க வேலைக்காரப் பெண் எடுக்கும் முயற்சி கலை நயத்துடன் சித்திரிக்கப்படுகின்றது.

கிருஷ்ன் சந்தர் என்ற உருதுமொழி எழுத்தாளர் 1942ஆம் ஆண்டு வங்காளத்தில் ஏற்பட்ட பஞ்சத்தை மையமாக வைத்துத் தீட்டியுள்ள கதையை கதிர்காமநாதன் தமிழில் பெயர்த்துள்ளார். இந்தக் கதை நவீன உலக இலக்கியத்தில் சிறப்புப் பெற்ற கதைகளுள் ஒன்ருகும்.

கதிர்காமநாதனும் ஏனைய முற்போக்கு எழுத்தாளர்களைப் போலவே கோட்பாடு ஒன்றைக் கடைப்பிடிப்பவர். ஆயினும் அதனை கதைகளாகச் சித்திரிக்கும் பொழுது கதை வடிவத்திற்கும் அவர் அக்கறை செலுத்துகிருர். சிறுகதை என்ற வடிவம் அவருடைய முழு ஆளுமையையும் சித்திரிப்பதற்கு இடம் கொடுக்கவில்லை ஆயினும் வரையறைகளுக்குள் அவர் சாதித்திருப்பவை பாராட்டத் தக்கன. தொடர்ந்து அவர் வாழ்ந்திருப்பாராயின் மற்றுமொரு முக்கிய நாவலாசிரியரை நாம் பெற்றிருக்க முடியும்.

---

## வீடு யாருக்கு?

காவலூர் ராசதுரை

கொழும்பு போன்ற பெரிய நகரங்களில் வாழும் தமிழர்கள் வாழ்வின் வேடிக்கை நிலைகளை நன்கு அறிந்துகொள்ள காவலூர் ராசதுரையின் குறுநாவல் உதவுகின்றது. மேற்பரப்பில் வேடிக்கையாக இருந்தாலும் சராசரித் தமிழன் (இந்தியன் என்றுல் என்ன ஈழத்தவன் என்றுல் என்ன) காரியத்தில் கண்ணுள்ளவன் என்பது சுட்டிக்காட்டப்படுகின்றது. தமிழ் பேசும் ஈழத்தவர்களும் இந்தியர்களும் (தேசியப் பிரஜைகளும், அல்லாதவர்களும்) கூடுதலாக வடக்குக் கிழக்குத் தவிர்ந்த ஏனைய பாகங்களில்தான் வாழ்கிருர்கள்.

கொழும்பில் எங்கேயோ சிங்கள முதலாளி ஒருவரின் வீட்டில் யாழ்ப்பாணக் குடும்பம் ஒன்றும் இந்தியக் குடும்பம் ஒன்றும்வாடகைக்குக் குடியிருக்கின்றன. யாழ்ப்பாணக் குடும்பத்தில் தந்தை, மணமாகிய மகன் (அவன் மனைவி யாழ்ப்பாணத்தில்) மணமாகாத மகள் ஆகியோர் அங்கம் வகிக்கின்ருர்கள். இந்திய குடும்பத்தில் தந்தை, தாய், மணமாகாத மகன் ஆகியோர் இருக்கின்ருர்கள். கள்த்திராப் பிரகாரமாக குடிவரவுத் திணைக்கள அதிகாரிகள் இவர்கள் வீட்டுக்கு வந்த தினம் ஒன்றில் கட்டாயமாக நாட்டைவிட்டுத் துரத்தப்படுவோம் என்ற அச்சத்தில் இந்தியக் குடும்பம் மறைவிடம் தேடுகின்றது. இந்த இக்கட்டான நிலையைத் தனக்குச் சாதகமாக யாழ்ப்பாணத்துத் தமிழ்ச் சகோதரர்கள் தேசிய மரபிற்கு ஏற்ப பயன்படுத்திக் கொள்கிருர்கள். ஆயினும் பெரிய ஆழமான வர்த்தகப் புலியாகிய சிங்கள முதலாளி சிறந்த புத்திபடைத்த இந்தத் தமிழ்ப் பேசும் திராவிட குழுக்கள் மனவிரக்தி ஏற்படும் விதத்தில் உச்சாணிக்கொப்புக்கே சென்றுவிடுகிருர். உண்மையில் இது தமிழ் எதிர்ப்போ இந்திய விரோதமோ அல்ல-வர்க்கப் போராட்டமே அடிப்படையில் உள்ளது. இதுவே கதைப் போக்கு. ஆனுல் அதுவல்ல முக்கியம் புறக்கோட்டை, பஞ்சிகாவத்தை போன்ற இடங்களில் இடம்பெறும் துரித வர்த்தகத்தின் முறையை அம்பலப்படுத்துவதே இந்நாவலின் உள் நோக்கம்.

பாதகமான சினிமாத்துறை பதம் ஒன்றின் மூலம் கூறுவதனுல் இந்த இந்தியத் தொடர்பு (பிரெஞ்

கெணக்ஷன் என்ற படம் வெளிவந்தது ஞாபகமிருக்கலாம்) பிரச்சினைக்குரிய புறக்கோட்டையைச் சேர்ந்த நாடார் ஒருவரின் பாத்திர அமைப்பு மூலம் விபரிக்கப்படுகின்றது. யாழ்ப்பாணக் குடுப்பத்திற்கே உரிய குப்பைகூழப் புழக்கமும் நகைச்சுவையாக விபரிக்கப்படுகின்றது. பணம் குவிக்கும் சிங்கள வீட்டுச் சொந்தக்காரரின் டாம்பீகமும் கதையில் கூறப்படுகின்றது. இந்தக் கதாபாத்திரங்கள் பொதுப்படையானவை அல்ல என்றாலும் பிரதிநிதிகள் மாத்திரமே என்பது உண்மையே. ஆயினும் யாரையும் புண்படுத்தும் நோக்கம் நாவலில் இருப்பதாகத் தெரியவில்லை. மாறாக நல்ல நகைச்சுவை நாவல் முழுவதிலும் வியாபித்திருக்கின்றது. தமிழ்ச் சமூகத்தினர் வேடிக்கையான நிலைமைகளில் எவ்வாறு நடந்துகொள்கிறார்கள் என்பதை தமிழர் ஒருவர் சித்திரிக்கின்றார்.

கொழும்பு மாநகரசபையைச் சேர்ந்த சிங்கள உறுப்பினர் ஒருவர்மூலம் தமிழ் பேசும் இலங்கையர் பற்றிய தனது கருத்தை ராசதுரை தெரிவிக்கின்றார். (தயவு செய்து நாவலைப் பார்க்கவும்) இந்த நாடார்களின் நற்பண்புகளும்நாவலில் கூறப்பட்டுள்ளது. கதை சொல்லும்போது ஆசிரியர் சில உண்மைகளை எடுத்துக் கூறி இருக்கிறார். நாவலின் சுமுகமான வாசிப்புக்கு இவை தடங்கலாக இல்லை. அதாவது வெளி ஒதுங்கி நிற்கவில்லை.

---

# மதமும் விஞ்ஞானமும்

எம். சின்னத்துரை

அரசியல் பொருளாதார சமூக விஞ்ஞான பின்னணியில் மதத்தை இந்நூல் நோக்குகின்றது. அதே வேளையில், கிழக்கிலும் மேற்கிலும் மத ஸ்தாபனங்களின் வரலாற்று வளர்ச்சியையும் எடுத்துக் கூறுகின்றது. இளம் தமிழ் எழுத்தாளர்கள் இன்று மரபை நவீனத்துவ நோக்கில் அணுகி வருகிறார்கள். மதத்தை இந்தப் புதிய நோக்கில் அணுகும் இத்தகைய முதல் எழுத்தாளர் இந்நூலின் ஆசிரியர் எம். சின்னத்துரைதான் என்று நினைக்கின்றேன்.

மதம்— விஞ்ஞானம் என்ற சுவாரஸ்யமான பொருள் பற்றிய பல்வேறு கருத்துக்களை தமது நூலில் உள்ளடக்க ஆசிரியர் முற்பட்டுள்ளார். மத்திய காலங்களில் விஞ்ஞானிகள் கொல்லப்பட்டது பற்றியும் அதனால் ஆய்வறிவுப்புரட்சி எப்படி ஏற்பட்டது என்றும் புதிய பகுத்தறிவாளர்கள் விஞ்ஞானமற்ற போக்குகளைப் புறக்கணித்தது பற்றியும் ஆசிரியர் கூறுகின்றார். மனிதன் இயற்கை ஆகியன பற்றிய பழங்காலக் கொள்கைகளுடன் சதா போரிட்டே நவீன விஞ்ஞானம் அளப்பரிய சாதனைகளைச் செய்ய முடிந்தது. ஆசிய மக்கள் பொதுவாக பழமை பேணுபவர்கள் என்று ஆசிரியர் கூறுகின்றார். கடந்த இரண்டு நூற்றாண்டுகளாகமேற்குஉலகம் கண்ட மகத்தானலௌகீகமுன்னேற்றம் அவர்களைக்கவருவதில்லை. முன்னேற்றத்திற்குப் பதிலாக மரபையும் சமய நம்பிக்கைகளையும் விரும்புகிறார்கள். மறைஞான அனுபவங்கள், அகநோக்கு, அக உணர்வு ஆகியன மூலம் பெறப்பட்ட ஆன்மீக முன்னேற்றத்தையே அவர்கள் விரும்புகிறார்கள். தர்மம் என்ற பெயரில் பல லட்சக் கணக்கான மக்கள் வறுமை, அடிமைத்தனம் போன்ற வற்றிற்கான காரணத்தை அறியாது வைக்கப்பட்டிருக்கிறார்கள் என ஆசிரியர் கூறுகின்றார்.

அன்றைய காலத்திற்கு உகந்தவாறு பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னர் வரையப்பட்ட வேதங்கள் இன்று போற்றப்படுகின்றன. என்று ஆசிரியர் கூறுகிறார். மூட நம்பிக்கையில் அமைந்த சமயக் கிரியைகள் இன்றும் பின்பற்றப்படுகின்றன. கொடுங்கோலர்களின் கைகளிலும் குள்ள மதக்குருமார் கைகளிலும் மதம் கைப்பொம்மையாயிற்று.

கிழக்கில் ஆன்மீகம் நிலவவில்லை. மரபு வழிபாடே நிலவியது என்கிறார் ஆசிரியர். மேற்கு நாடுகளில் விஞ்ஞானம் கண்ட முன்னேற்றத்துடன் கிழக்கின் தேக்கத்தை ஆசிரியர் ஒப்பிடுகின்றார். மேற்கில் விஞ்ஞானம் சமயப் பிணைப்பில் இருந்து விடுபட்டுக் கொண்டது. அதனால் சமூக பொருளாதாரத் துறையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சமூகத்தில் விஞ்ஞானத்தின் பாதிப்பையும் கிழக்கில் இது இல்லாதிருப்பதையும் ஒப்பிட்டுக் காட்டிய ஆசிரியர் முக்கிய விஷயம்ஒன்றிற்கு வருகிறார் விஞ்ஞான அடிப்படையில் மாத்திரம் அமைந்த சமூகம் உய்யுமா? அல்லது மீட்சி பெறுமல் அழிந்துவிடுமா என்ற கேள்வியை அவர் எழுப்புகின்றார் விஞ்ஞான உலகம் நீடிக்காது என்று பேர்ட்டன் ரஸல் கூறியதை ஆசிரியர் ஆதாரம் காட்டுகின்றார். விஞ்ஞானம் இல்லாத சமயம் குருட்டுத் தன்மை வாய்ந்தது என்றும் சமயம் இல்லாத விஞ்ஞானம் முடத்திற்குச் சமமானது என்றும் அல்பர்ட் ஐன்ஸ்ரைன் கூறியதையும் ஆசிரியர் குறிப்பிடுகிறார். ஆயினும் ஆசிரியர் தற்காலச் சிந்தனை வளர்ச்சிக்கு ஏற்ப இணக்கம் காணக்கூடிய விதத்தில் தமது கருத்தைத் தெரிவிக்கின்றார். அண்மைக் காலத்தில் ஏற்பட்டுள்ள விஞ்ஞான முன்னேற்றத்திற்கு ஏற்ப மத ஸ்தாபனங்கள் நடத்துகொள்ளவேண்டுமென்று அவர் கேட்கிறார். சமய போதனைகளுக்கும் நடைமுறைக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை அவர் விளக்குகின்றார் சமய ஆசிரியர்களை அவர் தாக்கவில்லை. சமயஸ்தாபனங்களையே அவர் கண்டிக்கிறார்.

சமய வரலாற்றை அறிந்தவர்க்கு இந்த ஆசிரியர் கூறுவது ஒன்றும் புதுமை இல்லை. ஆயினும் விஞ்ஞானத்திற்கும் மதத்திற்கும் உள்ள தொடர்பை ஆசிரியர் தெளிவாக விளக்கியுள்ளார். சமூக பொருளாதார அமைப்பில் மதத்தை அறிந்து கொள்ள இந்த நூல் உதவுகின்றது.

மோட்டார் உதிரிப் பாகங்களா !

தொடர்பு கொள்ளுங்கள்

# ANANDA TRADE AGENCIES

MOTOR SPARES DEALERS
&
IMPORTERS

**472, Skinners Road South**
**COLOMBO - 10**

**Phone : 23330.**


வாழ்க்கை என்னும் விளையாட்டு
ரேஸ் புலியின் அனுபவம்
அவ்வளவு காசும் வீண்
வீணா? ரேஸ் இன்னும் முடியவில்லையே. ரொம்ப நாளைக்கப்புறம் நல்ல டிப் கிடைத்தது!
SPORTS NEWS
நல்ல டிப் என்று காசைக் கொட்டுவதா?
உமக்கு ஒன்றும் தெரியாது. சே! இன்னும் காசு இருந்தால-----
ஆனாலும் உம்மைவிட எனக்குத் தான் வாய்ப்பு அதிகம்
ஆனால் எப்பொழுதும் யாராவது சுவீப் பரிசு பெறுகிறார்கள். நானும் பெறலாம்
இதை நம்பி நான் இருக்கவில்லை. அதிர்ஷ்டம் இருந்தால் ஏன் தவற விட வேணும்?
அப்போ நானும் ஒன்றை எடுப்போம். -/50 சதம் தானே!
தொலைந்தேன்! ஒரு குதிரை தான் முன்னுக்கு வந்திருக்கு.
எனக்கும் தோல்விதான். ஆனால் நட்டமில்லை... அடே! உன் டிக்கெட்டுக்கு மூன்றும் பரிசு கிடைத்திருக்கிறதே!
SPORTS NEWS
மறு நாள்
மூன்றாம் பரிசா! எனக்கா? சும்மா! சற்று முன்னம் எவ்வளவு பதறினேன்.
வாழ்க்கை இது தான். சகடக் கால் போல. உனக்கு என் வாழ்த்துகள். என் சாப்பாடு இன்று உன் கணக்கில்
NATIONAL LOTTERIES
தேசீய லொத்தர் சபை

வழமையான வங்கிச் சேவைகளிலும் மேலான
பரந்த தேசியச் சேவையை
மக்கள் வங்கி வழங்குகிறது — இது
மக்களின் நம்பிக்கை...

அது உண்மையே.

— இளம் வயதினருக்கான விசேட சேமிப்புத் திட்டம்.
— நாடு முழுவதிலும் நகை அடைவு பிடிக்கும் திட்டம்.
— முதலீட்டுச் சேமிப்புத் திட்டத்தின் கீழ் நீண்டகால வீட்டுக் கடன் வழங்கும் திட்டம்.

ஆகிய சேவைகளை மக்கள் வங்கியின் மூலம் மட்டுமே
நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

மக்கள் வங்கி • PEOPLE'S BANK

மக்கள் வங்கி —
இலங்கை அடங்கிலும் ஆகக் கூடுதலான கிளைகளை
உடையது.
உலகம் முழுவதும் பிரதிநிதித்துவம்
கொண்டது.

''பூரணி''யினருக்காக, பிரதான வீதியிலுள்ள வஸ்தியன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.